# குர்ஆனின் குரல்

جمادى الأولى -
جمادى الآخرة - ١٤٤٥

டிசம்பர் - 2023

₹25/-



இஸ்திக்லால் பள்ளிவாசல் - ஜகார்த்தா

# 999® BRAND

இது வெறும் நம்பரல்ல,
நம்பிக்கை!

OUR PRODUCTS



**K.A.S. ZAINULABDIN & Co.**

New No. 196, Angappan Street, Chennai - 600 001.

www.999lungies.com | Toll Free No. 1800 890 6784 | 893 999 7475

KOLKATA • MUMBAI • DELHI • GUDIYATTAM • ERODE • MADURAI • NAGORE

Scan to shop your favourite Lungies

# மரண சாசனம்

كُتِبَ عَلَيْكُمْ إِذَا حَضَرَ أَحَدَكُمُ الْمَوْتُ إِنْ تَرَكَ
خَيْرًا ۖ الْوَصِيَّةُ لِلْوَالِدَيْنِ وَالْأَقْرَبِينَ
بِالْمَعْرُوفِ ۖ حَقًّا عَلَى الْمُتَّقِينَ ﴿١٨٠﴾

“உங்களில் ஒருவருக்கு மரணம் நெருங்கினால், பொருளை அவர் விட்டுச் செல்பவராக இருப்பின் (கும்) பெற்றோருக்கும், உறவினர் களுக்கும் நீதத்துடன் மரண சாஸனம் செய்தல் உங்களின் மீது விதியாக்கப்பட்டுள்ளது; (இது) பயபக்தியாளர்களின் மீது கடமையாகும்.

– அல்குர்ஆன் (2 : 180)

---

ஒருவர் மரண தருவாயில் தன் சொத்துகளை யார் யாருக்கென சொல்லிச் செல்ல வேண்டும் என்ற சட்டம் இருந்தது. அதையே மேற்கூறப்பட்ட வசனம் உணர்த்துகிறது. ஆனால் வாரிசுரிமை சட்டம் இறங்கிய பிறகு மேற்கூறப்பட்ட சட்டம் மாற்றப்பட்டு விட்டது என்றாலும் சொத்தில் பங்கில்லாதவருக்கு அல்லது பொது ஸ்தாபனங்களுக்கு, நற்பணிகளுக்கு, மரணிப்பவர் தன் சொத்தில் மூன்றில் ஒரு பகுதியை வஸிய்யத் எனும் மரண சாசனத்தின் மூலம் தருவதாக வாக்களிக்கலாம்.

ஆனால் சொத்தில் பங்குள்ளவருக்கே திரும்பவும் வஸிய்யத் செய்யக்கூடாது. அதன் மூலம் மற்ற பங்காளிகள் பாதிக்கப்படுவார்கள். ஏனெனில் வஸிய்யத்தின் மூலம் ஒரு பகுதியும், பங்கின் பிரகாரம் ஒரு பகுதியும் ஒரே நபருக்கு கிடைக்கும்போது பங்காளிகள் பகை உண்டாகிவிடும்.

சொத்துக்கள் அனைத்தையும் அல்லாஹ்வின் பாதையில் கொண்டு வந்து கொடுத்த நபித்தோழரை நபியவர்கள் கண்டித்தார்கள். என்ன உமது பிள்ளைகளையும், குடும்பத்தையும் பிறரிடம் தேவையாகும்படி செய்ய நாடுகிறீர்களா? எனக் கேட்டார்கள்.

இறப்பிற்கு முன்பே பங்காளிகள் அனைவர் முன்னிலையில் மனமொப்பி தந்தை பிரித்துக் கொடுக்கும்போது பிள்ளைகளின் தராதரம், கவனிப்பு, குடும்ப அக்கறை, உழைப்பு, சம்பாதித்து தந்தையிடம் தந்தது போன்றவற்றை கருத்தில் கொண்டு பங்கு பிரித்து கொடுப்பது மரணத்திற்குப் பிறகு சொத்திற்காக சொந்தங்கள் பகையாவதை விட சாலச் சிறந்தது.

மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட். பரகத் அலீ பாஜில் பாகவி

# முஃமினின் சிறப்பும், கண்ணியமும்!

عَنْ سَهْلِ بْنِ سَعْدٍ قَالَ: جَاءَ جِبْرَئِيلُ إِلَي النَّبِيِّ فَقَالَ: يَا مُحَمَّدُ: عِشْ مَا شِئْتَ فَإِنَّكَ مَيِّتٌ، وَاعْمَلْ مَا شِئْتَ فَإِنَّكَ مَجْزِيٌّ بِهِ، وَأَحْبِبْ مَنْ شِئْتَ فَإِنَّكَ مُفَارِقُهُ، وَاعْلَمْ أَنَّ شَرَفَ الْمُؤْمِنِ قِيَامُ اللَّيْلِ وَعِزَّهُ اسْتِغْنَاءُهُ عَنِ النَّاسِ. رواه الطبراني

ஹள்ரத் ஸஹ்லுப்னு ஸஃது (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள் :

“ஹள்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, முஹம்மத் (ஸல்) அவர்களே ! நீங்கள் எவ்வளவு நாள் வாழ்ந்தாலும் ஒரு நாள் உங்களுக்கு மரணம் வந்தே தீரும், நீங்கள் என்ன செயல் செய்தாலும் அதன் பலன் தங்களுக்கு கிடைத்தே தீரும், நீங்கள் யாரை நேசித்தாலும் கடைசியில் ஒரு நாள் அவரைப் பிரிய நேரிடும், அறிந்து கொள்ளுங்கள், முஃமினின் சிறப்பு தஹஜ்ஜத் தொழுகையில் உள்ளது, முஃமினின் கண்ணியம் மக்களிடம் தேவையற்று இருப்பதில் உள்ளது என்று கூறிச் சென்றார்கள்.” (நூல் : தப்ரானீ)

---

மார்க்கத்தை திரும்பத் திரும்ப நினைவுபடுத்தும்
குர்ஆனின் குரலே வாழ்க! வாழ்கவே!!

செய்யது சகோதரர்கள்
நாகூர்.

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ
அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# குர்ஆனின் குரல்

66-வது ஆண்டு

குரல் : 66 ஜமாதுல் அவ்வல் – ஜமாதுல் ஆகிர் – 1445
எதிரொலி – 12 டிசம்பர் – 2023

## அழிவை நோக்கி சாத்தான்....!

உலகிலேயே அதிக சக்தி வாய்ந்த இராணுவங்களில் இஸ்ரேல் இராணுவமும் ஒன்று! இஸ்ரேலிடம் 90 முதல் 100 அணுகுண்டுகள் இருக்கின்றன. அதன் மொத்த இராணுவ வீரர்கள் 6 இலட்சத்து 41 ஆயிரம்; டாங்கிகளின் எண்ணிக்கை 2,200; பீரங்கிகளின் எண்ணிக்கை 69; விமானப்படை வீரர்களின் எண்ணிக்கை 89 ஆயிரம்; மொத்த போர் விமானங்களின் எண்ணிக்கை 601; ஹெலிகாப்டர்களின் எண்ணிக்கை 130; ஆளில்லா விமானங்களின் எண்ணிக்கை 1,000; கப்பற்படை வீரர்களின் எண்ணிக்கை 20 ஆயிரம்; போர் கப்பல்கள் 67; நீர் மூழ்கிக் கப்பல்களின் எண்ணிக்கை ஐந்து; உலகிலேயே மிகத் திறமையான உளவு நிறுவனங்களில் இஸ்ரேலின் மொசாத் உளவு நிறுவனமும் ஒன்று! மாபெரும் வல்லமை மிக்க இஸ்ரேல் இராணுவத்துடன் பலஸ்தீன் ஹமாஸ் போராளிகளை ஒப்பிட்டு பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்! பெரும்பலம் கொண்ட ஒரு இராணுவத்தை ஹமாஸ் போராளிகள் கடந்த இரண்டு மாதங்களாக எதிர்கொண்டு போரிட்டு வருவது இராணுவ ஆய்வாளர்களை ஆச்சரியத்தில் மூழ்கடிக்கச் செய்துள்ளது.

இஸ்ரேல் இராணுவத்தின் முன்னாள் தளபதி கூறுகிறார் :– “இஸ்ரேலில் என்ன நடக்கிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இஸ்ரேலின் தயாரிப்பான மெர்காவா டேங்க்- இரும்பு மலை என்று பாராட்டுதலுக்குரியது. உலகிலேயே மிக சக்தி வாய்ந்த டேங்க் என்று அனைவராலும் பாராட்டப்படும் ஒரு டேங்கின் விலை இந்திய ரூபாய் மதிப்பில் சுமார் 1000 கோடி ரூபாய் மதிப்புடையது. இந்த சக்தி வாய்ந்த டேங்கை ஹமாஸ் படையினர் ஒரு இலட்ச ரூபாய் விலை பெறுமான ஒரு ராக்கெட்டை கொண்டு எப்படி உடைத்தெறிய முடியும்? இரும்புக் கோட்டையை ஒரு சாதாரண ராக்கெட் எவ்வாறு அழிக்க முடியும்? ஒரு டன் எடையுள்ள வெடிகுண்டை போட்டால் பூமி எப்படி அதிருமோ அப்படி அதிர்ந்து டேங்க் வெடித்துச் சிதறுகிறது. இதை நான் என் கண்

களால் பார்த்தேன். என்னால் இதை நம்ப முடியவில்லை. இவர்களோடு சேர்ந்து போரிடுவது யார்? கண்ணுக்குத் தெரியாத மறைந்திருக்கும் பேய்கள் இவர்களோடு சேர்ந்து போரிடுகிறதா? அக்டோபர் மாத துவக்கத்திலிருந்து அவர்களோடு சேர்ந்து ஒரு மறைவான படை நம்முடன் போரிட்டுக் கொண்டிருக்கிறது. பலஸ்தீனர்கள் எங்களை நோக்கி எறிந்த ஒரு குண்டு கூட குறி தவறவில்லை. அவர்கள் எறிந்த அத்தனை குண்டுகளும் எங்களை பாதித்தன. எங்களை அழித்தன. துரதிர்ஷ்டவசமாக இஸ்ரேலின் அழிவு நாள் நெருங்கி விட்டது" என எண்ணுகிறேன்.

ஹமாஸ் போராளிகள், இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியதை உலகின் பல நாடுகள் கண்டித்துள்ளன. முதலில் சண்டையைத் தொடங்கியவர்கள் ஹமாஸ் போராளிகள் தானே எனக் குற்றம் சாட்டுகின்றனர். இது வேடிக்கையானது. இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களுக்கும், ஹமாஸ் போராளிகளுக்குமிடையே தொடர்ந்து மோதல்கள் நடந்தே வருகின்றன. பலஸ்தீன மக்கள் வாழ்கின்ற மிகக் குறுகிய நிலப்பரப்பான காஸா மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தியே வருகிறது. காஸாவிலும், மேற்குக்கரையிலும் வசித்து வரும் பலஸ்தீன் மக்களை நிம்மதியாக வாழ விடாமல் தொடர்ந்து இஸ்ரேல் போர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்தப் பகுதிகளில் யூத குடியிருப்புகளை உருவாக்குகிறது. எதிர்க்கின்ற பலஸ்தீன மக்களைக் கொன்று குவிக்கிறது. அவர்களது இல்லங்களை புல்டோசர் கொண்டு தரைமட்டமாக்குகிறது. எனவே, இதில் யார் முதலில் தாக்கினர், யார் அடுத்து தாக்கினர் என்ற கேள்விக்கே இடமில்லை. இது தொடர்ந்து நடைபெற்று வரும் தாக்குதல்களின் தொடர்ச்சியே.

தான் உருவாக்கிய இஸ்ரேலைப் பாதுகாப்பதில் அமெரிக்கா பெரிதும் முனைப்புக் காட்டி வருகிறது. அதற்கு ஆயுதங்களை வழங்குகிறது. அதன் அக்கிரமங்களை அமெரிக்கா கண்டு கொள்வதில்லை. இஸ்ரேலின் ஆக்கிரமிப்புகளைக் கண்டித்து ஐ.நா. சபையில் தீர்மானம் வரும் போதெல்லாம் அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனை ரத்து செய்கிறது. இஸ்ரேலைப் பாதுகாப்பதைத் தனது வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய அம்சமாக அமெரிக்கா கருதுகிறது. எனவே பலஸ்தீன மக்கள் இஸ்ரேலை எதிர்த்துப் போராடுகிறார்கள் என்று கூறுவதை விட உலக வல்லரசான அமெரிக்காவை எதிர்த்துப் போராடுகிறார்கள் என்று கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

இஸ்ரேல் - பலஸ்தீன பிரச்சனையில் உலக ஊடகங்கள் பொய்ச் செய்திகளை எந்தவிதமான கூச்சமுமின்றி வெளியிடுகின்றன. பலஸ்தீன மக்களுக்காகப் போராடும் ஹமாஸையும், அந்த நாட்டு மக்களையும் பிரித்துக் காட்டுகின்றன. இஸ்ரேலை எதிர்த்துப் போராடும் ஹமாஸ் அமைப்புதான் காஸா பகுதியை ஆட்சி செய்து வருகிறது. எனவே, இஸ்ரேல் மீது பலஸ்தீன் தாக்குதல் என்று கூறுவதுதான் உண்மையான நிலையாகும்.

ஹமாஸ் போராளிகள் இஸ்ரேலின் மீது தாக்குதல் நடத்திய உடனே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அதனைக் கண்டித்து அறிக்கை வெளியிடுகிறார். ஆனால் அதே நேரத்தில், ஒரு சுயாட்சி பெற்ற நாடான உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து ஒன்றரை ஆண்டுகளாக போர் நடைபெற்று வருகிறது. அதனைக் கண்டித்து இந்தியப் பிரதமர் இதுவரை ஒரு வார்த்தை கூடக் கூறவில்லை.

ஹமாஸ் போராளிகளை பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என இந்திய ஊடகங்கள் பேசுகின்றன.

பலஸ்தீன மக்கள் ஆக்கிரமிப்பாளர்கள் அல்ல. தங்களது தாய்நாட்டை மீட்கின்ற பெரும் போராட்டத்தில் அவர்கள் கடந்த 80 ஆண்டுகளுக்கும் மேலாக ஈடுபட்டு வருகின்றனர். ஹமாஸ் தடை செய்யப்பட்ட அமைப்பு அல்ல. அந்த ஹமாஸ்தான் காஸாவின் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறது. அந்த இயக்கத்தை உலகின் பல நாடுகள் அங்கீகரித்துள்ளன. இந்தியாவில் அந்த அமைப்பு தடை செய்யப்படவில்லை. எனவே, தாயகத்தை மீட்கும் உரிமைப் போரில் ஈடுபட்டுள்ள ஹமாஸ் அமைப்பினரை பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என்று வர்ணிப்பது எந்த வகையில் நியாயமாகும்?

ஹமாஸ் போராளிகள் தொடுத்த தாக்குதலில் இஸ்ரேலில் இதுவரை 2,250 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலஸ்தீனின் காஸாவிலிருந்து தொடர்ந்து சிறிய ராக்கெட்டுகள் இஸ்ரேல் மீது வீசப்பட்டன. இந்த முறை அவர்கள் இஸ்ரேலுக்குள் புகுந்து, இஸ்ரேலின் எல்லைக்குள் இருந்து இராணுவ டேங்குகளை அழித்திருக்கிறார்கள். இராணுவத்தின் உயர் அதிகாரிகள் பலரை பணயக்கைதிகளாகப் பிடித்துச் சென்றிருக்கிறார்கள்.

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு ‘போர் ஆரம்பித்துவிட்டது’ என்று தெரிவித்தார். அவரது அறிக்கைக்காகக் காத்திருந்தது போல் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், இந்தியப் பிரதமர் உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட தலைவர்களின் அறிக்கைகள் வேக வேகமாக வந்தன.

அனைத்து அறிக்கைகளுமே ஒரே பாணியில் உள்ளன. 'நாங்கள் இஸ்ரேலுடன் இருக்கிறோம்' என்கிற ஒற்றை வரிச் செய்திதான் அது.

ஹமாஸ் தரப்பு தாக்குதல் நடத்தினால் அது தீவிரவாதத் தாக்குதல். ஆனால், இதே தாக்குதலை ஆண்டு முழுவதும் இஸ்ரேல் நடத்தினால் அதற்குப் பெயர் திடீர் சோதனை! உலகின் மிகப் பெரிய சர்வதேச ஊடகங்கள் தொடர்ந்து இந்த வார்த்தை விளையாட்டையே செய்து வருகின்றன. இப்படி வார்த்தை விளையாட்டுகளை வைத்து மக்களை மூளைச் சலவை செய்திடலாம் என்பது அவர்களின் நம்பிக்கை.

2008க்கு பின்பு இஸ்ரேல் நடத்திய கோரத் தாக்குதல்களில் 1,50,000 பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதில் 33,000 குழந்தைகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவற்றைக் குறித்து சர்வதேச ஊடகங்களோ, இன்று பரபரப்பாக அறிக்கைகள் விடும் பல தேசங்களின் தலைவர்களோ என்றாவது பேசியிருக்கிறார்களா? 33,000 குழந்தைகள் கொல்லப்படும்போது துடிக்காத உங்கள் நெஞ்சம், அறிக்கைகள் விடாத உங்கள் வார்த்தைகள் வெற்றுக் குப்பைகள்தானே! எத்தனை பலஸ்தீனர்களை இஸ்ரேல் கொன்றுள்ளது?

பலஸ்தீனர்கள் நிகழ்த்திய இத்தனை பெரும் தாக்குதல் எப்படி இஸ்ரேலின் உளவுப் பிரிவுக்குத் தெரியாமல் இருந்திருக்கும்? உலகின் ஆகப் பெரிய உளவு அமைப்பை வைத்திருப்பதாக மார்தட்டிக் கொள்ளும் இஸ்ரேல் எப்படி இத்தனை பெரும் தாக்குதலை அறிந்திருக்கவில்லை?

இஸ்ரேலை ஆட்சி செய்து வரும் தீவிர வலதுசாரிகள் எல்லா நிலைகளிலும் பெரும் தோல்வியைத் தழுவி நிற்கிறார்கள். மக்கள் மத்தியில் அவர்கள் மீது கடும் எதிர்ப்பு கனன்று கிடக்கிறது. அவர்கள் எல்லா அரசு கட்டுமானங்களையும் தங்களுடையதாக மாற்ற தீவிர வேலை செய்து வருகிறார்கள். நாடாளுமன்றத்தில் புதிய சட்டங்களை இயற்றி நீதித்துறையை முடக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். இப்படி அவர்கள் அங்குள்ள அரசு என்கிற நிறுவனத்தைப் பலவீனப்படுத்துவது மக்கள் மத்தியில் பெரும் கோபமாக உருமாற்றம் பெற்றுள்ளது. அங்கே கொண்டு வரப்பட்ட நீதித்துறை சீர்த்திருத்தங்களைக் கண்டித்து நாடு முழுவதும் கடுமையான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக இந்தப் போராட்டங்களில் இஸ்ரேலின் இராணுவ வீரர்களே பங்கேற்றனர்.

இப்படி இஸ்ரேலில் குழப்பமாக இருக்கும் ஒரு நேரத்தில் எப்படி இந்தத் தாக்குதல்கள் நிகழ்ந்தன எனப் பெரும் கேள்விகளை எழுப்பியுள்ளது. இஸ்ரேல் உளவுப் பிரிவுக்குத்

தகவல்கள் கிடைத்தும் அவர்கள் அலட்சியமாக "இப்படி ஒன்று நிகழட்டும். அப்படி நிகழ்ந்தால் தான் நாட்டிற்குப் பெரும் ஆபத்து, போர் தொடங்கிவிட்டது என்று இஸ்ரேலின் ஜனநாயகத்தின் குரல்களை ஒடுக்க ஒரு சந்தர்ப்பமாக இது அமையும்" என்று நினைத்திருப்பார்களோ?

பலஸ்தீன மக்கள் மீது மிகக் கொடூரமான படுகொலையை அரங்கேற்றி வருகிற இஸ்ரேல், சற்றும் ஈவிரக்கமின்றி காஸாவில் நோயாளிகள் நிரம்பியிருந்த அல்அஹ்லி அரபு மருத்துவமனை மீது தாக்குதலை நடத்தியுள்ளது. எவ்வித போர் நடைமுறைகளையும் பின்பற்றாமல், வெறிபிடித்து ஒட்டு மொத்த காஸா மக்களையும் கொன்று குவிக்கத் துணிந்திருக்கிறது இஸ்ரேல்.

இஸ்ரேல் தாக்குதலில் அதிகளவில் குழந்தைகளும், பெண்களும் கொன்று குவிக்கப்பட்டிருக்கின்றனர். காஸாவின் கட்டமைப்புகள் அனைத்தும் திட்டமிட்டு தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. அகதிகள் முகாம் மீது குறிவைத்து இஸ்ரேல் குண்டு வீசுகிறது.

காஸா நகரத்தில் 15 இலட்சம் மக்கள் புலம் பெயர்ந்துள்ளனர். 50 சதவீத வீடுகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுள்ளன. பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஒவ்வொரு நிமிடமும் மரண எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது.

பலஸ்தீனத்திற்கு ஆதரவாகவும், இஸ்ரேல் - அமெரிக்காவிற்கு எதிராகவும் உலகம் முழுவதும் போராட்டம் நடந்து வருகிறது.

இந்தக் கொடூரச் செயலை புரியும் இஸ்ரேலுக்கு ஆதரவாக இஸ்ரேல் தலைநகர் டெல்அவிலுக்கு வந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இஸ்ரேலுக்கு அனைத்து உதவிகளையும் செய்வதாக உறுதியளித்திருப்பது அமெரிக்காவின் கொடூர முகத்தை அம்பலப்படுத்துகிறது. இஸ்ரேலுக்கு ஒன்றிய மோடி அரசும் துணை நிற்கிறது. இந்தியா இதுவரை பலஸ்தீனம் - இஸ்ரேல் விவகாரத்தில் பலஸ்தீன விடுதலைக்கே தனது ஆதரவையும், ஒருமைப்பாட்டையும் தெரிவித்து வந்திருக்கிறது. ஆனால் பாசிஸத் தன்மை கொண்ட மோடி அரசு, மனிதத் தன்மையற்ற இஸ்ரேல் அரசுக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறது. இது ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் உலக அரங்கில் தலைகுனிவையே ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், பிரிட்டன் அதிபர்கள் இஸ்ரேலுக்கு சென்று தங்கள் ஆதரவை இஸ்ரேலுக்கு

தெரிவித்துள்ளனர். உலகில் 57 முஸ்லிம் நாடுகள் உள்ளன. பணம் கொழுத்த அரபு நாடுகள் உள்ளன. இவை என்ன செய்து கொண்டிருக்கின்றன?

பல அரபு நாடுகள் அமெரிக்காவுடன் இராணுவ ஒப்பந்தம் செய்துள்ளன. மற்றும் சில அரபு நாடுகள் தம் பாதுகாப்பை அமெரிக்காவிடம் ஒப்படைத்துள்ளன. பல அரபு நாடுகளில் அமெரிக்க இராணுவத் தளங்கள் உள்ளன. அதி பயங்கரமான அமெரிக்க போர் விமானங்கள் அரபு விண்ணிலே வட்டமிட்டு பறந்து கொண்டிருக்கின்றன. அரபு பாலைவனத்தின் மத்தியில் அமெரிக்கப் போர் வீரர்கள் வாழும் உல்லாச சோலைவனங்கள் உள்ளன. அமெரிக்கா வழங்கும் பாதுகாப்புக்கு பகரமாக பில்லியன் கணக்கான டாலர்களை அமெரிக்க கல்லாப் பெட்டியில் கொட்டிக் கொண்டிருக்கின்றன. இது செல்வம் கொழிக்கும் அரபு நாடுகளின் நிலை. ஏழை அரபு நாடுகளின் நிலை அதற்கு நேர்மாறானது. அமெரிக்காவிடமிருந்து பில்லியன் கணக்கான டாலர்களை மானியமாக பெற்றுக் கொண்டு தங்கள் நாட்டை நடத்திக் கொண்டிருக்கின்றன. பணம் கொடுப்பவர்களும் பணம் வாங்குபவர்களும், தங்கள் எஜமானர்களை எதிர்த்துப் போரிடுவது எதிர்பார்க்க முடியாத செயலாகும். அமெரிக்கர்களும், இஸ்ரேலியர்களும் அரபு உலகின் அகராதியை அலசிக் குடித்தவர்கள். இந்தப் பின்னணியில்தான் இன்றைய அரபு உலகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஹமாஸ் போராளிகளின் தளபதிகளில் ஒருவர் கூறுகிறார் : – "இந்தப் போரின் முடிவில் பலவகைப்பட்ட மரணங்களை எதிரிகளுக்கு தருவதற்கும், வீரம் என்றால் என்ன? தியாகம் என்றால் என்ன? என்று உலகத்திற்கும், எதிரிகளுக்கும் எடுத்துக் காட்டுகிற வகையில் தான் இதனை நாங்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.

எதிரிகள் எதிர்பார்க்கும் தோல்வியை விட மிகப் பெரிய அளவிலான தோல்வியை அல்லாஹ்வின் உதவியோடு நாங்கள் அனைவரும் அவர்களுக்கு கொடுப்போம்.

யூதர்களை யாரும் வெல்ல முடியாது என்ற கற்பனையை தான் இதுவரை இந்த உலகிற்கு அவர்கள் விற்பனை செய்து கொண்டு வந்தார்கள். இந்த மாய பிம்பத்தை நாங்கள் முழுமையாக தகர்த்தெறிந்து விட்டோம்.

நாங்கள் அவர்களின் கற்பனையை காஸாவிற்கும், காஸாவின் எல்லைக்கு வெளியேயும் கிழித்தெறிந்து விட்டோம். அவர்களை யாரும் வெல்ல முடியாது என்கிற மாயையை தான்

இதுவரை உருவாக்கி இருந்தார்கள். அவர்கள் ஆட்டம் முடிந்து விட்டது. யூதர்களின் ஆட்டம் அழிவை நோக்கி புறப்பட்டு விட்டது."

இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய மக்கள் தங்களது அரசுகளின் சாகஸக் கதைகளிலிருந்து வெளியேறி வருகிறார்கள். நீண்ட காலப் போரும், வன்முறையும் அவர்களை கடுமையாக அதிருப்தியடையச் செய்துள்ளன.

இஸ்ரேலிய மக்கள் தங்கள் அரசு மீது கடும் அதிருப்தியடைகிறார்கள். ஹமாஸ் அவர்களைத் தாக்கியபோது, காயம்பட்டவர்களுக்கு ஆறுதல் சொல்ல மருத்துவமனை வந்த இஸ்ரேலிய மந்திரியை, "இதெல்லாம் உங்களால் வந்தது. திரும்பிச் செல்லுங்கள்" என்று சொல்லுமளவுக்கு கோபமடைந்துள்ளார்கள். நீண்ட காலப் போர் பலஸ்தீன மக்களை மட்டுமல்ல. இஸ்ரேலியர்களையும் சோர்வடைய வைத்திருக்கிறது.

அமெரிக்காவில் அரசுக்கு எதிராகவும், பலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும் அதிக அளவிலான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகிறார்கள். ஐரோப்பாவிலும் இதுதான் நிலைமை.

உலகத்தின் சுபாவம் சலிப்புடனும், கசப்புடனும் இந்தப் போர் வன்முறையிலிருந்து வெளியேறுகையில் இந்தியா இப்போதுதான் மோடியின் தலைமையில் வயசுக்கு வருகிறது. போர்! ஆமாம்! பயங்கரவாதிகளுக்கு எதிரான போர் என்று கூவுகிறது! கொடூரம்.

பலஸ்தீனத்தின் பக்கம் உலக நாடுகள் உறுதியாக நிற்க வேண்டும். குறிப்பாக முஸ்லிம் நாடுகள் கைகோர்த்து பலஸ்தீனத்தின் பக்கம் நின்று இஸ்ரேலுக்கு எதிராக களமாட வேண்டும். தம் சொந்த மண்ணிற்காகவும், தம் மக்களுக்காகவும் போராடும் பலஸ்தீன போராளிகளை பயங்கரவாதிகளாகச் சித்தரித்தும், இஸ்ரேலின் பயங்கரவாதச் செயல்களை நியாயப்படுத்தியும் வரும் உலக ஊடகங்கள், குறிப்பாக இந்திய ஊடகங்கள் தங்களை திருத்திக் கொள்ள வேண்டும்.

அடுத்தவன் நாட்டை ஆட்டையப் போட்டவன் ஜனநாயகவாதி...!

இது என் நாடு! வெளியே போன்னு சண்ட போடறவன் பயங்கரவாதி...!

உங்கள் பத்திரிகா தர்மம் பயங்கரமா இருக்கேடா...!

Since 1977-2023
46
Years
Customer Service

ஆடைகளால் ஆனந்தம்

மஹாராஜா

சில்க் ஹவுஸ் - ரெடிமேட்ஸ்

தஞ்சாவூர்

# பதில்கள்

மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி அல்ஹாஜ் முஃப்தீ
**மு. முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

☞ நான் வேலை செய்யும் இடத்தில் ஒளூ செய்யும் பொழுது எனது ஷூ மற்றும் சாக்ஸ்களை கழற்ற முடியாத சூழ்நிலை. அதனால் நான் ஷூவின் மேல், மேல்புறமாக 3 தடவைகள் தண்ணீர் கொண்டு கழுவி விட்டு ஷூ அணிந்த கால்களுடனேயே தொழுது கொள்கிறேன். இது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதா? அல்லது சாக்ஸ் மீதுதான் மஸ்ஹு செய்ய வேண்டுமா? மேலும் அங்கு என்னால் முழுமையாக ஸஜ்தா செய்ய முடியாத சூழ்நிலை என்பதால் ருகூஉ மட்டும் செய்து விட்டு நாற்காலியில் உட்கார்ந்து சைகினையாக ஸஜ்தா செய்து தொழுது கொள்கிறேன். இது ளுஹர் தொழுகைக்கு மட்டும் தான். மற்ற வக்துகளில் எல்லாம் தொழுவதற்கு முழு வசதிகள் இருப்பதால் தொழுகையை முழு அமைப்போடு தொழுது முடிக்கிறேன். இது சம்பந்தமான விளக்கங்களை வேண்டுகிறேன்.

**சென்னையிலிருந்து**
**அப்துர் ரஹ்மான்**

✍ ஷூவின் மீது தண்ணீர் ஊற்றுவதாலோ அல்லது சாக்ஸின் மீது மஸ்ஹு செய்வதாலோ ஒளூ என்பது பரிபூரணமாகாது. எனவே, கண்டிப்பாக ஷூவையும், சாக்ஸையும் கழற்றி விட்டு, கால்களை நூலளவும் கூட விடாமல் கழுவுவது அவசியமாகும். கடுமையான குளிரின் காரணமாக தோலினால் செய்யப்பட்ட காலுறைகளை யாராவது அணிவார்களானால், அவர்கள் மட்டும் முழுமையாக ஒரு பகல் ஒரு இரவு வரையிலும் அல்லது பயணத்திலிருக்கும் நிலையில் அதை அணிந்திருப்பவர்கள் மூன்று பகல் - மூன்று இரவு வரையிலும் அந்த காலுறைகளின் மீது அதற்குரிய **சட்டங்களை பேணுவதுடன்** மஸ்ஹு செய்து கொள்வது கூடும். பொதுவாக,

காலையே கழுவி விட்டாலும் அசுத்தமில்லாத ஷூவை அணிந்து கொண்டு தொழுவதும் மக்ரூஹாகும். சுத்தமான சாக்ஸ் அணிந்து கொண்டு தொழுவது தவறல்ல.

அடுத்து முடிந்தவரை தொடர்ந்து ஓர் இடத்தில் வேலை செய்யும் பொழுது கண்டிப்பாக அங்கு நமது துன்யாவுக்கு முன்பாக தீனை முற்படுத்தும் பொழுது அல்லாஹ் அதில் பரக்கத் செய்கிறான். எனவே, முழுமையான முறையில் ஸஜ்தா செய்து தொழுமளவிற்கு முடிந்தால் ஜமாஅத் தொழுகையில் கலந்து கொள்ளுமளவிற்கு ஒரு நல்ல இடத்தை தேர்வு செய்து கொள்வது மிக மிக அவசியமாகும். மேலும், காலை கழுவ முடியவில்லையெனில், காலை அலுவலகத்தில் நுழைவதற்கு முன்பு ஒளு செய்து ளுஹர் வரை அந்த ஒளுவில் இருந்து கொள்வது சிறந்த மாற்று வழியாகும்.

☛ அலீஷா என்று பெண் பிள்ளைகளுக்கு பெயர் வைக்கலாமா? அதன் பொருள் என்ன?

**திருச்சியிலிருந்து**
**முஹம்மது அலீ**

✍ அலீ என்பது பெருமானார் (ஸல்) அவர்களுடைய மருமகனாராக விளங்கிய வீரமிக்க ஆண் சிங்கத்தின் பெயராகும். இதற்கு உயர்ந்தவர் என்று பொருள். ஷாஹ் என்பதற்கு அரசர் என்று பொருள். இவ்விரண்டு பெயர்களையும் இணைத்து ஒரு பெண்ணிற்கு வைப்பது அழகல்ல. ஏனெனில், ஒரு பெண்ணை அரசராக்க மார்க்கம் அனுமதிக்காது.

☛ பாங்கு சொல்லியாச்சு என்று நினைத்து சுன்னத் தொழுது கொண்டிருக்கும் பொழுது பாங்கு சொன்னால் அந்த தொழுகையை முறித்து விட வேண்டுமா? அல்லது தொடர வேண்டுமா? அல்லது மறுபடியும் சுன்னத் தொழுவது அவசியமா?

**விழுப்புரத்திலிருந்து**
**இம்ரான் கான்**

✍ வக்து வந்ததற்கு பின்பு, பாங்கு சொல்வதற்கு முன்பு சுன்னத் தொழுதால் அது அந்த நேரத் தொழுகையின் சுன்னத்தாகவே நிறைவேறிவிடும். மேலும், வக்து வருவதற்கு முன்பு தொழ ஆரம்பித்து, இரண்டாவது ரக்அத் முடிப்பதற்கு முன்பே வக்து வந்துவிட்டால் அந்த சுன்னத் தொழுகையும் நிறைவேறி விடும். தொழுது முடித்ததற்குப் பின்பு வக்து வந்தால் அந்த தொழுகையை மட்டும் மீண்டும் தொழவேண்டும். எந்த தொழுகையையும் பாங்கு சொல்கிறார்கள் என்ற காரணத்தினால் மட்டும் இடையில் முறிப்பது

கூடாது. தேவையற்றது. அது சுன்னத் இல்லையென்றால், நஃபிலாக நிறைவேறிவிடும்.

☛ நான் சில வருடங்களுக்கு முன்பு ஒரு இடத்தை வாங்கி அதில் 24 இலட்சம் ரூபாய்கள் செலவு செய்து இரண்டு அடுக்கு மாடி வீடு ஒன்றை கட்டினேன். அதில் 20 இலட்சம் எனது சொந்தப்பணம். 4 இலட்சம் ரூபாய் லோனாக பெறப்பட்டது. கட்டிட வேலைகள் முடிந்து விட்டன. இப்பொழுது என்னிடம் முதலாக உள்ள ரூ.24 இலட்சத்திற்கும் நான் ஜகாத் கொடுக்க வேண்டுமா?

**பூனாவிலிருந்து**
**மஜீத்**

✍ அந்த வீட்டை உங்களின் சொந்த பயன்பாட்டிற்காக வைத்துக் கொண்டால் ஜகாத் எதுவும் கடமையாகாது. வாடகைக்கு விட்டால் வரக்கூடிய வருமானத்திலிருந்து நீங்கள் கொடுக்க வேண்டிய ரூ.4 இலட்சம் கடனை கழிக்கும் வரை ஜகாத் எதுவும் கடமையாகாது. அந்த கடன் முடிந்துவிட்டால் பிறகு வருட வாடகையின் வரவு தேவைக்கு போக 612½ கிராம் வெள்ளி அளவுள்ள இன்றைய கிரயத்திற்கு சமமாக அல்லது அதைவிட கூடுதலாக மீதி இருந்தால் அதன் அளவுக்கு ஜகாத் கடமையாகும்.

☛ குர்ஆனின் குரலை, பள்ளி வாசலில் தஃலீமாக வாசித்து வரும் செய்தியறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன். நானும் சுமார் 13 வருடங்களாக தப்லீக் ஜமாஅத்தில் இணைந்து எங்கள் மஹல்லா பள்ளியில் அமல்களின் சிறப்பு, ஸதகாவின் சிறப்பு போன்ற கிதாபுகளுடன் சமீப காலமாக குர்ஆனின் குரலில் அந்தந்த கால கட்டங்களில் வெளிவரும் கட்டுரைகளையும் வாசித்து வந்தேன். இது பிடிக்காத சிலர் "இது துன்யாவுக்காக எழுதப்பட்ட பத்திரிகை. இதை வாசிக்கக் கூடாது" என்று சொல்லி தடுத்துவிட்டார்கள். மனம் வெறுத்துப் போன நான் தப்லீக் ஜமாஅத்திலிருந்தே முழுமையாக விலகிவிட்டேன். அவர்களின் எந்த நிகழ்ச்சியிலும் நான் கலந்து கொண்டதே யில்லை. நான் எடுத்த இந்த முடிவைப் பற்றி தங்களின் மேலான கருத்தை அறிய விரும்புகிறேன்.

**கோவையிலிருந்து**
**அப்துல் ஹமீது**

✍ மூட்டைப்பூச்சிக்கு பயந்து, வீட்டை பொசுக்கிக் கொண்ட கதையாகவல்லவா இருக்கிறது? யாரோ ஓரிருவர் விபரம் புரியாமல் அப்படி சொல்லிவிட்டார்கள் என்பதற்காக ஒரு நல்ல மார்க்க சேவையிலிருந்து உங்களை, நீங்களே விலக்கிக் கொண்டீர்களே! நமக்கு

தெரிந்த நான்கு விஷயங்களை மற்றவர்களுக்குச் சொல்லி, அவர்களையும் இந்த முழுமையான தீனின் பக்கம் சேர்த்து விட வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஓர் அமைப்பை முழுவதுமாக குறை சொல்வதும், ஒருவர் செய்த தவறுக்காக அந்த அமைப்பையே சாடுவதும் நல்லதாக ஆகாது. எல்லா அமைப்புகளிலும், கூட்டங்களிலும், இயக்கங்களிலும் எவ்வளவு பெரிய நல்ல விஷயங்கள் நடைபெற்றாலும் அங்கும் அறியாதவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். அவர்களின் காரணமாக ஏதாவது தவறுகள் ஏற்படத்தான் செய்யும். அந்த தனிப்பட்ட நபருக்காக முழு அமைப்பையும் குறை கூற தேவையில்லை. எனவே, உங்களின் சேவையை நீங்கள் தொடர்ந்து கொண்டேயிருங்கள். நீங்கள் குர்ஆனின் குரலில் படிக்கின்ற விஷயங்களை பள்ளி தஃலீமின் மூலமாக வெளிப்படுத்தக்கூடிய சூழ்நிலை இல்லாவிட்டாலும் பார்ப்பவர்களிடமும், பேசுபவர்களிடமும் உங்களின் மனதில் பதிந்த நல்ல விஷயங்களை எடுத்துச் சொல்லிக் கொண்டேயிருங்கள். அதற்காக மனம் தளர்ந்து விடாதீர்கள். அமல்களின் சிறப்பு, ஸதகாவின் சிறப்பு போன்ற கிதாபுகள் அல்லாஹ்வின் பேரருளால் உலகம் முழுவதும் பல மொழிகளில் படித்து பயன் பெறப்படுவது போன்று குர்ஆனின் குரல் அல்லாஹ்வின் கிருபையால் உலகம் முழுவதுமுள்ள அதிகமான தமிழ் முஸ்லிம்களால் நேரடியாகவோ அல்லது இணைய தளம் மூலமாகவோ படித்து பயன் பெறப்படுகின்றது. அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்! அல்ஹம்து லில்லாஹ்!

புர்தா ஷரீஃப் ஓதலாமா?

**நாமக்கலிலிருந்து**
**ரஹ்மதுல்லாஹ்**

ஓதலாம்.

வாழ்க்கையில் மனைவி மீது சந்தேகம் வந்தால் அதை எப்படி நிவர்த்தி செய்வது?

**கடம்பையிலிருந்து**
**அப்துல் மஜீத்**

சந்தேகம் வருவதற்கு முன்பே சந்தேகம் வராதவாறு மனைவியைப் பார்த்துக் கொள்வதுடன், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையோடு, இஸ்லாம் கூறிய பேணுதலான வழியில் மனைவியை நடத்தாட்டினால் இன்ஷா அல்லாஹ் அனைத்தும் நிவர்த்தியாகி விடும். எனவே தான் மற்றவர்களுக்கு சந்தேகத்தை தூண்டும் வகையில் கூட நீங்கள் நடந்து கொள்ள

# சுய சம்பாத்தியமே சிறந்தது!

“ஒருவர் தம் கையால் உழைத்து உண்பதை விடச் சிறந்த உணவை ஒருபோதும் உண்ண முடியாது” – ஹள்ரத் நபி (ஸல்) அவர்கள்

(நூல் : புகாரி – 2072)

வாழ்த்துக்களுடன்....

## ARM

நம்பிக்கையாளர்களே வெற்றியாளர்கள்

**உங்கள் திட்டம் – எங்கள் பொருட்கள்**
**ஓர் உறுதியான இணைப்பு**

**30க்கும் மேற்பட்ட முதன்மையான பிராண்டு**

**சிமெண்ட் | சானிட்டரிவேர்ஸ்**

**கம்பி | கெமிக்கல்ஸ்**

2154, வடக்குராஜ வீதி,
புதுக்கோட்டை.
செல் : +91 7373 7989 30

233, ECR
கோட்டைப்பட்டிணம்.
செல் : +91 7373 7989 11

31, ஏர்போர்ட் ரோடு, திருச்சி.
செல் : +91 7373 7989 45

www.armsons.in

வேண்டாமென்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அப்படி நடக்க வைக்கும் பிடி கணவரின் வசம்தான் உள்ளது.

நான் 1995-ம் ஆண்டு ஹஜ்ஜுக்கு சென்று வந்தேன். சுமார் 40 நாட்களுக்கு மேல் ஆனது. ஆகையால், ஹஜ்ஜுக்கு செல்பவர்கள் தங்கள் தொழுகைகளை கஸ்ராக சுருக்கிக் கொள்வதற்கு வாய்ப்பில்லை. இப்படியிருக்கும் நிலையில், ஒரு நண்பர் மதீனாவில் நாம் 9 நாட்கள் மட்டுமே தங்குகின்றோம். அப்பொழுது இமாம் ஜமாஅத் தவறிவிடும் பட்சத்தில் அந்த தொழுகையை கஸ்ராகவே தொழ வேண்டும் என்று சொல்கிறார். அவர் சொல்வது சரிதானா?

**கரூரிலிருந்து**
**கலீலுர் ரஹ்மான்**

ஆம் சரிதான். ஏனெனில், மக்காவிற்கும் மதீனாவிற்குமிடையில் சுமார் 450 கி.மீட்டர் தூரம். ஒரு மனிதனின் பயண அளவு 78 கி.மீட்டர் ஆகிவிடுமானால் அவனின் மீது பிரயாண தொழுகையின் சட்டம் வந்து விடும். எனவே, மக்கா, மதீனாவின் மொத்த பயண நாட்களை கவனிக்கக் கூடாது. மேலும், ஒரு மனிதர் மக்காவிலிருந்து தனது பொருள்களையெல்லாம் எடுத்துக் கொண்டு தங்குமிடத்தை காலி செய்துவிட்டு மதீனாவிற்கு சென்றுவிட்டு மீண்டும் மக்காவிற்கு வந்து 15 நாட்களைவிட குறைவாக தங்கினால் அவரும் தொழுகையை கஸ்ர் முறையில் தான் தொழ வேண்டும். எனவே, இரண்டு ஊர்களுடைய பயணங்களையும் தனித்தனியாக கணக்கிட வேண்டும்.

ஒளு செய்யும்பொழுது அடிக்கடி காற்று பிரியும் சூழ்நிலையுள்ளவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

**திருவாரூரிலிருந்து**
**அஸ்மத் பாஷா**

அப்படிப்பட்டவர்கள் தொழுகை நேரம் வந்தவுடன் ஒளு செய்து கொண்டு அந்த நேரத்தின் தொழுகைகளை நிறைவேற்றி விட்டால் இன்ஷா அல்லாஹ் தொழுகை கூடிவிடும். குர்ஆனும் ஓதிக் கொள்ளலாம். இடையில் காற்று பிரிந்தாலும் சரியே. மறுநேர தொழுகைக்காக மீண்டும் கண்டிப்பாக ஒளு செய்து கொள்ள வேண்டும்.

ரமளான் மாதத்தின் ஆரம்பத்திலிருந்தே ஜகாத் கொடுப்பது நல்லதா? அல்லது 27-ம் கிழமையன்று கொடுப்பது அதிக நன்மை தரக்கூடியதா?

**புதுக்கோட்டையிலிருந்து**
**அஹமத் ஷா**

ரமளான் மாதத்தின் ஆரம்பத்திலிருந்தே கொடுக்க ஆரம்பிக்கலாம். 21, 23, 25, 27

போன்ற இரவுகளிலும், மற்ற இபாதத்துகளை போல அந்த ஜகாத் எனும் தர்மத்தையும் ஒரு இபாதத்தாகக் கருதி தர்மம் செய்தால் நிச்சயமாக இன்ஷா அல்லாஹ் அதற்கும் தனிப்பட்ட சிறப்பான நன்மையுண்டு.

☛ எனக்கு அடிக்கடி வலது கண் துடித்துக் கொண்டே இருக்கிறது. நான் ஸலவாத்து சொல்லி கண் இமையை தடவிக் கொள்கிறேன். ஏதாவது கெட்ட விஷயம் ஏற்படுவதற்காகத் தான் இப்படி கண் துடிக்கிறது என்று சிலர் சொல்கிறார்கள். விளக்கம் தாருங்கள்.

**திண்டுக்கலிலிருந்து**
**நூருல் ஆயிஷா**

✍ அதுபற்றி கவலைப் படாதீர்கள். மார்க்கத்தில் அப்படி யொரு நம்பிக்கையை குர்ஆன், ஹதீஸ் எதிலும் சொல்லப்பட வில்லை. எனவே, ஸலவாத்து சொல்லி தடவும் பழக்கத்தை தொடர்ந்து செய்து வாருங்கள். அவசியமென்று கருதினால் மனதிருப்திக்காக மருத்துவர் களிடமும் பரிசோதனை செய்து கொள்ளுங்கள். இன்ஷா அல்லாஹ் விரைவில் குணத்தை காண்பீர்கள்.

☛ முஸ்லிம் பெண்கள் வேலைக்கு செல்வது கூடுமா? கூடாதா?

**ஆந்திராவிலிருந்து**
**ஃபஹீமா**

✍ அவசியமின்றி வேலைக்குச் செல்வது ஹராமாகும். அத்துடன் திருமணத்திற்கு முன்னுள்ள நிலையாக இருந்தால் பெற்றோர் அல்லது பொறுப்பாளர்களின் அனுமதியும், திருமணத்திற்கு பின்புள்ள நிலையாக இருந்தால் கணவரின் முழுமையான அனுமதியும் - திருப்தியும் கட்டாயமாகும். எல்லா நிலைகளிலும் வேலைக்குச் செல்லுமிடத்தில் கோஷாவுடன் இருத்தல் போன்ற மார்க்கத்தின் சட்டங்களை பேணி நடப்பது மிக மிக அவசியமாகும்.

☛ எனது மாமியார் இறந்த பொழுது அவருக்கு சிவப்பு துணியில் கஃபனிட்டு அடக்கம் செய்தார்கள். இங்குள்ள உஸ்தாத்பீ அவர்கள் அப்படி செய்யக்கூடாது. வெள்ளை துணியால் மட்டுமே கஃபன் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். மார்க்கம் என்ன சொல்கிறது?

**தஞ்சையிலிருந்து**
**ஜுலைஹா**

✍ வெள்ளை துணியால் கஃபன் செய்வது சிறப்பு. வேறு கலர் துணிகளால் கஃபன் செய்வதில் தவறில்லை.

☛ வங்கியில் சேமித்த பணத்திற்கு வரும் வட்டியிலிருந்து மதரஸாவிற்கும், பள்ளி முஅத்தினுக்கும் கொடுப்பதற்கு அனுமதியுண்டா? வடநாட்டு மதரஸா

வசூல்தாரர்கள் சிலர் அப்படி வாங்குகிறார்கள். விளக்கம் வேண்டுகிறேன்.

**மண்டக்களத்தூரிலிருந்து**
**மஜீத் பாய்**

✍ வங்கியிலிருந்து வரும் வட்டிப் பணத்தை தனிப்பட்ட ஏழை நபருக்கு நன்மையை எதிர்பார்க்காமல் கொடுப்பது தவறல்ல. மத்ரஸா போன்ற பொது ஸ்தாபனங்களுக்கு "வட்டிப்பணம்" என்று சொல்லி, நன்மையை எதிர்பார்க்காமல் கொடுத்து உதவலாம். அவர்கள் ஷரீஅத் முறைப்படி அதை செலவழிப்பது அவசிய மாகும். அன்றி மதரஸாவுடைய கட்டட பணிகளுக்காக, சம்பள வகைகளுக்காக, உணவு வகைகளுக்காக கொடுப்பதும், அவற்றை வாங்கிப் பயன் படுத்துவதும் ஹராமாகும்.

☛ ஜனாஸா எடுத்துச் செல்கை யில் தலைப்பக்கம் முன்னால் செல்ல வேண்டுமா? அல்லது கால்பக்கம் முன்னால் செல்ல வேண்டுமா?

**மும்பையிலிருந்து**
**மஜீதுத்தீன்**

✍ தலைப்பக்கம்தான் முன் னால் செல்ல வேண்டும்.

☛ பள்ளிவாசலில் வெள்ளிக் கிழமை ஃபஜ்ரில் யாசீன் சூரா ஓதிய பின் "அல்பாத்திஹா" என்று ஹஜ்ரத் ஓதிய பின் குல்ஹுவல்லாஹு மூன்று முறையும், ஃபலக் சூரா ஒரு முறையும், "குல்அஊதுபிரப்பின் னாஸ்" சூரா ஒரு முறையும், ஓதிய பின்னால் ஃபாத்திஹா ஓதி முடிப்பது எங்களுடைய பழைய பள்ளியின் வழக்கம். வேறு ஒரு புதிய பள்ளிவாசல் துவங்கி ஒரு வருடத்திற்கு மேலாகிறது. யாஸீன் சூராவுக்குப்பின் அல் பாத்திஹா என்று மூன்று சூராக்கள் ஓதுவதில்லை. நேராக துஆ செய்கிறார் இமாம். எது சரி? சிறந்ததுஎது? விளக்கம் தேவை.

**கெங்கவல்லியிலிருந்து**
**அ.மக்பூல் பாஷா**

✍ இரண்டுமே சரிதான்! தயை கூர்ந்து இது போன்ற சின்னச் சின்ன விஷயங்களை பெரி தாக்கி ஜமாஅத்தார்களுக்கு நடுவில் பிளவை ஏற்படுத்த வேண்டாம். அவசியமென்றால், சூராக்கள் ஓதி மரணித்தவர் களுக்காக துஆ செய்யலாம். எனினும், அப்படி ஓதுவதை கட்டாயமென கருதுவதும் கூடாது.

☛ எனது பெயரை முஹம்மது ஹாரிஸ் என எழுத வேண்டு மென்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் நான் முஹம்மது ஆரிஸ் என்று தான் கையெழுத்து போடுகிறேன். எது சரி? பெயரின் அர்த்தம் என்ன?

**நாகூரிலிருந்து**
**முஹம்மது ஆரிஸ்**

حارث என்பதுதான் சரியான உச்சரிப்பாகும். அதற்கு விவசாயம் செய்பவர் என்று பொருள். இது ஸஹாபிகளில் ஒருவருடைய பெயருமாகும். எனவே, இதற்கு மாற்றமாக ஆரிஸ் என்று எழுதுவதும், கையெழுத்திடுவதும் அர்த்தமற்ற செயலாகும்.

ஒரு கணவர் தன் மனைவியின் பெயரில் ஒரு காலி இடத்தை வாங்கி அதில் ஒரு வீட்டையும் கட்டிவிட்டார். சில வருடங்களுக்குப் பின்பு கணவன் - மனைவி இருவருக்கும் இடையில் மனக்கசப்பு ஏற்பட்டு வீடு தனக்குத்தான் சொந்தம் என்று ஒவ்வொருவரும் வாதிடுகின்றனர். மார்க்கம் என்ன சொல்கிறது?

**மதுரையிலிருந்து**
**குலாம் தஸ்தகீர்**

அந்தக் கணவர் முன்பே தன் மனைவியின் பெயரில் வீட்டை பதிந்திருந்தால் அந்த வீடு மனைவிக்குத் தான் சொந்தமாகும்.

முஸ்லிம்கள் விவசாயம் செய்யக் கூடாது என்று சிலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். இது எந்தளவு உண்மை?

**செம்மியமங்கலத்திலிருந்து**
**மஜீத்**

பச்சையான பொய். விவசாயத்தை உலகத்திற்கு கற்றுக் கொடுத்ததே முஸ்லிம்கள் தான். ஹள்ரத் ஆதம் (அலை) அவர்கள் உலகத்திற்கு வந்ததற்குப்பின்பு அல்லாஹ்வினால் விவசாயக் கலையை கற்றுக் கொடுக்கப்பட்டார்கள். இப்படிப் பட்ட நிலையில், விவசாயத்திற்கு அடித்தளமிட்ட ஒரு சமுதாயம் விவசாயமே செய்யக் கூடாதென்று சொன்னால் எப்படி ஏற்க முடியும்?

## இறந்தவருடன் தங்கி விடும் செயல்கள்

“இறந்தவரை மூன்று பொருள்கள் பின்தொடர்ந்து செல்கின்றன. (அவற்றில்) இரண்டு திரும்பிவிடுகின்றன. ஒன்று மட்டுமே அவருடன் தங்கிவிடுகிறது. அவரை அவரின் குடும்பமும் செல்வமும் அவர் செய்த செயல்களும் பின்தொடர்ந்து செல்கின்றன. (அவற்றில்) அவரின் குடும்பமும் செல்வமும் திரும்பிவிடுகின்றன. அவரின் செயல்கள் மட்டுமே அவருடன் தங்கிவிடும்” என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் இப்னு மாலிக் (ரளி) அவர்கள்

(நூல் : புகாரி – 6514)

# நற்பண்புகள்

நற்செயல்களை செய்வது, பெரியோரை மதிப்பது, சிறியோர் மீது அன்பு செலுத்துவது, பெற்றோரை மதிப்பது, உறவினர்களின் உறவைப் பேணுதல், கோள் சொல்லாமை, அண்டை வீட்டாருடன்நட்பாக,உதவியாக இருத்தல், விருந்தினர்களை உபசரித்தல், நல்லதை பேசுதல், பிறர் குறைகளை மறைத்தல், புறம் பேசாமல் இருத்தல், கோபம் கொள்ளாமை இவை அனைத்தும் நற்பண்புகள் ஆகும்.

உறவை பேணி வாழ வேண்டும் என்பதில் மத வேறுபாடுகள் கிடையாது. சகோதர சமுதாயத்தை சேர்ந்த ஒருவர் இஸ்லாத்தை தழுவுகின்றார். இந்நிலையில் அவரின் பெற்றோர், சகோதரர், உற வினர் ஆகியோர் மற்ற மதத்தவர்களாக இருந்தாலும் உறவினர்கள் என்ற முறையில் அவர்களுக்கு செய்ய வேண்டிய உதவிகளை ஒரு முஸ்லிம் செய்ய வேண்டும்.

அதே நேரத்தில் அவர்களின் வணக்கம், வழிபாடு, கலாச்சாரம் ஆகியவற்றில் இணங்கலாகாது. அவர்களின் தெய்வங்களை பற்றி குறைவாகப் பேசவும் கூடாது.

நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள் –

**“உறவை முறிப்பவன் சுவனம் செல்லமாட்டான்”.**

(புகாரி – 5984)

உறவை வளர்ப்பதால் வாழ்வாதாரம் உணவு விரிவாக்கப்படும். உறவை பேணி வாழ்பவருடன் அல்லாஹ்வும் உறவு பாராட்டுகின்றான்.

“நானும் அநாதைகளை பாதுகாப்பவர்களும் சுவனத்தில் இப்படி இருப்போம்” என்று கூறி தனது சுட்டு விரலாலும், நடு விரலாலும் நபி (ஸல்) அவர்கள் சைகை செய்தார்கள்.

“கணவனை இழந்த விதவைகளுக்காகவும், ஏழைகளுக்காகவும் பாடுபடுபவர் இரவு முழுவதும் நின்று வணங்கி பகல் முழுவதும் விடாது நோன்பு நோற்பவர் போன்றாவர்” என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

# படித்ததில் பிடித்தது...

சென்னை பெருங்களத்தூர் மாலை நேரத்தை விழுங்கி, இரவு மெல்ல மெல்ல தலை நீட்டத் தொடங்கியிருந்தது. மப்பும் மந்தாரமுமுள்ள மழைக் கால குளிரில் வெளியே தலை காட்டாமல் நிலவு இருளைப் போர்த்தி உறங்கிக் கொண்டிருந்தது.

விடிந்தால் தீபாவளி; ஊருக்குச் செல்வதற்காக காத்துக்கிடந்த மக்கள் வெள்ளத்தில் மூழ்கிய பெருங்களத்தூர் பஸ் நிலையம் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தது.

பஸ் நிலையத்திற்கு முன்னூறு, நானூறு மீட்டர் முன்பாக ஏரிக்கரையை ஒட்டி ஒரு முஸ்லிம், மலிவான துணிகளை கடையாய் பரப்பி வைத்திருந்தார். அவர் கடை வரை பஸ்ஸுக்காக காத்திருப்பவர்களின் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது.

கொஞ்சம் வசதி குறைந்தவர்கள் பேரம்பேசி துணிகளை வாங்கிச் சென்றார்கள். அரை மணி நேரமாய் அந்த வியாபாரத்தை கவனித்துக் கொண்டிருந்த ஒருவர், மெல்ல அவரிடம் கேட்டார்.

"நானும் அரைமணி நேரமா பாக்குறேன்... நீங்க நூத்தம்பது ரூபா சொல்லி, அவங்க நூறு ரூபாய்க்கு கேட்டாக் கூட குடுத்தீங்க. சரி... ஆனா கடைசியா ஒருத்தர் நீங்க சொன்ன நூத்தம்பது ரூபாய குடுத்தப்போ நீங்க நூறை மட்டும் எடுத்துக்கிட்டு ஐம்பதை திருப்பிக் குடுத்தீங்களே ஏன்?"

"இது ஒரே விலைனு போர்டு போட்ட கடை இல்ல தம்பி. ஏழைபாழைங்க அவங்க பொருளாதாரத்துக்கு ஏத்தாப்புல வாங்குவாங்க. அவங்களுக்கு தரம் முக்கியமில்ல. சொன்ன விலையிலருந்து குறைச்சு வாங்கியே பழக்கப்பட்டவங்க. எனக்கு தொண்ணூறு ரூபா பொருளுக்கு பத்து ரூபா கெடச்சாப் போதும். அதனால தான் நூத்தம்பது சொல்லி நூறுக்கு குடுத்திருவேன். அவங்களுக்கும் மனசு திருப்தி; எனக்கும் நியாயமான வருமானம். கடைசியா வந்தவர் பேரம்பேசாம குடுத்தார். நானும் மனசாட்சியோடு திருப்பிக் குடுத்துட்டேன்... ஆமா நீங்க எங்க போகணும் தம்பி?"

"திருநெல்வேலி போகணும் பாய்".

"இன்னைக்கெல்லாம் பஸ் ஏறிப்போறது செத்துப் பொழைக்கிறதுக்கு சமம். பார்த்தா படிச்சவங்க மாதிரி இருக்கீங்க. இரயில்லயோ பஸ்லயோ ஒரு மாசம் முன்னாலயே ரிசர்வ் பண்ணி இருக்கலாம்ல."

"கார் இருக்கு. எப்பவும் அதுலதான்ஊருக்குப்போவேன். இன்னைக்கு மத்தியானம்தான் காருக்கு அடில போய் சென்சார் வயர எலி கடிச்சிருச்சு. ஒர்க் ஷாப்லஉடனேரெடிபண்ணமுடி யாதுனுட்டாங்க. அதான் பஸ்ல போலாம்னு பார்த்தா, ரொம்ப சிரமமாயிரும் போலயே..."

"கொஞ்சம் லேட்டானா இடம் கிடைக்கும். வெயிட் பண்ணுங்க தம்பி" என்றவர், மணி பார்க்கிறார். 7 : 25 என்றது கடிகாரம்.

"அடடாஇரவுதொழுகைக்கு நேரமாச்சே! தம்பி நான் தொழுகைக்கு போய்ட்டு வாரேன். உங்களுக்கு பஸ் வர்ற வரைக்கும் பார்த்துக்கிறீங் களா... பஸ் வந்தா போயிருங்க, ஆண்டவன் பாத்துக்குவான்".

"சரிங்க பாய்".

அவர் தொழுகைக்குப் போய் வருவதற்குள் எண்ணூறு ரூபாய்க்கு வியாபாரம் செய்து வைத்திருந்தார். நாகர்கோவில் சென்ற இரண்டு ஆம்னி பஸ் களையும், ஓர் அரசு பஸ்ஸை யும் தவறவிட்டிருந்தார்.

"இந்தாங்க பாய் எண் ணூறு ரூபாய்.... துணி கேட்டு வந்தவங்களுக்கு நீங்க விக்கிற மாதிரியே குடுத்தேன்."

"மாஷா அல்லாஹ்... அல் லாஹ் உங்களை சுவனவாசி ஆக்கட்டும். ஆமா... உங்களுக்கு ஒரு பஸ்ஸும் வரலயா?"

"வந்துச்சு. நான்தான் போகல பாய். என்னை நம்பி பொறுப்பை குடுத்துட்டு போய் இருக்கீங்க. அதை அம்போனு விட்டுட்டுப் போயிருந்தா என்னால நிம்மதியா தீபாவளி கொண்டாடி இருக்க முடியாது பாய்".

"நல்லது தம்பி. இன்னும் பஸ் வந்துகிட்டுதான் இருக்கும். கண்டிப்பா சீட் கிடைக்கும். ஆமா உங்களுக்கு எத்தனை குழந்தைங்க?"

"ஒரே பையன்தான். ஏழு வயசாகுது".

"ஓ..." என்றவர், அந்தப் பையனுக்குத் தகுந்தாற் போல் தன்னிடம் இருந்ததிலேயே விலையுயர்ந்த ஒரு பேண்ட் டையும், ஒரு டீ சர்ட்டையும்

## போர்க்களத்தில்....

"யுத்தத்தைப் போர்க்களத்தோடு முடித்துக் கொள்ளுங்கள். அப்பாவி மக்கள் மீது ஒருபோதும் வன்முறை நடத்தாதீர்கள். பெண் களைக் கௌரவமாக நடத்துங்கள். பிடிபட்ட கைதிகளின் மத நம்பிக்கைக்கு மதிப்புக் கொடுங்கள். குழந்தைகளுக்கும் முதியோ ருக்கும் பாதுகாப்பு கொடுங்கள்" என்று, தன் ராணுவத்துக்கு எழுத்துப்பூர்வமாக உத்தரவு பிறப்பித்தவர் திப்பு சுல்தான்.

– ஜூ.வி.யின் 'எனது இந்தியா!' தொடரில் எஸ்.ராமகிருஷ்ணன்

# முனவ்வரா மகளிர் அறநிலையம்

**மூன்று மாவடி, (சர்வேயர் காலனி பஸ் ஸ்டாப்), மதுரை-625 007.**

**அலைபேசி : 97156 04495, 95977 25934**

எமது நிறுவனம், மதுரை மாநகரில் இறையருளால் கடந்த **54 ஆண்டுகளாக** அநாதை, ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளுக்கு '**ஆலிமா**' பட்டப்படிப்புடன் மார்க்கக் கல்வி, அரசு **சமச்சீர் கல்வி,** தையல் பயிற்சியுடன், குர்ஆன் ஷரீஃப், கிதாபுகள், பள்ளிப் புத்தகங்கள், சீருடைகள், மருத்துவ வசதி, மூன்று வேளை உணவு, தங்குமிடம் யாவும் முற்றிலும் **இலவசமாக** வழங்கி (அல்லாஹு தஆலாவிடம் மேலான நன்மையைக் கருதி) சிறப்பாக நடைபெற்று வருகிறது. அல்ஹம்து லில்லாஹ்!

தற்போது நடப்புக் கல்வி ஆண்டு "**புதுச் சேர்க்கை**" நடைபெறுவதால் விருப்பமுள்ள மாணவிகள் தக்க பொறுப்பாளருடன் தம் மஹல்லா முஸ்லிம் ஜமாஅத்தின் கடிதம் பெற்று உடனே நேரில் வந்து இந்நல்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் விழைகிறோம்.

இப்படிக்கு
**நிர்வாகக் குழுவினர்**

★ **'ஆலிமா' வகுப்புக்கு வருடம் முழுவதும் எந்நாளிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

**எமது இந்நிறுவனத்திற்கு 'நிதி வசூலிப்போர்' யாரும் நியமிக்கப்படவில்லை.**

**எனவே, முனவ்வரா மகளிர் அற நிலையத்திற்கு உதவி செய்ய விரும்புகின்றவர்கள் நேரடியாகவே எங்களுக்கு**

**"MUNAWWARAH GIRLS ORPHANAGE TRUST"**

**என்ற பெயரில் DD/செக் / M.O. மூலம் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவிட வேண்டுகிறோம்.**

ஒரு கேரிபேக்கில் போட்டு அவரிடம் கொடுத்தார்.

"இந்தாங்க தம்பி. உங்க பையனுக்கு என்னோட தீபாவளி பரிசா வச்சுக்குங்க"

"அய்யோ... வேண்டாம் பாய். நீங்க சொன்னதே போதும். நான் ஏற்கனவே புதுத்துணி எல்லாருக்கும் எடுத்துட்டேன்."

"பரவால்ல.... நீங்க போடுற அளவு ரிச்சான துணிகள் என் கிட்ட இல்ல. இருந்திருந்தா குடுத்திருப்பேன். பையன் போடாட்டாலும் உங்க வீட்டுப் பக்கம் இருக்கிற ஓர் ஏழைப் பையனுக்கு குடுங்க. ஆனா நீங்க இதை வாங்கிக்கிட்டா தான் எனக்கு சந்தோஷமா இருக்கும்".

"என்னங்க பாய் இப்படி வற்புறுத்துறீங்க" என்று வாங்கிக் கொண்டார். தன் இரண்டு பைகளில் ஒன்றைத் திறந்து துணியை வைத்துக் கொண்டவர் அதிலிருந்து பெரிய ஸ்வீட் பாக்ஸ் ஒன்றை வெளியில் எடுத்து ஒரு கேரிபேக்கில் போட்டு அவரிடம் நீட்டினார்.

"இந்தாங்க பாய், குப்தா ஸ்வீட்ஸ். வீட்டுக்கு கொண்டு போங்க",

"குப்தா ஸ்வீட்ஸா... ரொம்ப காஸ்ட்லி ஆச்சே. பிள்ளைக் காக வாங்கி இருப்பீங்க. நீங்க கொண்டு போங்க தம்பி".

"அப்போ நானும் டிரெஸ்ஸை திருப்பித் தந்திருவேன்".

"சரி சரி குடுங்க தம்பி" என்று ஸ்வீட் பாக்ஸை வாங்கி ஓரமாய் வைத்தவர்,

"வோய் கரீம் பாய்.... இங்க என்னவே பண்றீரு?" என்ற குரல் கேட்டு திரும்பினார். கடையை ஒட்டி ஓரமாய் நின்றி ருந்த காரில், ஸ்டீரியங்கைப் பிடித்தபடி சார்லஸ் அமர்ந்தி ருந்தார். பக்கத்து இருக்கை யில் அவர் மனைவி.

"தீபாவளி வியாபாரம் பாக்குறேன் வோய். பாத்தா தெரியல".

"பத்து வருஷத்துக்கு முன் னால இருந்த அந்த நக்கலும் நையாண்டியும் இன்னும் உம்மை விட்டுப் போகல வோய்... எப்படி இருந்த மனுசன்; தாம்பரத்துலயே கொடிகட்டிப் பறந்த ஜவுளிக்கடை முதலாளி. உன் கடைய ஒட்டி அந்தப் பாலம் மட்டும் வராம இருந்தி ருந்தா உன் கடையும் இடிஞ்சி ருக்காது. நீயும் இந்த நிலைமைக்கு வந்திருக்க மாட்டே. எல்லாம் நேரம் வோய்".

"முடிஞ்சத பேசி பிரயோ ஜனம் இல்ல சார்லஸு. நடப்ப தெல்லாம் நன்மைக்கே. எல்லாம் அவன் செயல்" என்று மேலே கையை உயர்த்தினார் பாய்.

அதே நேரம் திருநெல் வேலி செல்பவருக்கு போன் வந்தது.

"என்னடி சரசு"

"ஏன்னா பஸ் ஏறிட்டேளா?"

"இன்னும் இல்ல. பஸ் ஸ்டாண்ட்லதான் வெயிட் பண்ணிண்டிருக்கேன்".

"பட்டுக்கோட்டைலருந்து அத்திம்பேர் குடும்பமெல்லாம் வந்துட்டாங்கோனா. பத்மநாபன் இன்னும் பஸ்ஸே ஏறலயா. பணம் போனா பரவாயில்லே. டாக்ஸி பிடிச்சுண்டு வரச் சொல்லுனு சொல்றாங்கோனா"

"இன்னும் அரைமணி நேரம் வெயிட் பண்ணிட்டு பஸ் கிடைக்கலேனா டாக்ஸி பிடிச்சுடலாம்னுதான் இருக்கேன்."

"ஏன்னா.... நம்ம பையன் ரகு. குப்தா ஸ்வீட்ஸ்லருந்து பலகாரம் கேட்டானே.... வாங்கிட்டேளா?"

"அந்தப் பக்கம் போக பொழுதே ஒழியலடி. அங்க வந்து சாந்தி ஸ்வீட்ஸ்ல வாங்கிடலாம்".

"என்னமோ போங்கோ... ரகுவை நீங்க சமாளிச்சுண்டா சரி".

"சரி போனை வை. பஸ் ஏறிட்டு போன் போடுறேன்".

"ஏம்பா சார்லஸு.... நாகர் கோவிலுக்கா போற"

"ஆமா வோய். தொடர்ச்சியா நாலுநாள் லீவு. அதான் ஊரைப் பார்க்க போய்ட்டு வரலாம்னு கிளம்பிட்டோம்".

"வழில யாரையாவது பிக்அப் பண்றியா?"


பக்க விளைவுகள் கிடையாது

ஜிங்கா கோல்டு

4 கேப்சூல்ஸ் ரு.600/- மட்டுமே

அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்

அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

Customer Care - 9962664444

www.jingagold.com info@jingagold.com

"அதெல்லாம் இல்லவோய். நாங்க ரெண்டு பேர் மட்டும் தான்".

"அப்போ எனக்கு ஒரு உதவி செய்வியா?"

"என்ன செய்யணும்.... உன்னை தூக்கிட்டுப் போய் திருநெல்வேலில போடணுமா?" என்று கலகலவென சிரித்தார் சார்லஸ்.

"அட கூவ. என்னை இல்லடா.... அந்த தம்பிய கூட்டிப் போய் திருநெல் வேலில இறக்கி விடணும்".

"அந்த தம்பி யாரு?"

"என் நண்பர்தான்".

"எனக்குத் தெரியாம உனக்கு ஒரு நண்பனா வே.... ரொம்ப மாறிட்ட வோய். உன் நண்பர்னு சொல்ற. உன் நண்பர் எனக்கும் நண்பர்தான். மூணாம் மனுசன் மாதிரி கேட்டுக்கிட்டு நிக்கிற... உள்ள ஏத்தி விடும்வோய்...."

"தம்பி... இவன் சார்லஸ். என் பால்ய நண்பன். இவன் நாகர்கோவில் போறான். உங் களை திருநெல்வேலில இறக் கிருவான். ஏறிப் போங்க தம்பி".

பத்மநாபனுக்கு சட்டென்று முகம் பிரகாசமாகியது. கையை பிடித்துக் கொண்டார். "பேருதவி செஞ்சீங்க பாய்!"

"அதெல்லாம் ஒண்ணு மில்ல. ஏறுங்க" என்ற பாய். மறக் காமல் சொன்னார்.... "உங் களுக்கும் உங்கள் குடும்பத்தா ருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள் தம்பி!"

"ரொம்ப தேங்க்ஸ் பாய்" என்ற பத்மநாபன் காரில் ஏறி அமர்ந்தார்.

"டேய்... ஆக்கங்கெட்ட கூவ... மழைவர்ற மாதிரி இருக்கு. துணியெல்லாம் மூட்டை கட்டிட்டு வீடு போய் சேரு".

"சரிடா.... ரோடெல்லாம் ரஷ்ஷா இருக்கும். பத்திரமா பார்த்துப் போ".

அனைவரும் கைகளை ஆட்டிக் கொண்ட பின், கார் மெல்ல ஊர்ந்து போகத் தொடங்கியது.

கரீம் பாய் துணிகளை எல்லாம் பேக் செய்து விட்டு, அந்த ஸ்வீட் பாக்ஸை இப்போது தான் கூர்ந்து கவனிக்கிறார். அதன் மேல்பகுதியில் பச்சை நிற ஐநூறு ரூபாய் தாள்கள் நான்கு செருகப்பட்டிருந்தது. கள்ளங்கபடமில்லாமல் காந்தி தாத்தா பொக்கை வாய் திறந்து சிரித்துக் கொண்டிருந்தார்.

"யா அல்லாஹ்!" என்று எதேச்சையாய் கார் சென்ற திசையை திரும்பிப் பார்க்கிறார் பாய். அது பல்லாயிரம் சிவப்பு புள்ளிகளுக்கிடையே கலந்து போயிருந்தது.

மனதால் கலந்து போன இந்த மூன்று மனித(ங்)ர் களைப் போல!!

# சாதிகள் இல்லையடி பாப்பா!

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
**(ஜம்பை ஜப்பார்)**

"மனிதர்களே! நிச்சயமாக உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்து படைத்தோம். நீங்கள் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்வதற்காக உங்களை பல கிளையினராகவும், பல கோத்திரங்களாகவும் நாம் ஆக்கினோம்; (யாராகயிருப்பினும்) அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக உங்களில் மிக்க சங்கைக்குரியவர் உங்களில் மிக்க பயபக்தி உள்ளவர்தாம்"

- அல்குர்ஆன் (49 : 13)

ஹள்ரத் ஆதம் (அலை), ஹள்ரத் ஹவ்வா (அலை) என்ற இருவரிலிருந்து உண்டானவர்களே இன்றைய மக்கள். கியாமத் வரை வருபவர்கள் அனைவரும் ஒரு தாய் - தந்தைவழியினரே!

பல பிரிவினர்களாக, ஜாதிகளாக, பல கொள்கையினராக, பல கட்சியினராக இருப்பது அவரவரது சுயநலத்திற்கே! அல்லது பிடிவாதத்திற்கே!

இஸ்லாத்தில் எந்த வகை பாகுபாடும், உயர்வு - தாழ்வும் இல்லை என எல்லோருக்கும் தெரியும். நபிகளாரின் காலத்திற்கு முன் அரபகத்தில் உயர்ந்தவன், தாழ்ந்தவன், உயர் சாதி என்றெல்லாம் இருந்தார்கள்தான்.

கறுப்பன் வெள்ளையன் என்ற பாகுபாடு மிக மலிவாக இருந்தது.

இன்றும் மேலை நாடுகளில் கறுப்பன் - வெள்ளையன் என்ற பாகுபாடு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது.

தொட்டால் தீட்டு, நிழல் பட்டால் பாவம் என்ற ஏற்றத்தாழ்வுகள் இன்றும் நாட்டில் நடமாடிக்கொண்டிருக்கின்றன.

வணக்க வழிபாட்டில் கூட கடுமையான உயர்வு தாழ்வுகள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

ஒரு சாதியினருக்கு முன் மற்றொரு சாதியினர் செருப்பு போட்டு நடக்கக்கூடாது.

சில வணக்கஸ்தலங்கள் சில வகுப்பினருக்கு மட்டுமே சொந்தம். அவர்கள் உயர் சாதியினராம்.

வணக்கத்தை வழிநடத்துபவர் உயர் சாதியினராயிருக்க வேண்டும்.

எல்லா மனிதர்களுக்கும் அவ்வுரிமை கிடையாது.

சாதி ஒழிப்பு என்று சொல்லிக் கொண்டே சாதிச் சான்றிதழ் முறை இருந்து வருகிறது.

இட ஒதுக்கீடு கூட சாதியின் அடிப்படையிலேயே இருக்கிறது.

பல கட்சிகளில் சாதி அடிப் படையிலேயே தேர்தல் நடக் கிறது. தொகுதிப் பங்கீடு கூட சாதி அடிப்படையில்தான்.

சொல்லொன்றும், செய லொன்றும் எல்லாரிடமும் பொதுச் சொத்தாக இருக்கிறது.

பாராளுமன்ற உயர் பதவிகள் கூட சாதி அடிப்படையில் தான் வழங்கப்பட்டு வருகின்றன.

இன்று சனாதனப் போர் நடந்து வருகிறது. உண்மை ஊமையாக்கப்படுகிறது.

கோபத்தில் கொந்தளித்து உண்மையை மறைத்து சவால் கள் சகஜமாக பரிமாறப்பட்டு வருகின்றன.

வாய் கூசாமல் பொய் பட மெடுத்து ஆடுகிறது. சாமியை வணங்குவதற்கு சாதியைப் பார்ப்பவர்கள், இறைவனை தரிசிப்பதற்கு இடையூறு செய்பவர்கள், உண்மையை உரத்துச் சொல்லும்போது, கோபத்தில் அலறுபவர்கள் இஸ்லாத்தில் இல்லையா? அவர்களிடத்தில் இல்லையா? இவர்களிடத்தில் இல்லையா? என்று பிறரை வம்புக்கிழுத்து ஆதாரமில்லாமல் பொய்யை துணைக்கு அழைக்கிறார்கள்.

உயர்வு தாழ்வை சொல்லியே பிழைப்பு நடத்துபவர்களுமுண்டு.

படிப்பறிவில்லாத பாமரர் கள், பக்தி என்ற பெயரில் தங் களை இழிவுபடுத்துவதை இழி வாகக் கருதாமல் அது இறை வன் விதித்த தலைவிதி என எண்ணிக் கொள்கிறார்கள்.

படிப்பறிவும், முன்னேற்ற மும் உருவானபின்தான் கேள்வி கள் எழ ஆரம்பித்தன. மனிதன்

## ஷஹீதுகளின் பட்டியல்

“யார் தன்னுடைய பொருளை பாதுகாப்பதற்காக போரிட்டு கொல்லப்படுகிறாரோ அவர் ஷஹீதாவார். யார் தன்னுடைய மார்க்கத்திற்காக கொல்லப்படுகிறாரோ அவரும் ஷஹீதாவார். யார் தன்னை பாதுகாப்பதற்கு போரிட்டு கொல்லப்படுகிறாரோ அவரும் ஷஹீதாவார். யார் தன் னுடைய குடும்பத்தை பாதுகாப்பதற்காக போரிட்டு கொல்லப் படுகிறாரோ அவரும் ஷஹீதாவார்” என்று அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுற்றுள்ளேன்.

அறிவிப்பவர் : ஹள்ரத் ஸயீத் பின் ஸைத் (ரளி) அவர்கள்

(நூல் : திர்மிதீ 1421)

சமமானவனாயிருக்கும்போது நாம் மட்டும் ஏன் ஒதுக்கப்படுகிறோம்? என்ற உணர்வு தீப்பிழம்பாக பற்றி எரிய பதறிப் போனவர்கள் பலவாறு பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்டவன் என்று சொல்லப்படுபவன் இஸ்லாத்தைத் தழுவி ஒரு ஆலிமாக பட்டம் பெற்று, பள்ளியின் இமாமாக தலைவனாக உயர்வடைகிறான்.

அரபு கல்லூரி முதல்வராக பொறுப்பேற்கிறான். சவூதியில் நோன்பு திறக்கும் போது மன்னரின் அருகில் அமர அனுமதிக்கப்படுகிறான். கஅபாவைச் சுற்றிவரும் வரிசையில் ஒதுக்கப்படாமல் இருக்கிறான்.

பள்ளிவாசலில் எந்த பேதமையும் இல்லாமல் முன் வரிசையில் அனுமதிக்கப்படுகிறான்.

கறுப்பினத்தவரை ஓரங் கட்டி வைத்திருந்த அரபு நாட்டில் முதன்முதலில் பாங் கோசை எழுப்ப, கறுப்பரான பிலாலை அனுமதித்த அண்ணல் நபியவர்கள் உலக அரங்கில் வியப்புக்குரியவராக பார்க்கப்பட்டார்கள்.

குறைஷி கோத்திரமே உயர் சாதியாக எண்ணப்பட்டு வந்த அரபகத்தில் ஒரு கறுப்பர்


தமிழ்/ English நாளிதழ்களில் மற்றும்— குர்ஆனின் குரலில் விளம்பரம் செய்ய...

Call- Whatsapp 86952 16016 CityAds

உங்களுக்கு என்ன புத்தகம் வேண்டும்?

எங்களிடம் கேளுங்கள்- உங்கள் இல்லம் வந்து சேரும்.

இஸ்லாமிய மற்றும் தமிழ் பதிப்பகங்களின் புத்தகங்கள் தேவைகளுக்கு Call/Whatsapp: 98410 16016

CityAds BOOKS www.cityadsbooks.com

உயர்வாக மதிக்கப்பட்டபோது எந்த கோத்திரத்தாரும் எதிர்ப்புக் காட்டவில்லையே!

இன்று ஏற்றத்தாழ்வு உச்சத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறது.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு சிலரே பொறாமையால் அல்லது நாமும் உயர்சாதி என்று சொல்ல முடியாது போலிருக்கிறதே என்று எண்ணி இஸ்லாத்தை இழிவுபடுத்த முனைகிறார்கள். முஸ்லிம்களை தீவிரவாதிகளாக முத்திரை குத்தி ஓரங்கட்டப் பார்க்கிறார்கள்.

உண்மை என்றைக்குமே பின் தள்ளப்பட்டேயிருக்கும். பொய் புன்னகைத்துக் கொண்டிருந்தாலும், ஒரு நாள் அது புதைக்குழிக்குள் மூடப்பட்டு, உயர்சாதி மூடர்கள் மூக்கறுக்கப்படுவார்கள்.

பக்கத்து நாட்டு அழைப்பின் பேரில் சென்று கொண்டிருந்த கலீஃபா ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் சிறிது தூரம் ஒட்டகையில் அமர்ந்து செல்வார்கள். சிறிதுதூரம் பணியாள் அமர்ந்து செல்வார். நாட்டு எல்லைக்குள் நுழையும்போது பணியாள் ஒட்டகையில் அமர்ந்திருக்க, கலீஃபா ஒட்டகையை இழுத்துச் செல்ல, இதைக் கண்டு அதிர்ந்து போனான் அரசன். இவ்வரலாற்று உண்மை உலகெங்கும் பரவ, இஸ்லாம் வளர இதுவும் காரணமாக அமைந்ததென்றால், எந்த உயர் சாதிக்காரன்தான் இதை ஏற்றுக் கொள்வான்?

மதீனா மஸ்ஜிதில் வெளி நாட்டுக்காரர், வேந்தர் நபி (ஸல்) அவர்களைப் பார்க்க வந்தபோது, யார் அந்த வேந்தர் நபி எனத் தேடுமளவு மக்களோடு மக்களாக அமர்ந்திருந்த நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்துவிட்டு வியப்பில் ஆழ்ந்த அந்த வெளியூர்க்காரர், கலிமா மொழியத் தயங்கவில்லை என்ற வரலாற்று உண்மையறிந்த எந்த உயர் சாதிக்காரன் தான் இஸ்லாத்தைப் புகழப் போகிறான்?

உயர் பதவியிலிருக்கும் ஒருவர் அவர் சாதியைக் காட்டி சில இடங்களில் புறக்கணிக்கப்படும் இழிநிலை இஸ்லாத்தில் இல்லாதபோது எந்த உயர் சாதிக்காரன்தான் முஸ்லிமைப் புகழப் போகிறான்?

இஸ்லாம் அடிமைத்தனத்தை ஒழித்தது.

இஸ்லாம் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற தாழ்வு மனப்பான்மையைப் போக்கியது.

அன்பால் அரவணைக்கும் இஸ்லாம், பண்பால் உயர்ந்து வளர்ந்து நிற்கிறது.

இனியும் வளரும், உயரும், பரவும், ஓங்கி ஒலிக்கும்!

# ஸூஃபியாக்களின் பார்வையில் அவ்வல் கலிமாவின் அந்தரங்கம்!

மவ்லவீ **பி.எம்.கலீலுர் ரஹ்மான்** மன்பயீ எம்.ஏ., எம்.ஃபில்.,

நாம் காணும் எதுவும் இல்லாத போது அல்லாஹ் தனித்து இருந்தான். அப்போது தன் இருப்பு நிலையை ஓசையாகவும், எழுத்தாகவும் வெளிப்படுத்த நினைத்தபோது அல்லாஹுதஆலா, லாஇலாஹ இல்லல்லாஹு எனும் கலிமாவை உருவாக்கினான்.

இந்தக் கலிமாவை உண்மைப்படுத்தி வாழும் ஒரு சமுதாயத்தை உருவாக்க நினைத்தே இந்த அண்டத்தை படைத்து, அதில் மனிதனையும் படைத்தான். இந்த ஒரு சொல்லினால் ஒட்டுமொத்த மனித இனமும் இரண்டு வகைகளாக பிரிக்கப்பட்டு இருக்கின்றனர். ஒன்று முஸ்லிம். மற்றொன்று காஃபிர்.

இந்தக் கலிமாவின் சிறப்பு இதுதான் எனச் சொல்லிவிட முடியாது. அளவிட முடியாது. அவ்வளவு சிறப்புகளையும் ஞானங்களையும் தன்னுள் மறைத்து வைத்திருக்கிறது.

அல்லாஹ், இந்த மனித இனத்திற்கு எவ்வளவோ அருட்கொடைகளை வழங்கி இருந்தாலும், அதில் அவன் வழங்கிய முதல் அருட்கொடை இந்தக் கலிமா தான்.

மேலும் முஸ்லிம்கள் அனைவரையும் ஒன்றிணைக்கக் கூடிய உண்மையான இணைப்புப் பாலமாகவும் இந்தக் கலிமா விளங்குகிறது.

இந்தக் கலிமாவை அடிப்படையாகக் கொண்டே ஒன்றிணைகின்றனர். அதற்காகவே எதிரிகளை எதிர்த்துப் போராடுகின்றனர். அதற்காகவே நேசிக்கின்றனர். மேலும் அதற்காகவே வெறுக்கின்றனர்.

இதன் காரணமாகவே முஸ்லிம் சமூகம் ஒரே உடலைப் போன்றும், ஒரே கட்டிடத்தைப் போன்றும் சேர்ந்து செயல்படுகிறது.

மேலும் இந்தக் கலிமாவை மொழிந்து அதன் அடிப்படையில் வாழும் மக்களுக்காக வானவர்கள் பிரார்த்திக்கிறார்கள். இதனால் வானவர்களுக்கும், மனிதர்களுக்கும் இடையே ஓர் இணைப்புப் பாலமாகவும் இந்தக் கலிமா விளங்குகிறது.

அல்லாஹ்வை நம்புவதைப் போன்று வேறு

யாரையும் நம்பக் கூடாது. அல்லாஹ்வை நேசிப்பதைப் போன்று வேறு யாரையும் நேசிக்கவும் கூடாது. அல்லாஹ்வை அஞ்சுவதைப் போன்று வேறு யாரையும் அஞ்சவும் கூடாது.

ஒவ்வொரு முஸ்லிமும் இந்தக் கலிமாவை நாவினால் மொழிந்து, உள்ளத்தால் உறுதி கொண்டு, செயல் வடிவில் வாழ்ந்து காட்டுவதோடு, அதற்கு மாற்றமான அனைத்து சொல், செயலிலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக கொள்ள வேண்டும்.

மேலும் இந்தக் கலிமாவில் இரண்டு நிலைப்பாடுகள் உள்ளன.

1. இறைவன் ஒருவன் மட்டுமே இருக்கிறான். அவனுக்கு இணையாக அல்லது அவனைப் போன்று என்று யாரும் கிடையாது. அதாவது குலதெய்வ வழிபாடு, பல தெய்வ வழிபாடு என்ற இணை வைத்தல் இஸ்லாத்தில் அறவே இல்லை. இந்தக் கருத்தை "லா இலாஹ" எனும் சொல் குறிப்பிடுகிறது.
2. கடவுளே இல்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். அவர்களுக்கும் பதில் சொல்லும் விதமாக இதில் "இல்லா அல்லாஹ்" கடவுள் இருக்கிறான். அவனும் கூட ஒருவன் மட்டுமே இருக்கிறான் என்கிற கருத்தை "இல்லா அல்லாஹ்" என்னும் சொல் கூறுகிறது.

லாஇலாஹ என்பதில் உள்ள இலாஹ என்பது ஒருமைச் சொல். ஆலிஹதுன் என்பது பன்மைச் சொல். இலாஹ என்பது ஒருமைச் சொல்லாக இருந்தாலும் வணங்கப்படுகிற அனைத்து இனத்தையும் குறிப்பிடும் ஒரு சொல்லாகும்.

அதைப்போல் 'லா' எனும் சொல் மனிதர்கள் எதையெல்லாம் கடவுளாகக் கருதுகிறார்களோ அவை அனைத்தையும் நஃபி - அவை கடவுள் இல்லை என்று குறிப்பிடும் ஒரு சொல்.

எனவே லாஇலாஹ-எந்த ஒரு கடவுளும் இல்லை என்பது தான் பொருள். அதாவது மனிதர்கள் எதை வணங்குவதற்கு தகுதியாகக் கருதி வணங்கினாலும், அல்லாஹ்வைத் தவிர அவை யாவும் வணங்குவதற்கு தகுதி இல்லாதவைதாம்.

"அல்குர்ஆனில் லாஇலாஹ இல்லல்லாஹு" எனும் சொல் 37 வசனங்களில் இடம் பெற்றுள்ளது. இந்த வசனங்களை ஓதியோ அல்லது ஜம்ஜம் தண்ணீர், குங்குமப்பூ, மழைத் தண்ணீர் ஆகியவற்றில் எழுதிக் குடித்தாலோ நோய் நிவாரணம் கிடைக்கும்" என ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

வாய் மணக்க
தாம்பூலம் சிறக்க...!

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**
தபால் பெட்டி எண் : 14,
புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

அந்த வசனங்களின் விபரம்:

2:163,255/ 3:2,6,18,18 4:87/ 5:73/ 6:102,106/ 7:158/ 9:31,129/ 10:90/ 11:14/ 13:30/ 16:2/ 20:8,14,98/ 21:25,87/ 23:116/ 27:26/ 28:70,88/ 35:3/ 37:35/ 39:6/ 40:3,62,65/ 44:8/ 47:19/ 59:22,23/ 64:13/ 73:9.

"பூமியிலுள்ள நகரங்கள், கிராமங்கள் மற்றும் பாலை வனங்களில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு கூடாரத்திலும் இஸ்லாத்தின் இந்தக் கலிமாவை அல்லாஹ் நுழைக்காமல் இருப்பதில்லை.

இதை ஏற்றுக் கொள்பவர்களை அல்லாஹ் கலிமா உடையவர்களாக்கி கண்ணியமளிப்பான். ஏற்காதவர்களுக்கு கண்ணியமளிக்கமாட்டான். பிறகு அவர்கள் முஸ்லிம்களுக்கு கட்டுப்பட்டு வாழ்வார்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூற, தாம் கேட்டதாக ஹள்ரத் மிக்தாத் பின் அஸ்வத் (ரளி) அவர்கள் கூறுகிறார்கள்.

## கலிமாவை தவறாக விளங்கிக் கொண்டவர்கள்

மக்கா இறை மறுப்பாளர்கள் அல்லாஹ்வை கடவுளாக நம்பினார்கள். அதே நேரம் அல்லாஹ்விற்கு உதவி ஒத்தாசைகள் செய்யக்கூடிய துணை கடவுள்களாக பலரையும் நம்பி இருந்தார்கள்.

அப்பொழுதுதான் 'லாஇலாஹ இல்லல்லாஹு - அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த கடவுளும் இல்லை' என்கிற சொல் நபிகள் நாயகம் அவர்களால் முன்மொழியப்பட்டது. அப்பொழுது அவர்கள், 'இந்த முஹம்மது எல்லா இலாஹுகளையும் அல்லாஹ் என்று சொல்கிறார். இது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே! இது நிச்சயமாக பொய்யாகும்' என்று கூறினர்.

மேற்படி சம்பவத்தை அல்லாஹ் தன் திருமறையில் பின்வருமாறு சொல்லிக் காட்டுகிறான்.

"இவர் [எல்லா] தெய்வங்களையும் ஒன்றாக ஆக்கி விட்டாரா? நிச்சயமாக இது ஓர் ஆச்சரியமான விஷயமே!"

"[இவரை விட்டும் விலகிச்] செல்லுங்கள். உங்கள் தெய்வங்களை உறுதியுடன் பற்றிக் கொள்ளுங்கள். நிச்சயமாக இ[வரது பிரச்சாரத்]தில் ஏதோ [சுயநலம்] காணப்படுகிறது" என்று அவர்களின் தலைவர்கள் கூறினர்."

"வேறு [எந்த] சமுதாயத்திலும் நாம் இது [போன்று] கேள்விப்பட்டதில்லை. இது [இவருடைய] கற்பனையே அன்றி வேறில்லை'

என்று மக்கா இறை நிராகரிப்பாளர்கள் கூறினார்கள்."

- அல்குர்ஆன் (38:5, 6, 7)

அதாவது மக்கா இறை மறுப்பாளர்கள் அல்லாஹ்வை உயர்ந்த கடவுளாகவும், லாத், உஜ்ஜா போன்ற பிற கடவுள்களை சிறிய கடவுள்களாகவும் நினைத்திருந்தனர். மேலும் அவர்கள் வழிபட்டு வந்த 300க்கும் மேற்பட்ட தெய்வங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு வகையான சக்தி இருப்பதாகவும் நினைத்திருந்தார்கள்.

ஆனால் நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹ் ஒருவன் மட்டுமே இறைவன்; வேறு கடவுளே இல்லை; அவன் ஒருவனுக்கே அனைத்து ஆற்றலும் இருக்கின்றது" என்று சொன்னதும் அவர்கள் ஆச்சரியப்பட்டு திகைத்து நின்றார்கள்.

ஏனென்றால் மக்கா இறை நிராகரிப்பாளர்களிடம் "லாஇலாஹ இல்லல்லாஹு" என்ற கலிமாவை முன்மொழியப்பட்டதும் "அனைத்து கடவுள்களையும் இது உள்ளடக்கிக் கொள்ளும் என்றே நினைத்திருந்தார்கள். ஆனால் அதற்கு நேர்மாறான கருத்தை நபி (ஸல்) அவர்கள் உரைத்தபோது, அவர்களால் அதை ஏற்க இயலவில்லை என்பதைத் தான் மேற்கண்ட வசனங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

## அவ்வல் கலிமாவில் ஆறு விஷயங்கள்

இந்தக் கலிமா ஆறு விஷயங்களை உள்ளடக்கி இருக்கிறது. இந்தக் கலிமாவை சொன்ன ஒவ்வொருவரும் இந்த ஆறு விஷயங்களையும் தம் வாழ்நாள் முழுவதும் முழுமையாக கடைபிடித்து வாழ வேண்டும்.

1. வணக்க வழிபாடுகளை, அல்லாஹ்வுக்காக

### நபி (ஸல்) அவர்களை நேசிப்பவருக்கு என்ன நேரும்?

ஹள்ரத் ஸஈதுப்னு அபீஸஈத் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : "ஹள்ரத் அபூஸஈத் குத்ரீ (ரளி) அவர்கள் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களிடம், தமது வறுமையையும், தனக்கு ஏற்பட்டுள்ள தேவையையும் எடுத்துக் கூறினார்கள். ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், அபூஸஈத்! பொறுமை கொள்வீராக! வெள்ளப் பெருக்கின்போது வெள்ளம் ஆற்றின் மேல் பகுதியிலிருந்தும், மலை முகட்டிலிருந்தும் பள்ளத்தை நோக்கிப் பாய்வதைப் போல் உங்களில் என் மீது நேசங்கொண்டவருக்கு வறுமை வேகமாக வந்தடையும்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(நூல்: முஸ்னத் அஹ்மத்)

மட்டும் நிறைவேற்ற வேண்டும்.

2. அல்லாஹ்வினால் அருளப்பட்டுள்ள அனைத்தைக் கொண்டும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.
3. அல்லாஹ்வுக்கு மாற்றமாக வணங்கப்படும் அனைத்தையும் நிராகரிக்க வேண்டும்.
4. லாஇலாஹ இல்லல்லாஹுவின் அடிப்படையில் அல்லாஹ்வும், அவனது தூதரும் சொன்னவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.
5. லாஇலாஹ இல்லல்லாஹு எனும் சொல், அறிவோடு இருப்பது, உறுதியாக இருப்பது, உள்ளத் தூய்மையோடு இருப்பது, உண்மையாக இருப்பது, நேசிப்பது, அடிபணிவது, ஏற்றுக் கொள்வது ஆகியவற்றை அல்லாஹ்வோடு தொடர்புபடுத்தி செயல்படுத்த வேண்டும்.
6. லாஇலாஹ இல்லல்லாஹுவை முறிக்கக்கூடிய விஷயங்களில் ஒன்றை செய்யாமல் இருந்தாலும் அவன் தொடர்ந்து முஸ்லிமாகவே இருப்பான்.

லாஇலாஹ இல்லல்லாஹு என்பதின் பொருள். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று பொருள் கொள்வதே சரியாக இருக்கும்.

"அல்லாஹ்வைத் தவிர (வணக்கத்திற்குரியவன்) வேறு இறைவன் இல்லை" என அநேக பழந்தமிழ் நூல்களில் எழுதப்பட்டுள்ளது.

அடைப்புக்குறிக்குள் உள்ள "வணக்கத்திற்குரியவன்" எனும் வார்த்தையை பயன்படுத்தியிருப்பதின் நோக்கம், "அல்லாஹ் ஒருவன் மட்டுமே வணக்கத்திற்கு தகுதியானவன்; அவனைத் தவிர வேறு யாரும் அண்டத்தில் வணங்குவதற்கு தகுதியானவன் இல்லை" என்பதை வலியுறுத்தவும், நம் முஸ்லிம்களை ஒரு முகப்படுத்தவும் இந்த ஒரு வார்த்தையை சுன்னத் வல் ஜமாஅத் கொள்கையுடைய நம் முன்னோர்கள் சேர்த்திருக்கிறார்கள்.

வணக்கத்திற்கு தகுதியாக இருக்கும் ஒருவனிடத்தில் மட்டுமே ஆக்கும் சக்தியும், அழிக்கும் சக்தியும், உணவளிக்கும் சக்தியும், இன்னும் இது போன்று அண்டத்திலுள்ள உயிரினங்கள் அனைத்திற்கும் தேவையான சக்திகளை வழங்குவதற்கும் தகுதியானவனாக அல்லாஹ் இருக்கிறான் என்பதை புரிய வைக்கவே 'வணக்கத்திற்குரியவன்' என்கிற வார்த்தையை நம் முன்னோர்கள் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

(தொடரும்)

தொடர் : 2 "படைப்புகள் சொல்லும் பாடம்"

# கடல் நீர்

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
**பீ.ஹாமிது அப்துல் ஹை,** எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

அவன்தான் கடலை [உங்களுக்கு] வசப்படுத்திக் கொடுத்தான். அதிலிருந்து நீங்கள் புத்தம் புதிய இறைச்சியை உண்பதற்காகவும், நீங்கள் அணிவதற்கான ஆபரணங்களை அதிலிருந்து எடுப்பதற்காகவும் [கடலை வசப்படுத்தினான்] கப்பல்கள் கடலைக் கிழித்துக் கொண்டு செல்வதை [நபியே] நீர் காணலாம். [கப்பலில் பயணித்து] நீங்கள் இறையருளைத் தேடவும், நீங்கள் நன்றி செலுத்தவும் தான் [அல்லாஹ் இவ்வாறு வசப்படுத்தினான்]'.

- அல்குர்ஆன் (16 : 14)

"கடலில் வேட்டையாடப்பட்டதும், கடல் உணவும் உங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன"

- அல்குர்ஆன் (5 : 96)

பூமிப்பரப்பில் 71 சதவீதம் இடம் கடல் நீரால் ஆக்கப்பட்டுள்ளது. மீதி 29 சதவீதம் இடமே நிலத்தால் ஆக்கப்பட்டு, அதில் மனிதர்களும், மற்ற உயிரினங்களும் வாழ்கின்றன.

அட்லாண்டிக், பசிபிக், இந்தியா, ஆர்டிக், அண்டார்டிக் என ஐம்பெரும் கடல்கள் உள்ளன.

பசிபிக் பெருங்கடல் அதிக நீர்ப் பரப்பைக் கொண்டது. அதன் பரப்பு 15 கோடியே 62 இலட்சத்து40 ஆயிரம் சதுர மீட்டர் ஆகும்.

அதில் பாதி அட்லாண்டிக் பெருங்கடல்; மூன்றாவது இந்திய பெருங்கடல்; அது குமரி முதல்தென்துருவம்வரை வியாபித்துள்ளது.

அண்டார்டிக் பெருங் கடல் தென் துருவத்திலும், ஆர்டிக் பெருங்கடல் வடதுருவத்திலும் உள்ளன. இவை முழுவதும் உறைந்துள்ளன.

கடல் நீர் அருந்தவியலாதவாறு உப்புக் கரிப்பதாகும். பூமியின் ஆற்று நீர் கொண்டு வரும் கனிமங்களே (Minerals) கரிப்புக்குக் காரணம். ஆண்டு தோறும் பல இலட்சம் டன் கனிமங்கள் கடலில் கலக்கின்றன. கடல் நீர் கரிப்பதால்தான், கடல் நீர் கெட்டு விடாமல் பாதுகாக்கப்படுகிறது!

உலகிலுள்ள மற்ற பிற நீர் வளங்கள் அனைத்தும் சேமித்து வைக்கும்போது கெட்டு

விடுவதைக் காண்கிறோம். இதற்கு ஒரேயொரு விதி விலக்கு இறையருள் பொங்கும் ஜம்ஜம் நீர் மட்டுமே!

கடல் உப்பு, நிலத்திலுள்ள பாறைகளிலிருந்தும், கடலின் கீழ்தளத்திலுள்ள துவாரங்கள் மூலமாகவும் அதிக அளவு கடலுக்குக் கிடைக்கிறது.

பாறைகளே அதிகம் உப்பை தருவனவாகும். மழைநீர் சற்று அமிலத்தன்மை கொண்டது. அது பாறைகள் மீதுவிழும்போது பாறையை அரித்து விடுவதால், அவற்றிலுள்ள அயனிகள் (Ions) மழைநீரோடு கலந்து பாய்ந்து இறுதியில் கடலில் கலந்து விடுகின்றன. கடல் நீரிலுள்ள நுண்ணுயிர்கள் (Organisms) கடல் நீரில் கரைந்துள்ள அயனிகள் பலவற்றை நீக்கி விடுன்றன. மீதமுள்ளவற்றின் மூலம் கடல் நீரின் திரட்சி அதிகமாக்கப்படுகிறது.

## வெப்பத்திரவம்

கடலின் அடித்தளத்திலுள்ள துவாரங்கள் மூலம், வெப்பத்திரவம் கடலுக்குக் கிடைக்கிறது.

பூமியின் மையப்பகுதி (Core of Earth)யில் காணப்படும் கடும் வெப்பமுள்ள பாறைக் குழம்பு (Magma) கடல் நீரை சூடாக்கி, கடலுக்குள் அனுப்புகிறது.

கடல் நீரிலுள்ள வெப்பத் தன்மையால் பல இரசாயனச் செயல்கள் நடைபெறுகின்றன.

கடலுக்கடியிலுள்ள பாறைகளில் ஏற்படும் எரிமலை வெடிப்புகள் மூலம் சில உப்புகள், நேரடியாகவே கடல் நீரில் கலந்து விடுகின்றன.

நிலம், மற்றும் கடல்நீருக்குக் கீழே தோற்றுவிக்கப்படும் உப்புக்குவியல் (Salt domes) மூலமும் கடல் உப்பைப் பெற்றுக் கொள்கிறது. உலகின் பல பகுதிகளில் உப்புக் குவியல்கள் அமைந்துள்ளன. இவை ஏற்பட நீண்டகாலம் பிடிக்கும். மெக்ஸிகோ வளைகுடாப் பகுதியில் இவை அதிகம் காணப்படுகின்றன.

இரண்டு முக்கிய அயனிகள், கடல் நீரில் அமைந்துள்ளன. அவை சோடியமும், குளோரைடும் ஆகும். இதன் கலவை உப்பாகும். இவ்விரண்டும் 85% கடல் நீரில் உள்ளன. 10% மெக்னீசியமும், சல்பேட்களுமாகும். 5% மற்றவை.

ஒரு லிட்டர் கடல் நீரில் 3500 மில்லி கிராம் உப்பு கலந்துள்ளது.

கடல் நீரின் உப்புத் தன்மை (Salinity) வெப்பம், நீராவி மாற்றம், திடத்தன்மை (Precipitation) ஆகியவற்றினால் மாற்றமடைகிறது. பூமத்திய ரேகை அருகில், உப்புத் தன்மை குறைந்துகாணப்படும். துருவங்களிலும் உப்புத் தன்மை குறையும். கடல் நீரின் கனத்தில் 3.5% சதவீதம் உப்புக்கரைசலினால் ஏற்படுகிறது.

உலகக் கடல்களிலுள்ள உப்பின் அளவு, நிலப்பரப்பு முழுவதும் உப்பு பரப்பப்பட்டு, 500 அடி ஆழம் அளவு நிரப்பப் படும் அளவுடையதாகும்.

நாளடைவில், கடல் உப்பி னளவு அதிகரிப்பதில்லை. பலவகையான அயனிகளை, கடல் வாழ் நுண்ணுயிர்கள் எடுத்துக்கொள்கின்றன என்பதே காரணம். மேலும் புதிய கனிமங்கள் உருவாகவும் உப்பு பயன்படுத்தப்படுகிறது.

நல்ல தண்ணீர் என்று நாம் குறிப்பிடும் நீரில் சில மில்லிகிராம் அளவு உப்பு தான் அமைந்திருக்கும்.

மத்திய கிழக்கு நாடுகளில் கடல் நீர் உப்பை நீக்கிவிட்டு, தண்ணீரை தாராளமாக மக்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

நம்மைச் சுற்றியுள்ள காற் றில் கலந்துள்ள வாயுக்கள் :

| | | |
|---|---|---|
| நைட்ரஜன் | - | 78.08% |
| பிராணவாயு | - | 20.95% |
| ஆர்கன் வாயு | - | 0.93% |
| கரியமிலவாயு | - | 0.038% |

கடல் நீரில் கரியமிலவாயு அதிகமுள்ளது. இவ்வாயு, மழை நீரில் கரைந்து கார்பானிக் அமில மாக மாற்றமடைந்து, பிறகு பைகார்பனேட் அயனிகளாக மாறி விடுகிறது. இது கடல் நீரை வெப்பம் ஆக்கிவிடுகிறது.

## ஓர் அரிய உபதேசம்

மனிதர்களின் செயல்கள் சீர்திருத்தம் அடைவதற்கான உயர்ந்த வழி எதுவென்றால், மனிதன் தன்னை எல்லோரையும் விட மிகவும் சிறியவனாகவும், கேவலமானவனாகவும், அற்பனாகவும், எல்லாப்பாகங்களிலும் நஜீஸ் சுற்றியுள்ள மலத்தில் உள்ள பூச்சியைப் போன்றும் நினைக்க வேண்டும்.

ஆனால், அல்லாஹ்வின் மன்னிப்பின் மீதும், ரஹ்மத்தின் மீதும் நம்பிக்கை வைக்க வேண்டும். தன்னுடைய எந்த அமலைக் கொண்டும் பெருமையடிக்கக் கூடாது.

மற்றவர்களது கெடுதிகளைப் பார்த்து அவர்களைக் கேவலமான பார்வையுடன் பார்க்கக்கூடாது. இந்த நிலையில் அல்லாஹ்விடம் மிக அதிகமான ரஹ்மத் வருகிறது.

அல்லாஹ் எல்லோருக்கும் இந்த உயர்ந்த தன்மைகளை நஸீபாக்கி வைப்பானாக.

– ஹள்ரத் முஃப்தீ **மஹ்மூதுல் ஹஸன் சாஹிப்** (ரஹ்) அவர்கள்

## கடல் நீரின் இரசாயன பொருட்கள்

மெக்னீசியம் கடல் நீரிலிருந்து அதிகம் பெறப்படுகிறது.

சோடியம், குளோரைடு, கால்சியம், பொட்டாசியம், கார்பன், பிரோமைடு, போரோன், ஃபுளூரைடு, பாஸ்பரஸ், நைட்ரஜன் ஆகியன.

வாயுக்கள்: பிராணவாயு, ஆர்கன் வாயு, கரியமில வாயு ஆகியன.

மாவுப் பொருட்கள் (Carbo hydrates) அமினோ அமிலங்கள் (Amino acids) இவற்றின் உற்பத்தி, கடலின் மேல் பகுதி (330 அடி) அளவில் நடைபெறுகிறது.

நிலத்திலிருந்து பாய்ந்து கடலில் கலக்கும் கழிவு நீர்கள், கனிமங்கள், செயற்கை உரப்பொருட்கள் ஆகியன கடல் செடிகள் (phyto plankton) நன்கு வளர உதவுகின்றன.

இச்செடிகளிலிருந்து, நாம் சுவாசிப்பதற்குத் தேவையான பிராண வாயுவை அதிக அளவில் பெற்றுக்கொள்கிறோம்.

## நீர் சுழற்சி (Water cycle)

கடல் நீர், நிலத்து நீர், பனிக் கட்டிகள் மரம், செடி, கொடிகளின் இலை நீர் ஆகியன நீராவியாக மாற்றம் பெறுகின்றன. முதன்மை நீராவி மாற்றம் உலகக் கடல் பரப்பிலிருந்து தான் நடைபெறுகிறது.

நீராவி (vapour) மாற்றத்தைத் தூண்டுவன :

பூமியில் நிலவும் வெப்பம், (Temperature) ஈரப்பதம் (Humidity) காற்று மற்றும் சூரியக் கதிர் வீச்சு (Solar radiation) ஆகியனவாகும்.

தண்ணீர் மேற்பரப்பிலிருந்து நீராவியாக மாற்றம் பெற்று மேலே செல்கிறது.

காற்று மண்டலத்தில் 10 முதல் 13 கி.மீ உயரம் வரை செல்லும். நீராவி மேகமாக மாற்றம் பெறுகிறது. பிறகு நீராவியிலிருந்து திரவமாக சுருங்கி விடுகிறது. (Condensation) நீர்த்திவலைகள் இணைந்து மழையாகப் பெய்து பூமியை அடைகின்றன.

## தண்ணீர் அளவு

அல்லாஹ் படைத்த அளவில் எந்த மாற்றமுமில்லை - **100%**

| | |
|---|---|
| சமுத்திரம் | 97.24% |
| பனிப்பாறைகள் | 2.14% |
| நிலத்தடி நீர் | 0.61% |
| தூய நீர் - ஏரி (Fresh water) | 0.009% |
| உள்நாட்டுக்கடல் | 0.008% |
| பூமியின் ஈரப்பசை | 0.005% |
| காற்று ஈரப்பசை (Humidity) | 0.001% |
| ஆற்று நீர் | 0.001% |
| மொத்தம் | 100% |

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

லப்பைக்! அல்லாஹும்ம லப்பைக்!!

# AL-BASHARATH HAJ & UMRAH SERVICE

IATA

LALPET OFF : No. 1, Quaid-e-Millath Salai, Opp. to Mubarak Jumma Masjid, Lalpet - 608 303, Cuddalore Dist. Ph : 041 44268114.
CHENNAI OFF: No. 37/77, Krishnan Koil Street, Mannadi, Chennai - 600 001. Ph: 044-66686742, Mob. +91 95669 92919 / 99942 54304.
Al Basharath Lalpet +919566992919 ticket.basharath@gmail.com albasharath.com

## புனித ரமலான் உம்ரா - 2024

| முழு 30 நாட்கள் | முதல் 15 நாட்கள் | இறுதி 15 நாட்கள் |
|---|---|---|
| ரூ. 1,99,000/- | ரூ. 1,30,000/- | ரூ. 1,70,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் 15 நாள் | 11-03-2024 | திங்கள் | 25-03-2024 | திங்கள் |
| முழு 30 நாள் | 14-03-2024 | வியாழன் | 14-04-2024 | ஞாயிறு |
| இறுதி 15 நாள் | 28-03-2024 | வியாழன் | 14-04-2024 | ஞாயிறு |

ரமலான் 30 நாள் சிறப்பு பேக்கேஜ்
ECONOMIC PACKAGE ரூ. 1,59,000/-
புறப்படும் நாள் : 14/03/2024 திரும்பும் நாள் : 14/04/2024

## புனித ஹஜ் பயணம் 2024

மிக மிக குறைந்த இடங்களே உள்ளன
புக்கிங் நடைபெறுகிறது ! முந்துங்கள் !!

## புனித உம்ரா பயணம் – 2023/24

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| டிசம்பர் | 03-12-2023 | ஞாயிறு | 17-12-2023 | ஞாயிறு | 15 நாள் |
| டிசம்பர் | 24-12-2023 | ஞாயிறு | 07-01-2024 | ஞாயிறு | 15 நாள் |
| ஜனவரி | 14-01-2024 | ஞாயிறு | 28-01-2024 | ஞாயிறு | 15 நாள் |
| ஜனவரி | 28-01-2024 | ஞாயிறு | 11-02-2024 | ஞாயிறு | 15 நாள் |
| பிப்ரவரி | 07-02-2024 | புதன் | 21-02-2024 | புதன் | 15 நாள் |
| பிப்ரவரி | 18-02-2024 | ஞாயிறு | 03-03-2024 | ஞாயிறு | 15 நாள் |
| பிப்ரவரி | 29-02-2024 | வியாழன் | 14-03-2024 | வியாழன் | 15 நாள் |

| எகானமி | டீலக்ஸ் | சூப்பர் டீலக்ஸ் | ஹில்டன் |
|---|---|---|---|
| ரூ. 85,000/- | ரூ. 98,000/- | ரூ. 1,10,000/- | ரூ. 1,39,000/- |
| ECONOMY | DELUXE | SUPER DELUXE | HILTON |

## ஷவ்வால் மாத உம்ரா பயணம் - 2024


| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | 15-04-2024 | திங்கள் | 29-04-2024 | திங்கள் | 15 நாள் |

சென்றவரை கேளுங்கள்! சென்று வருவோம் வாருங்கள்!!

விபரங்களுக்கு: உரிமையாளர். அல்ஹாஜ். O.M. முஹம்மது சுஹைபு செல்: 9994254304

# பூமியின் வாயு மண்டலம் (மீவளிமண்டலம்)

(Structure of the Atmosphere and the Ozone Layer)



## உப்பு நீரில் உயிர் வாழ்வது எப்படி?

கடல் நீரைக் குடித்தால், அதன் அதிக உப்பின் காரணமாக, தாகம் அதிகம் ஏற்படும். அதிக உப்பு உடல் நீரை வற்றச் செய்கிறது. நாம் தினமும் குடிக்கும் நல்ல தண்ணீரை விட, அதிக அளவு உப்பு கடல் நீரில் உள்ளது என்பதால் அதைக் குடிக்கும்போது அதிக உப்பு உடலில் தங்கி விடுகிறது.

ஆனால், அல்லாஹ்வின் அற்புதப் படைப்பில் மீன்கள், கடல் பறவைகள், கடற்கரையில் வதியும் உயிரினங்கள் ஆகியவற்றின் உடலிலிருந்து அதிக உப்பை வெளியேற்றும் செயல் முறை அமைக்கப்பட்டிருக்கிறது.

### கடற் பறவை (Albatross)

பசிபிக் தென்கடல் பகுதிகளில் வாழும் நீண்ட இறக்கைகளையுடைய அளவில் மிகப் பெரிய வெண்ணிறப் பறவைகள் இவை.

இப்பறவையின் கண்களின் அருகே உப்புச்சுரப்பிகள் உள்ளன. இச்சுரப்பிகள், குடிக்கும் கடல் நீரிலுள்ள அதிகஅளவு உப்பு நீரை, அலகுகள் (Beaks) வழியாக வெளியேற்றிக் கொள்கின்றன.

### மீன்கள்

மீன்களின் தலைப்பகுதியின் பக்கவாட்டி லுள்ள மூச்சு விடுவதற்கான உறுப்பு (Gill) அமைந்துள்ளது. இதன் வழியாக அதிகக் கடல் நீர் அதன் உடலுக்குள் பாய்கிறது. எனவே உடலில் சேரும் அதிக உப்பு, மீனின் சிறுநீரகங்கள் (Kidneys) மற்றும் உடல் தோல் வழியாக வெளியேற்றப்படுகிறது.

### சுறாமீன் (Shark)

இது கூரிய பற்களையுடைய பெரிய, ஆபத்தான கடல் மீன் வகையாகும்.

---

### நபி (ஸல்) அவர்களின் உம்மத்திற்கான உவமை

எனது நிலையும் உங்களின் நிலையும் ஒரு மனிதரின் நிலையை ஒத்திருக்கிறது. அவர் தீ மூட்டினார். அதில் வெட்டுக்கிளிகளும், விட்டில் பூச்சிகளும் விழலாயின. அவர் அதி(ல் விழுவதி)லிருந்து அவற்றைத் தடுத்துக் கொண்டிருந்தார். (இவ்வாறுதான்) நரக நெருப்பி(ல் விழுவதி)லிருந்து (உங்களைத் தடுக்க) உங்கள் இடுப்புகளை நான் பிடித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், எனது கையிலிருந்து நீங்கள் நழுவிக் (கொண்டு நெருப்பை நோக்கி ஓடிக்)கொண்டிருக்கிறீர்கள் என்று அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர்கள்

(நூல் : முஸ்லிம் : 4591)

சுறாமீன், தனது உடல் தோல் மற்றும் தலைப்பகுதி யிலுள்ள சுவாச உறுப்புகள் (Gills) மூலம் கடல் நீரை உறிஞ்சிக் கொள்கிறது.

இதன் ஜீரண உறுப்பில் அமைந்துள்ள சுரப்பி அமைப் பின் மூலம் உடலில் தேங்கும் அதிக உப்பை வெளியேற்று கிறது. அதனுடைய மலவாய் (Anus) அருகில் அமைந்துள்ள உப்பை நீக்கும் சுரப்பி மூலம், அதிக உப்பையும் அதன் உட லில் சுரக்கும் அதிக யூரியா (Urea)வையும், உடலிலிருந்து நீக்கிவிடுகிறது.

## கடல்நீரால் விளையும் பயன்கள்

கிரேக்க அறிஞர் ஹிப்போ கிராடெஸ் கூறினார் : கடல் நீர் உடற்புண்களை ஆற்றவல்லது. நோய்க்கிருமிகளால் தோற்று விக்கப்படும் நோய்களைத் தடுக்கிறது. உடல் வலியைப் போக்குகிறது.

டாக்டர்கள் கூறுவது : கடல் பக்கம் செல்லுங்கள்; உடல் நலம் பெறுவீர்கள்.

கடல் நீரில் குளிப்பதால் புண்கள் ஆறுகின்றன. உடல் தூய்மையடைகிறது. இளமை திரும்புகிறது.

கடல்நீரை குடிப்பதால், அதிலுள்ள நோயைத் தூண் டாத, நல்ல நுண் கிருமிகள் குடலுக்குக் கிடைக்கின்றன. குடல் பணிகளுக்கு உதவு கின்றன.

அதிக அளவில் சோடியம், அயோடின், கால்சியம், பொட்டாசியம் ஆகியன கடல் நீரில் பொதிந்திருப்பதால் வைரஸ் கிருமிகளை எதிர்த்து, நோயைத் தடுக்க கடல் நீர் உதவுகிறது.

நீண்டகால சரும நோய் களான சோரியாஸிஸ் (Psoriasis) எக்ஸிமா (Eczema) முதலியவற்றை குணப் படுத்துகிறது.

உடலில் நடைபெறும் 300 செயல்களுக்கு, மெக்னீசி யம் பெரிதும் உதவுகிறது. ஆகவே அது உயிர் வாழ உதவு வதோடு, சருமத்தின் ஈரப் பசையை நிலை நாட்டுகிறது. அதை பலப்படுத்தி, இளமை தோற்றத்தைத் தருகிறது.

முகத்திலுள்ள எலும்புக் குழி (sinuses) களில் ஏற்படும் வீக்கம், வலி, ஆஸ்துமா நோய் மற்றும் சில செடிகளின் பூந் தாது (Pollen)ப் பொடி மூச்சில் கலந்து உட்சென்று கண்கள் மூக்கு, தொண்டை ஆகியன பாதிக்கப்படுகின்றன. அழற்சிக் காய்ச்சல் - ஹே காய்ச்சல் (Hay Fever) ஆகிய நோய்களின், நோய் அறிகுறிகளின் வேகத்தைக் குறைப்பதற்கு கடல் நீச்சல் உதவுகிறது.

கடல் நீரின் உப்புத்தன்மை, முகக்குழிகளிலுள்ள வீக்கத்தை

குறைக்க உதவுகிறது. மருத்துவ மனையில் உப்பு நீரை (Saline water) அசுத்த இரத்தக் குழாய் வழியாக உடலில் ஏற்றுவது மூலம் வலி வேதனைகளைக் குறைக்கிறது.

மன உளைச்சலை நீக்குகிறது. மெக்னீசியம் அதிகம் கடல் நீரில் இருப்பதால், அது மன அமைதியைத் தூண்டுகிறது. கடல் நீரில் மிதக்கும் போது தியான அமைதி போன்ற நிலை உருவாகிறது. இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது. நல்ல உறக்கத்தையும் தூண்டவல்லது.

உடலில் இரத்த சிவப்பணுக்கள் 5% முதல் 20% அளவு கடலில் நீந்தும் போது உயர்கின்றன. இரத்த சோகை தடுக்கப்படுகிறது.

உடலின் நோய்த்தடுப்புத் திறனை வலிமைப்படுத்துகிறது.

இரத்த வெண்ணிற அணுக்கள் சிவப்பணுக்களை விட அதிக எண்ணிக்கையில் உயர்கின்றன.

உடலில் சர்க்கரை அளவு உயர்வதையும் தடை செய்கிறது.

உடல் வலி, மூட்டுவலி, அறுவை சிகிச்சைக்குப்பின்பு ஏற்படும் வலி ஆகியவற்றை குணப்படுத்துகிறது. இரத்த ஓட்டத்தை சீராக்குகிறது. குளிர்ந்த நீரில் நீந்துவதால், டோபமைன், செரடோனின் முதலிய சுரப்பி நீர்களைத் தூண்டி, ஒருவித மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கிறது. மேலும், திசுவீக்கம் (Cellulits) என்ற நோய் தூண்டும் வலி, வீக்கம் ஆகியவற்றை குணப்படுத்துவதற்கும் உதவுகிறது. நீந்தும்போது, உடல் திசுக்களில் ஏற்படும் அழுத்தம், நிணநீர் (lymph) ஓட்டம் அதிகரிப்பு முதலியன இதற்கு உதவுகின்றன.

கடல் நீரிலுள்ள அயோடின், தைராய்டு சுரப்பியின் நலத்தைப் பாதுகாக்க உதவுகிறது.

தைராய்டு சுரப்பி நீரான தைராக்ஸின் குறையும்போது பலவித நோய்கள் தூண்டப்படுகின்றன. இதற்குக் காரணம் இரத்தத்தில் அயோடின் அளவு குறைவதேயாகும்.

கடல் காற்றிலும் அயோடின் உள்ளது. கடற்பாசியிலும் அயோடின் இருப்பதால் அதை உண்பதால் உடலுக்கு அயோடின் கிடைத்து விடும்.

**“அல்லாஹ் கடலை உங்களுக்கு வசதியாக அமைத்திருக்கின்றான். அவன் கட்டளையைக் கொண்டு [பல தீவுகளுக்குக்] கப்பலில் சென்று [அதன் மூலம்] அவனுடைய அருளை நீங்கள் தேடிக்கொள்கிறீர்கள். [அதற்காக அவனுக்கு] நீங்கள் நன்றி செலுத்துவீர்களாக.”**

- அல்குர்ஆன் (45 : 12)

# பன்மொழி வித்தகரான மவ்லானா அவர்களின் இழப்பு!

திருவண்ணாமலை பெரிய பள்ளிவாசலில் நீண்ட நெடுங்காலமாக இமாமத் பணியை தனதாக்கிக் கொண்டவர். அல்குர்ஆன் ஓதுவதில் அழகிய குரல் வளம் கொண்டவர். கிராஅத் மட்டுமின்றி, அழகான உருது பாடலுக்கும் சொந்தக்காரர். அந்த ஊர் முழுவதிலும் உள்ள அனைத்து மக்களின் இதயத்திலும் “ஹஜ்ரத்” என்ற பெயரோடு இடம் பெற்றவர். முகம் பார்க்கும் கண்ணாடிகளில்கூட தன் அழகிய ஆற்றலைக் கொண்டு எழுதிக் கொடுப்பவர். அந்த ஊரிலும், அந்த ஊரைச் சுற்றிலும் பன்னூறு ஆலிம்கள் உருவாகுவதற்கு காரணமாக திகழ்ந்தவர். அரபி, உருது, பார்ஸி, ஆங்கிலம், தமிழ் ஆகிய எல்லா மொழிகளிலும் உயர் ஆற்றல் பெற்றவர். மேற்கண்ட எல்லா மொழிகளிலும் அழகிய எழுத்துக்களைக் கொண்டு மக்களை கவர்ந்தவர்.

இப்பேர்ப்பட்ட மாபெரும் ஆற்றலைப் பெற்ற மஹான் மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி **A.K.அன்ஸர் பாஷா மஃதனீ ஹள்ரத்** அவர்கள் தனது நான்கு ஆண் பிள்ளைகளையும் சமுதாயத்தின் சிறப்புமிகு ஆலிம்களாக உருவாக்கி, அர்ப்பணித்து விட்டு கடந்த 04.11.2023 சனிக்கிழமையன்று வஃபாத்தானார்கள்.

இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

அல்லாஹ் அன்னாரின் அனைத்து குற்றங்களையும் மன்னித்து, அவர்களின் அனைத்து சேவைகளையும் கபூல் செய்து, தனது உயர்ந்த ஜன்னத்துல் ஃபிர்தௌஸ் எனும் சுவனத்தில் அவர்களை நுழையச் செய்வானாக! அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், ஊரார் களுக்கும் ‘ஸப்ரன் ஜமீல்’ என்ற அழகிய பொறுமையைத் தந்தருள்வானாக!

**- குர்ஆனின் குரல் குழுமம்.**

# டேக் இட் ஈஸி பாலிஸி வேண்டாம் சமுதாயமே!

மவ்லவி ஹாஃபிழ் எஸ்.ஃபக்கீர் முஹம்மது ஜலாலி

'பாபரீ மஸ்ஜித் இடிக்கப்பட்டு விட்டது'. 'பரவாயில்லை. அத வச்சுத்தானே கலாட்டாவை ஏற்படுத்திக்கிட்டு இருந்தானுங்க. இப்ப இல்லை. இருக்கிற பள்ளிவாசல்ல தொழுகுற வேலையை பார்ப்போம்'. 'இன்னொரு பள்ளிவாசலில் சிவலிங்கம் இருக்காம். நோண்டிக்கிட்டு இருக்கானுங்க' 'அதனால நமக்கென்னங்க? அதை அந்த ஊர்க்காரன் பாத்துக்குவான்' 'இஸ்லாமிய சட்டத்தை எல்லாம் மாத்திக்கிட்டு இருக்கானுங்க' 'நமக்கென்ன அதப்பத்தி? நாம நம்ம பக்கம் வராம பாத்துக்குவோம்'.

உயிரையே குடிக்கும் பாதிப்பு வந்தாலும் சட்டையில் பட்ட அழுக்கை தட்டிட்டு அந்தப்பக்கம் போற மாதிரி பெரும்பான்மை முஸ்லிம் ஜனங்கள் 'டேக் இட் ஈஸி பாலிஸி' யில் இருக்கும் அவலம் காலங்காலமாக நடந்து கொண்டிருக்கிறது.

இஸ்லாமில் இருப்பது, கடமைகளைப் பேணுவது, பயான் களைக் கேட்பது மட்டும் முஸ்லிமின் அடையாளம் அல்ல. நம்மைச் சுற்றி நடக்கும் நல்லது கெட்டதுக்கு ரியாக்ஷன் செய் வதும் தான் இஸ்லாம் ஆகும். இல்லையேல் உணர்ச்சியற்ற முஸ்லிமாக, சொல்லப்போனால் ஜடமாக அடையாளம் காணப் படுவோம். C A A (CITIZENSHIP AMENDMENT ACT) குடியுரிமைச் சட்டம் வந்தது. இந்தியாவே கொந்தளித்தது. "ஷாஹின்பாக்" போராட்டங்களில் பெண்கள் கூட பங்கெடுத்தனர். ஆனால் எத்தனை பேர் அந்த நேரத்திலும் உணர்ச்சியற்று தான் உண்டு, தன் வேலை உண்டு என இருந்தார்கள் தெரியுமா?

இது ஒரு உதாரணம்தான். இதுபோல் நிறைய பாதிப்புகள் உங்கள் வீட்டினுள் புகுந்து பாய் போட்டு படுத்த பின்னும் சொரணையற்று இருந்து கொண்டு உங்களை முஸ்லிம் எனப் பெருமையுடன் சொல்லித் திரிந்தீர்கள். கவிஞர் வைரமுத்து சொன்னது போல் 'உங்கள் சட்டைப்பையில் தீ பற்றும்' வரை இப்படித்தான் இருப்பீர்கள்.

ஆனால் ஒன்று தெரியுமா? நீங்கள் இப்படியே இருந்தால் அல்லாஹ்வின் பார்வையை விட்டு தூரமாகிப் போவீர்கள்.

முஸ்லிம் உம்மத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிமுகப் படுத்தும்போது, அது ஒரு கட்டிடம். ஒவ்வொரு மனிதனும் அதன் ஒவ்வொரு செங்கலுக்குச் சமம் என்றார்கள்.

கட்டிடத்தில் எல்லா செங்கல்களும் பின்னிப் பிணைந்து இருந்தால் தான் அது கட்டிடம். ஆங்காங்கே ஒவ்வொரு செங்கல் உதிர்ந்திருந்தால் அது குட்டிச்சுவர். அந்த நிலைக்கு இஸ்லாமிய சமுதாயத்தை கொண்டு போய் விடாதீர்கள். முஸ்லிம்களை பாதிக்கிற விஷயங்களை நீங்கள் தலைவர்களாக நம்புகிறவர்கள் ஆதரிக்கிறார்கள் எனில், அவர்களை விட்டு வெளியே வாருங்கள். இல்லையெனில் நீங்கள் நயவஞ்சகர்களில் இணைக்கப்படு வீர்கள். நயவஞ்சகர்களுக்கு நரகத்தில் கூட அடிமட்ட இடம்தான்.

பொதுவாக உலக மக்களை பாதிக்கிற எந்த விஷயங்களுக் கும் எதிர்வினை ஆற்றுபவன்தான் மனிதன். அதிலும் முஸ்லிம், சக முஸ்லிமுக்காக உயிரையும் கொடுக்க வேண்டும். உலக மனிதர்களுக்காக உரிமைக்குரலும் கொடுக்க வேண்டும். அப்போதுதான் உலகில் வாழ தகுதி பெறுகிறான்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பொறுத்தவரையில் ஒவ்வொரு நாளும் ஃபஜ்ருக்குப்பின் அன்று உடல்நிலை சரியில்லாத முஸ்லிம்களை நலம் விசாரிப்பதிலும், மரணமானவர்களை அடக்கம் செய்யும் ஏற்பாடுகளில் நிற்பதையும் அன்றாடக் கடமைகளாகக் கொண்டிருந்தார்கள் என்றால், அடுத்தவர்களையும் நம்மவர்களாக எண்ணும் பெருந்தன்மை எவ்வளவு முக்கியம்? உணருங்கள்.

யார் எப்படிப் போனால் என்ன? நான் நன்றாக இருந்தால் போதும் என நினைக்கும் ஒவ்வொரு முஸ்லிமும் நபி (ஸல்) அவர்கள் கற்றுத்தந்த வழியில் முஸ்லிமே அல்ல. சொல்லப்போனால் மனிதனே அல்ல.

## எறும்புகளைப் போன்று...

“அட்டூழியம் செய்பவரையும், பெருமை கொள்பவரையும் கியாமத் நாளில் எறும்புகளைப் போன்று மாற்றப்படும். அவர் களை மக்கள் மிதித்துக் கொண்டு செல்வார்கள்” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்.

தருபவர் : அல்ஹாஜ் **கே.கே.செய்யது சுலைமான்,** தென்காசி.

# இலாபக் கணக்கு

மவ்லவி மு.முஹம்மது ஹைதர் அலி இம்தாதி

مَنْ جَاءَ بِالْحَسَنَةِ فَلَهُ عَشْرُ أَمْثَالِهَا وَمَنْ جَاءَ بِالسَّيِّئَةِ فَلَا يُجْزَى إِلَّا مِثْلَهَا وَهُمْ لَا يُظْلَمُونَ

**"ஒருவர் ஒரு நற்காரியம் செய்தால் அதுபோன்ற பத்து [நற்காரியங்களுக்கான கூலி] அவருக்கு உண்டு. [ஆனால்] யார் ஒரு தீமை செய்கிறாரோ அவருக்கு அது போன்ற [ஒரு மடங்கு] தண்டனையே வழங்கப்படும். அவர்கள் அநீதியிழைக்கப்பட மாட்டார்கள்."**

- அல்குர்ஆன் (6 : 160)

இறைவன் படைத்த படைப்புகள் பல்லாயிரம் இருந்தாலும், அதில் மனிதன் மட்டும் விசேஷ படைப்பாகும். இறைவன், பிற உயிரினங்களுக்கு வழங்காத நன்மை தீமைகளைப் பகுத்தறியும் ஆற்றலை மனிதனுக்கு மட்டுமே வழங்கினான். அந்தப் பகுத்தறிவை பயன்படுத்தும் மனிதன் சிறியதோ, பெரியதோ எதை செய்தாலும் அதில் இலாபத்தை எதிர் பார்ப்பான். இதுதான் மனித இயல்பு. இதை உணர்ந்திருக்கின்ற அல்லாஹுதஆலா மனிதன் செய்யும் ஒவ்வொன்றுக்கும் அதற்குரியப் பகரத்தை வழங்காமல், எதையும் இலவசமாக பெற்றுக் கொள்வதில்லை. இதுதான் இறைவனின் இயல்பு. எனவே, தமது அடியார்களின் நன்மை தீமைகளுக்கேற்றபடி கூலியையும் நிர்ணயித்துள்ளான்.

அன்பும் அருளும் நிறைந்த வள்ளல் குணம் கொண்ட அல்லாஹுதஆலா நன்மைக்கு பல மடங்கு நன்மைகளையும், தீமைக்கு ஒரு தீமையை மட்டும் பதிவு செய்கின்றான் என்று திருகுர்ஆனின் மூலம் வாக்குறுதி வழங்குகின்றான். வாக்குறுதி மாறாத வசனங்களின் மூலம் நம் வாழ்க்கையை எவ்வளவு வசந்தமாக்குகின்றான்.

அருமை நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள் : **"வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் [நன்மை, தீமைகளை பதிவு செய்யும் வானவர்களிடம்] கூறினான். "என் அடியான் ஒரு நன்மையைச் செய்ய நாடிவிட்டாலே அதை அவனுக்கு ஒரு நன்மையாக எழுதிவிடுங்கள். [எண்ணியபடி] அந்த நன்மையை அவன் செய்து முடித்தால் அது போன்று பத்து நன்மைகளாக எழுதி**

விடுங்கள். [என் அடியான்] ஒரு தீமையைச் செய்ய எண்ணி விட்டாலே அதை நீங்கள் பதிவு செய்து விடாதீர்கள். தான் எண்ணியபடி அவன் அந்த தீமையைச் செய்து விட்டால் அதை [ஒரேயொரு] குற்ற மாகவே பதிவு செய்யுங்கள்.''

பிறகு, "எவர் ஒரு நன்மை யைச் செய்கிறாரோ அவருக்கு அதைப் போன்று பத்து நன்மை கள் உண்டு'' [6 : 160] என்ற திரு வசனத்தை ஓதிக் காட்டி னார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல்: புகாரீ 7501, முஸ்லிம் - 203, திர்மிதீ - 2989, (முஸ்னது அஹ்மது)

## ஆறு வெள்ளிக்காசுகள்

ஹள்ரத் உபைதுல்லாஹ் பின் முஹம்மது (ரளி) அவர்கள் கூறியதாவது : ஹள்ரத் அலீ (ரளி) அவர்களிடம் ஒருவர் வந்து யாசகம் கேட்டார். அப்போது ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் தனது மகனார் ஹசன் அல்லது ஹுசைன் (ரளி) அவர்களை நோக்கி, "உன் தாயாரிடம் சென்று நான் கொடுத்த ஆறு வெள்ளிக்காசுகளில் ஒரு வெள்ளிக் காசை வாங்கி வா!'' என்று கூறினார்கள்.

அவர் சென்று திரும்பி வந்து, "அவர்கள் அந்த ஆறு வெள்ளிக்காசுகளை மாவு வாங்க கொடுத்திருப்பதாகக் கூறினார்கள்'' என்றதும் ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள், "எவர் தன் கையிலுள்ள பொருட்களை விட அல்லாஹ்விடமுள்ள பொருட்கள் மீது அதிக நம்பிக்கை கொள்ளமாட்டாரோ அதுவரை அவருடைய இறை நம்பிக்கை உண்மையானதாக ஆகாது'' என்று கூறி அந்த ஆறு வெள்ளிக் காசுகளையும் வாங்கி வரச் சொன்னார்கள். உடனே ஹள்ரத் பாத்திமா (ரளி) அவர்கள் அந்த ஆறு வெள்ளிக் காசுகளையும் கொடுத்து அனுப்பினார்கள். ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள், வெள்ளிக் காசுகளை அந்த யாசகரிடம் கொடுத்து விட்டார்கள்.

பின்பு ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் அதே நிலையில் அங்கு உட்கார்ந்திருந்தபோது, ஒரு மனிதர் விற்பதற்காக தன்னுடன் ஓர் ஒட்டகத்தை அழைத்து வந்தார். ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் இந்த ஒட்டகத்தின் விலை என்ன? என்று விசாரித்தபோது, அந்த மனிதர் 140 வெள்ளிக்காசுகள் என்றார். ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள், அந்த மனிதர் கூறிய விலையை பிறகு கொடுப்பதாக வாக்களித்து விட்டு அந்த ஒட்டகத்தை அங்கு கட்டி வைக்குமாறு கூறினார்கள். அந்த மனிதரும் அதற்கு சம்மதித்து

ஒட்டகத்தைக் கட்டி வைத்து விட்டுச் சென்று விட்டார்.

பின்பு ஒரு மனிதர் வந்து கட்டியிருந்த ஒட்டகத்தைக் காண்பித்து இந்த ஒட்டகம் யாருக்குரியது? அதன் விலை என்ன? எனவிசாரித்தார். ஹள்ரத் அலீ(ரளி) அவர்கள், "அது எனக்குரியது தான். அதன் விலை 200 வெள்ளிக்காசுகளாகும்" என்று கூறினார்கள். உடனே அவர், "நான் அதை வாங்கிக் கொள்கிறேன்" என்று கூறி, 200 வெள்ளிக்காசுகளைக் கொடுத்து ஒட்டகத்தை பிடித்துச் சென்றார். பின்பு, ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள், தான் ஒட்டகம் கடனாக வாங்கிய மனிதருக்கு கொடுக்க வேண்டிய 140 வெள்ளிக்காசுகளைக் கொடுத்து விட்டு, மீதமுள்ள 60 வெள்ளிக் காசுகளை தனது மனைவி ஹள்ரத் பாத்திமா (ரளி) அவர்களிடம் கொடுத்தபோது, "இது எவ்வாறு கிடைத்தது?" என்று அவர் வினவினார். ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள், (தலைப்பில் காணும்) திருவசனத்தை நினைவுகூர்ந்து "இந்த வெள்ளிக்காசுகள் தன் நபியின் மூலம் அல்லாஹ் நமக்கு வாக்களித்ததாகும்" என்று கூறினார்கள்.

(நூல் : கன்ஸுல் உம்மால், ஹயாத்துஸ் ஸஹாபா பாகம் - 2, பக்கம் - 191)

## சுருக்குப்பையில் இருந்தவை

ஹள்ரத் மக்கீ பின் இப்ராஹீம் (ரஹ்) அவர்கள் கூறினார்கள் : (ஒரு நாள்) நாங்கள் இப்னு ஜுரைஜ் அல் மக்கீ (ரஹ்) அவர்களிடம் இருந்தோம். அப்போது (வறியவர்) ஒருவர் வந்து அவர்களிடம் (உதவி) கேட்டார். அப்போது இப்னு ஜுரைஜ் (ரஹ்) அவர்கள் தம் காசாளரிடம், "அவருக்கு ஒரு பொற்காசு (தீனார்) கொடுங்கள்" என்றார்கள். காசாளர் "என்னிடம் ஒரு பொற்காசு மட்டுமே உள்ளது. அதை நான் கொடுத்து விட்டால் நீங்களும் உங்களுடைய குடும்பத்தாரும் பசியோடு இருக்க நேரிடும்" என்றார். இதைக் கேட்ட ஜுரைஜ் (ரஹ்) அவர்கள் கோபப்பட்டார்கள். "அதைக்கொடு" என்றார்கள்.

பின்னர் நாங்கள் ஜுரைஜ் (ரஹ்) அவர்களிடம் இருந்த போது, ஒரு மனிதர் ஒரு கடிதத்தையும், ஒரு சுருக்குப்பையையும் கொண்டு வந்தார். அதை ஜுரைஜ் (ரஹ்) அவர்களின் சகோதரர்களில் ஒருவர் கொடுத்து அனுப்பியிருந்தார்.

அக்கடிதத்தில் "நான் ஐம்பது பொற்காசுகள் கொடுத்துள்ளேன் (பெற்றுக் கொள்க)"

**குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:**
**94420 56547**

என்று எழுதப் பெற்றிருந்தது. ஜுரைஜ் (ரஹ்) அவர்கள் அந்தப் பையை அவிழ்த்து எண்ணிப் பார்க்க, அதில் ஐம்பத்தொரு பொற்காசுகள் இருந்தன.

அப்போது ஜுரைஜ் (ரஹ்) அவர்கள் தம் காசாளரிடம் "நீ அந்த (வறியவருக்கு) ஒரே யொரு பொற்காசு தான் கொடுத்தாய். அதை உனக்கு அல்லாஹ் திருப்பிக் கொடுத்ததோடு ஐம்பது பொற்காசுகளைக் கூடுதலாகவும் உனக்கு வழங்கி விட்டான் என்று கூறினார்கள்"

(நூல் : திர்மிதீ - 1958)

## மாவு என்ன ஆனது?

"எவரேனும் நற்காரியம் ஒன்றைச் செய்தால் அவருக்கு அதைவிட மேலானது உண்டு"

- அல்குர்ஆன் (28 : 84)

இறைநேசர் ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்களின் மனைவி ஒரு முறை மாவு பிசைந்து வைத்து விட்டு பக்கத்து வீட்டிலிருந்து நெருப்பு வாங்கி வரச் சென்றார். சென்ற பின்னர் ஒரு யாசகர் வந்தார். அன்னார் அந்த மாவை யாசகருக்கு கொடுத்து விட்டார்கள்.

அன்னாரின் மனைவி நெருப்பு வாங்கிவிட்டு வந்து பார்த்தால் மாவு காணவில்லை. கணவரிடம் "மாவு என்ன ஆனது?" என்று வினவ, அவர்கள் "அது ரொட்டி சுடப் போயிருக்கிறது!" என்றார்கள்.

அன்னாரின் மனைவி நம்பாமல் வற்புறுத்திக் கேட்க, அன்னார் "அதை நான் தர்மம் செய்து விட்டேன்" என்றார்கள். உடனே மனைவி, "சுப்ஹானல்லாஹ்! வீட்டில் இவ்வளவு மாவு தான் இருந்தது என்பதையும் தாங்கள் யோசிக்கவில்லையே! இப்பொழுது எல்லோரும் எதைச் சாப்பிடுவது? நமக்காக ஏதேனும் வேண்டுமல்லவா?" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஒருவர் பெரிய பாத்திரமொன்றில் வறுத்த இறைச்சியுடன் ரொட்டிகள் கொண்டு வந்து கொடுத்தார். அதைக் கண்ட அன்னாரின் மனைவி "இவ்வளவு சீக்கிரம் சமைத்துக் கொண்டு வந்து விட்டீரே! கூடுதலாக குர்மா ஆணம் வேறு கொண்டு வந்துள்ளீர்!" என்று (மகிழ்ச்சியுடன்) கூறினார். (நூல் : ரவ்ஜ்)

## அதிகமாக இலாபம்

நன்மை புரிந்தோருக்கு [அதன்] நற்கூலியும், [அதை விடக்] கூடுதல் நன்மையும் கிடைக்கும்"

- அல்குர்ஆன் (10 : 26)

ஜனாதிபதி ஹள்ரத் உமர் (ரளி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஒரு முறை கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. அதற்கு சில மாதங்களுக்கு முன்னர் ஷாம் தேசத்திற்குச் சென்றிருந்த ஹள்ரத் உஸ்மான்

(ரளி) அவர்களின் வியாபாரக் கூட்டம் பெருமளவு உணவுப் பொருட்களுடன் ஆயிரம் ஒட்டகைகளில் ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்களின் வீட்டு வாசலில் வந்திறங்கியது.

இதனைப் பற்றி கேள்விப் பட்ட மதீனா மற்றும் அதன் சுற்றுப்பகுதி வியாபாரிகள் அனைவரும் ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்களின் வீட்டின் முன்பாக கூடிவிட்டனர்.

“மக்களின் தேவைகளை நீங்கள் நன்கறிவீர்கள். எனவே, இந்த மொத்த சரக்கையும் எங்களிடமே விலைக்கு விற்று விடுங்கள். வேறு யாருக்கும் விற்று விடாதீர்கள்” என்று ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்களிடம் கேட்டுக் கொண்டனர். அப்போது, ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள் “எனது இந்த சரக்குக்கு எவ்வளவு இலாபம் தருவீர்கள்?” என்று அந்த வியாபாரிகளிடம் வினவினார்கள். அந்த வியாபாரிகளில் ஒருவர் மூன்றில் ஒரு பாகம் இலாபம் தருவதாகக் கூறினார். மற்றவர் அரை பாகம் இலாபம் தருவதாகக் கூறினார். இன்னுமொருவர் முக்கால் பாகம் இலாபம் தருவதாகக்கூறினார். அதைவிட அதிகமாக இலாபம் தருபவர் உங்களில் எவரேனும் இருக்கிறாரா? என்று அவர்கள் கேட்டார்கள். இந்த மதீனாவில் அதற்கு மேல் இலாபம் தர எவரும் தயாரில்லை என்று ஒட்டு மொத்தமாக வியாபாரிகள் கூறிவிட்டனர்.

“இல்லை! ஒருவன் எனக்கு பத்துமடங்கு இலாபம் தருவதாகக்கூறுகிறான். எனவே, அவனிடம் இதை விற்று விட்டேன்” என்று கூறி அனைத்தையும் தர்மம் செய்து விட்டார்கள். இறுதியில் எதுவும் மிஞ்சவில்லை. (நூல் : பிக்ஹுத் தாஜிருல் முஸ்லிம்)

## ஒரே ஒரு ரொட்டித்துண்டு

இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் அறிவிக்கிறார்கள் : “ஒருமுறை ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்களிடம் ஓர் ஏழை வந்து யாசகம் கேட்டார். அப்போது அன்னையவர்கள் நோன்பு வைத்திருந்தார்கள். மேலும் அன்னையின் வீட்டில் ஒரே ஒரு ரொட்டித் துண்டு தான் இருந்தது. அன்னையவர்கள் தன் பணிப்பெண்ணை அழைத்து, “அதை அவருக்கு கொடுத்து விடு!” என்று கூறினார்கள். அப்போது அந்தப் பணிப்பெண், “நீங்கள் நோன்பு திறப்பதற்கு அந்த ரொட்டியை தவிர வேறெதுவுமில்லை” என்று கூறினாள். மீண்டும் அன்னையவர்கள், “அதை அவருக்கு கொடுத்து விடு” என்று கூறினார்கள். பணிப்பெண், அந்த யாசகம் கேட்ட மனிதருக்கு தங்களிடம் இருந்த ஒரே ஒரு ரொட்டித் துண்டை கொடுத்துவிட்டாள்.

பணிப்பெண் கூறுகிறாள். மாலையானதும் எங்களுக்கு அன்பளிப்பு வழங்கும் ஒருவர் ஆட்டிறைச்சியையும், அதனுடன் ரொட்டிகளையும் அன்பளிப்பாக வழங்கினார். அப்போது அன்னையவர்கள் என்னை அழைத்து, "இதிலிருந்து சாப்பிடுவாயாக! இது உன் ரொட்டியைவிட (அதாவது நீ தர்மம் செய்வதற்கு யோசித்த அந்த ரொட்டியைவிட) சிறந்தது" என்று கூறினார்கள். (நூல்:- முஅத்தா மாலிக் பாபு தர்ஙீபி ஃபிஸ்ஸதகா-1848)

## திருடனின் கணக்கு

"நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுள்ளவர்களிமிருந்து தான் ஏற்றுக் கொள்வான்."
- அல்குர்ஆன் (5:27)

அண்ணல் நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள். ஒரு மனிதன் விலக்கப்பட்ட [ஹராமான] வழிகளில் செல்வத்தை சம்பாதித்து, அதிலிருந்து தர்மம் செய்கிறான் என்றால், அது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
அறிவிப்பாளர்: ஹள்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரளி) அவர்கள்
(நூல்: முஸ்னது அஹ்மத், மிஷ்காத் பக்கம்-242)

ஒருவன் கடைத்தெருவில் பழமொன்றை திருடினான். அப்போது அந்த வழியாக வந்த ஓர் ஏழை அவனிடம் யாசகம் கேட்க, தான் திருடிய பழத்தை அவன் தர்மமாக கொடுத்தான். அதை இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் பார்த்தார்கள். இமாமவர்கள் அவன் அருகே சென்று, "(தம்பி! நீ என்னப்பா! திருடவும் செய்கிறாய்! தர்மமும் கொடுக்கிறாய்!) ஏன் இவ்வாறு செய்கிறாய்?" எனக் கேட்டார்கள்.

தன்னிடம் கேள்வி கேட்பவர் யார்? என்பதை அறியாத அவன், "பெரியவரே! நான் ஒரு கணக்காக தான் செய்கிறேன். அல்லாஹ் ஒரு பழத்தை தர்மம் கொடுத்தால் பத்து பழங்கள் தர்மம் கொடுத்த நன்மைகளை வழங்குவான். ஆனால், ஒரு பழத்தைத் திருடியதற்கு ஒரு பழம் திருடிய பாவம் தான் எழுதுவான். எனவே கிடைத்த நன்மைகளில் திருடியதற்கான ஒரு பாவம் போக மீதம் ஒன்பது நன்மைகள் எனக்கு கிடைக்குமல்லவா? இது நிகர இலாபம் தானே!" என்றான்.

அவனது அறியாமையைக் கண்டு புன்னகை புரிந்த

நிறைவுபெற்ற உங்களின் சந்தாக்களை புதுப்பித்து விட்டீர்களா?

இமாம் அவர்கள், "தம்பி! அல்லாஹ் தூய்மையானவன். தூய்மையானவற்றையே ஏற்றுக்கொள்வான். நீ செய்த தர்மம் ஏற்றுக்கொள்ளப் படாது. நீ திருடியதற்கான பாவம் மட்டுமே உனக்கு மிஞ்சும்" என்றார்கள்.

இறைவனுக்காக செலவு செய்ய பணக்காரனாக இருக்க வேண்டும் என்பதல்ல. இருப்பதில் கொஞ்சம் கிள்ளிக் கொடுத்தால் போதும். அள்ளிக் கொடுக்கத்தான் வேண்டுமென்ற அவசியமில்லை.

கிள்ளிக்கொடுப்பவை அனுமதிக்கப்பட்ட (ஹலாலான) முறையில் சம்பாதித்ததாக இருந்தால் போதும். மாறாக, அள்ளி அள்ளிக் கொடுப்பவை அனுமதிக்கப் படாத (ஹராமான) முறையில் சம்பாதித்ததாக இருந்தால் அது வீணானவையே!

இறைவனுக்காக அர்ப் பணிக்கப்படும் அனைத்தி லும் அதிகப்படியான இலாபம் கிடைக்கப்பெறும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, நாம் அனுமதிக்கப்பட்ட (ஹலா லான) முறைகளில் சம்பாதித்து அதனை இறைவழியில் அர்ப் பணித்து இறையருளைப் பெறுவோமாக!


# கோட்டக்கல் ஆர்ய வைத்ய சாலா

அங்கீகரிக்கப்பட்ட டீலர்

Kottakkal ayurveda

**சிறப்பு சிகிச்சைகள் :**

- எலும்பு சம்பந்தமான வியாதிகள்
- முதுகு வலி & கழுத்து வலி
- மூட்டு வலி
- தலைவலி
- பக்கவாதம்
- தூக்கமின்மை
- நீரழிவு மற்றும் நீரழிவு புண்
- குழந்தைகளின் நோய்கள்

கொரோனாவுக்கு பிந்திய விளைவுகள்

- தோல் வியாதிகள்
- குழந்தையின்மை
- அனைத்து மூல வியாதி
- முடி கொட்டுதல்
- ஆண்மைக்குறைவு
- மாதவிடாய் குறைபாடு
- உடல்பருமன் மேலாண்மை
- ஆஸ்துமா, அலர்ஜி

பக்க விளைவுகள் இல்லை (எல்லா வயதினருக்கும்)

## குட்லக் நாட்டு மருந்துகடை

(மொத்தம் & சில்லரை விற்பனை)

புதிய பஸ்நிலையம் எதிரில், **புதுக்கோட்டை** – 622001.

94433 46313, 98650 48082 Email : kottakkalayurvedapdkt@gmail.com

# ஆன்மிக வைத்தியம்

**- அன்வர் ஜீ,** சேலம் – 5.

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. நபி (ஸல்) அவர்களிடம் செல்வ விருத்திக்கு துஆ செய்யும்படி மூன்று தடவைகள் கேட்டதற்கு நோயற்ற வாழ்வுக்கே துஆ செய்தார்கள்.

நாம் நமது நோய்களுக்கு மருத்துவம் பார்ப்பதுடன் ஆன்மிக மருத்துவத்திற்கும் முக்கியத்துவம் அளிப்போமாக!

புதுப்புது வியாதிகள் தோன்றும் காலம் இது. மருந்துகளுக்கே அடங்காத வியாதிகளும் ஏராளம். ஒரு வியாதிக்கு மருத்துவம் செய்தால் வேறு ஒரு வியாதி தோன்றுகிறது. இதனைப் போக்கிட திப்புரூஹானி வைத்தியம் செய்திடுங்கள்.

ஒளுவுடன் கிப்லாவை முன்னோக்கி மனஉறுதியுடன் மனதில் நிய்யத் செய்து ஒரு பாத்திரத்தில் சுத்தமான தண்ணீரை எடுத்து அதில் ஸலவாத் மூன்று தடவை ஓதி, பிஸ்மில்லாஹ் கூறி... பின்னர் கீழ்க்கண்ட சூராக்களை ஓத வேண்டும்.

- அல்ஹம்து சூரா – 70 தடவைகள்
- குல்ஹுவல்லாஹு அஹது - 70 தடவைகள்.
- குல்அஊது பிரப்பில் ஃபலக் - 70 தடவைகள்.
- குல் அஊது பிரப்பின்னாஸ் - 70 தடவைகள்.
- ஆயத்துல் குர்ஸீ - 70 தடவைகள்.
- மூன்றாம் கலிமா – 70 தடவைகள்.

ஓதி, நோயுள்ளவர்களுக்கு தண்ணீரில் ஊதி குடிக்கச் செய்தால் நோய் குணமாகும்.

## கூலி வழங்கப்படும் செயல்கள்

“அல்லாஹ்வின் திருப்தியை மட்டுமே நாடி நீர் எதைச் செலவு செய்தாலும் அதற்காக கூலி வழங்கப்படுவீர். உம்முடைய மனைவியின் வாயில் (அன்புடன்) நீர் ஊட்டும் ஒரு கவள உணவு உட்பட” என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர்: ஹள்ரத் ஸஃது இப்னு அபீவக்காஸ் (ரளி) அவர்கள் (புகாரி)

# தமிழக மதரஸாக்களுக்கான

# அரிய வாய்ப்பு!

அரபு கல்லூரிகளின் ஆலிம் பிரிவின் ஆரம்பப் பாடங்களான மீஜான், அஜ்னாஸுல் குப்ரா, ஜன்ஜானீ ஆகிய மூன்று கிதாபுகளை ஒரே கிதாபின் வடிவில் **சொல்லிலக்கணம்** என்ற பெயரில் ஒன்று சேர்த்து, தங்களின் 40 ஆண்டு கால கல்வித் துறையின் அனுபவத்தைப் பயன்படுத்தி, தமிழ் விரிவாக்கமாக நமக்கு அளித்திருக்கிறார்கள் சென்னை மதரஸா காஷிஃபுல் ஹுதாவின் பேராசிரியர் மவ்லானா அல்ஹாஜ் **M.முஹம்மது இப்ராஹீம் பாகவி ஹள்ரத்** அவர்கள்!

அந்த பாடத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையையும், சரியான தமிழ் விளக்கத்துடன் வழங்கியிருக்கிறார்கள்.

மேற்படி பாடங்களை நடத்தக்கூடிய அரபு கல்லூரிகள் மற்றும் நிஸ்வான் மதரஸாக்களின் பேராசிரியப் பெருந்தகைகளுக்கு மிக மிக உதவியாக இருக்கும்.

**வாங்குங்கள்! பயன்படுத்துங்கள்!!**

**பக்கங்கள் : 800;** **விலை ரூ. 500/-**
(தபால் செலவு தனி)

**நூல் கிடைக்குமிடம் : குர்ஆனின் குரல்**

4/25, எழில் நகர், மேலமடை, **மதுரை - 625 020.**

**9486729192, 9976686439**

**மதரஸாக்களுக்கு சிறப்பு சலுகை உண்டு**

# குர்ஆனின்குரல்

**நம்பர் 1 இதழ்**

- 1958ஆம் ஆண்டு ஜனவரி முதல் இன்று வரை தொடர்ந்து மாதந் தவறாது வெளிவரும் இஸ்லாமிய மாத இதழ் "**குர்ஆனின்குரல்**"
- இஸ்லாமிய மாத இதழ்களில் மிக அதிகமாக விற்பனையாகும் மாத இதழ் "**குர்ஆனின்குரல்**"
- நேற்று–இன்று–நாளை என மூன்று தலைமுறையினரும் விரும்பிப் படிக்கும் இஸ்லாமிய மாத இதழ் "**குர்ஆனின்குரல்**"
- தொடர்ந்து அதிக பக்கங்களில் வெளிவரும் இஸ்லாமிய மாத இதழ் "**குர்ஆனின்குரல்**"
- மார்க்கம், சமூகம், இலக்கியம், பொருளாதாரம், அரசியல் என்று பல்துறை விஷயங்களில் முத்திரை பதித்து சமுதாயத்தின் நாடித் துடிப்பாக திகழ்கிறது "**குர்ஆனின்குரல்**"
- குர்ஆனின்குரல் இதழை உங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தி சந்தாதாரர்களாக்கி, அவர்களையும் மார்க்கஞானமுள்ளவர்களாகவும், சமுதாய உணர்வுள்ளவர்களாகவும் ஆக்குங்கள்!

**சந்தா, ஏஜன்ஸீ மற்றும் விளம்பர விபரங்களுக்கு :**

# குர்ஆனின்குரல்

**தபால் பெட்டி எண் : 45,**
**மதுரை -625 020.**

**9442056547  9486729192**

e-mail:quraaninkural@gmail.com • web:www.quraaninkural.com

"நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்."

- நபி (ஸல்) அவர்கள்

(நூல் : திர்மிதி)

**என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...**




**சீருக்கும்... சிறப்புக்கும்...**

# சீமாட்டி

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

**கும்பகோணம் - திருவாரூர்**

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் - 612001.

T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in

T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com

"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை"

# AL HUSSAM

***Travel & Tours India (p) Ltd***

**Specialist in: Haj & Umrah**

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்
அல்குர் ஆன் - 2:196



**Platinum Package**
(31 - 33 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Platinum Short Package**
(18 - 21 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Golden Package** (5-10 MINS WALKABLE DISTANCE) STAR HOTEL

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,

**Booking Center**: No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail: alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.
ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

தொடர்-7

# என் நெஞ்சைத் தொட்டவை!

எம்.ஜே.அன்வரி

## திரும்பிப் பார்.....!

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அவர்களின் மருமகனார் ஹள்ரத் உதுமான் (ரளி) அவர்கள் ஒரு கொத்து திராட்சையை அன்பளிப்பாகத் தந்தார்கள். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதை உண்ணத் துவங்கும்போது வாசலில் "பசியாக இருக்கிறது. ஏதாவது தாருங்கள்" என்றொரு குரல் கேட்கிறது. உடனே பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பெருமனதுடன் அத்திராட்சைப் பழத்தைக் குரலுக்கு உரியவரிடம் கொடுக்கும்படி உத்தரவிடுகிறார்கள்.

சுவையான கனியை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உண்டு மகிழ வேண்டும் என ஆசைப்பட்ட ஹள்ரத் உதுமான் (ரளி) அவர்களுக்கு மிக்க ஏமாற்றமாகப் போய் விட்டது. உடனே அந்த ஏழையிடம் சென்று, "இந்த பழத்திற்குரிய விலையை நான் உமக்கு தருகிறேன். இந்தப் பழத்தைத் தரு கிறீரா?" எனக் கேட்டார்கள். அந்த ஏழை சம்மதிக்கவே உரிய தொகையை அளித்து பழத்தைப் பெற்று மீண்டும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீண்டும் உண்ணத் துவங்கும்போது, அதே ஏழையிடமிருந்து அதே குரல் திரும்பவும் ஒலிக்கிறது. கருணை நாதருக்கு அக்குரலை அலட்சியம் செய்யத் தோன்றவில்லை. திரும்பவும் அவருக்கே அப்பழத்தை ஈந்து விடுகிறார்கள்.

அதனால் மனம் வருந்திய ஹள்ரத் உதுமான் (ரளி) அவர்கள் அந்த ஏழையிடம் அக்கனியை இரண்டாம் முறையாக விலை கொடுத்து வாங்கி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் உண்ணத் துவங்கு கிறார்கள். அதே குரல் அந்த ஏழையிடமிருந்தே திரும்பவும் ஒலிக் கிறது. அதைச் செவியுற்ற நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "நீர் என்ன வியாபாரியா அல்லது யாசகம் கேட்பவரா?" என்று யாசகம் கேட்டவரை கடிந்து கொள்கிறார்கள்.

அப்போது இறைவன் இத்திருவசனங்களை அருளச் செய்கிறான் :

**"நீர் அனாதையாக இருந்தபோது அவன் ஆதரவளிக்க வில்லையா? நீர் நேரிய வழி அறியாதவராக இருந்தபோது அவன் வழிகாட்டவில்லையா? நீர் ஏழ்மை நிலையில் இருந்தபோது அவன் செல்வந்தராக்கவில்லையா? எனவே நீர் அனாதைகளை அடக்க வேண்டாம்; யாசிப்பவரை விரட்ட வேண்டாம்"**

- அல்குர்ஆன் (93 : 6 - 10)

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த வினோதமான யாசகரைக் கடிந்து கொண்டது இறைவனுக்கு பொருத்தமாகப்படவில்லை. எனவே, உமது முற் காலத்தை சிந்தனை செய்து பார்ப்பீராக! என்று உபதேசிக்கிறான்.

(நூல் : தஃப்ஸீர் ராஜி)

## அகந்தை வேண்டாம்!

இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் இரண்டாம் ஜனாதிபதி ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் பொதுமக்களின் மனு, நீதிகளைக் கவனிப்பதற்காக பள்ளிவாசலில் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரம் அமர்ந்திருக்கும் பழக்கமுடையவர்கள்.

ஒரு நாள் அவ்வாறு அமர்ந்து விட்டு வீட்டுக்குத் திரும்பியபோது ஒருவர் ஓடோடி வந்து தனக்கு நேர்ந்துவிட்ட கொடுமையைப் பற்றி முறையிட்டார். அப்போது ஜனாதிபதி ஹள்ரத் உமர் (ரளி) அவர்களுக்கு கடும்சினம் ஏற்பட்டுவிட்டது. "நான் நியாயம் வழங்குவதற்காக காத்திருக்கும்போது ஒருவரும் வரமாட்டீர்கள். பின்னர் எனது சொந்த வேலையில் ஈடுபடும்போது வந்து தொல்லை கொடுப்பீர்கள்" என்று கடிந்து வந்தவரை சாட்டையால் விரட்டியடித்து விட்டார்கள்.

அவர் அவ்விடத்தைவிட்டு அகன்ற பிறகு ஜனாதிபதிஹள்ரத் உமர் (ரளி) அவர்களுக்கு தான் செய்தது முறையாகத் தோன்ற வில்லை. அதற்காக மிகவும் வருந்தியவர்களாக தனது இல்லத்துக் குள் சென்று "உமரே! ஒட்டகம் மேய்க்கக்கூட தகுதியில்லாதவன் என்று உன் தந்தையால் ஒதுக்கப்பட்ட உன்னை இறைவன் நாடா ளும் தலைவனாக்கவில்லையா? வழியறியாது தடுமாறிய உனக்கு அவன் வழிகாட்டவில்லையா? ஏழையாக இருந்த உன்னை இறைவன் செல்வந்தனாக்கவில்லையா? அல்லாஹ் இவ்வாறு உனக்கு அருள் புரிந்ததற்காகவா உன்னிடம் முறையிட வந்தவரை அநியாயமாக விரட்டினாய்" என்று கூறிக் கொண்டே தம் மேனியின் மீதே சாட்டையால் அடித்துக் கொண்டார்கள்.

ந்தி!

ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் நாயகத் தோழர் ஒருவரை பள்ளியில் படுத்துறங்கக் கண்டார்கள். பொடிக் கல் ஒன்றை எடுத்து அவரின் மீது எறிந்தார்கள். அவர் விழித்துக் கொண்டார். இந்தப் பொடிக்கல் சற்று வேகமாக அவர் மீது பட்டுவிட்டது. அவருக்கு வலித்துவிட்டது. வேகமாக எழுந்த அவர் ஹள்ரத் உமர் (ரளி) அவர்களை நோக்கி சிடுசிடுத்தவராக "உமக்கு என்ன உரிமையிருக்கிறது? ஏன் என் மீது கல்லெறிந்தீர்? நான் தூங்கிக் கொண்டிருந்தேனே! என் தூக்கம் கெட்டு விட்டதோடல்லாமல் வலிக்கவும் செய்கிறதே! தூங்குபவனுக்கு அருகில் திருமறை கூட ஓத வேண்டாம். அவனுடைய தூக்கத்துக்கு இடைஞ்சலாகி விடும் என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருப்பது உமக்குத் தெரியாதா?" என்று பொரிந்து தள்ளி விட்டார். ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் பதில் எதுவும் சொல்லவில்லை. வருத்தம் தெரிவிக்கும் முறையில் "பள்ளியில் படுத்துத் தூங்கக் கூடாதல்லவா? உன்னை விழிக்கச் செய் வதற்காகவே கல்லால் எறிந்தேன். அது உங்களுக்கு வலித்துவிட்டதா? தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறி அவரை அமைதிப்படுத்தினார்கள்.

(தொடரும்)


ஆனந்தமாய் வாங்க! திருமண சீர்வரிசை பாத்திரங்கள் வாங்க!!

**N.S.ஸ்டீல் ஹவுஸ்**



எங்களிடம்

திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர், மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள் அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.

**214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.**

**செல் : 9944001362**

# வரலாற்றில் ஓர் ஏடு

ஜனநாயகத்தை முதன் முதலில் போதித்ததும், செயல் முறையில் நிலைநாட்டியதும் இஸ்லாம்தான். தினமும் ஐந்து வேளை தொழுகைக்கான அழைப்பு ஒலிக்கப்படுகிறது. மக்கள் மன்றம் கூடி, அங்கே அரசனும், ஆண்டியும் தோளோடு தோள் உரச நின்று இறைவன் மட்டும் உயர்ந்தவன் என்று சிரம் தாழ்த்தி மண்டியிடுகிறார்கள். ஜனநாயகம் இவ்வாறு ஐவேளையும் செயல்வடிவம் பெறும் என்று "கவிக்குயில்" சரோஜினி நாயுடு கூறுகிறார்.

அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள், தொழுகை யின் ஆரம்பத்தில் எங்களுடைய தோள்களைத் தடவி (அவை சமமாக இருக்கின்றனவா என்று சரி) பார்ப்பார்கள். மேலும் நேராக நில்லுங்கள் (முன் பின்னாக) வேறுபட்டு நிற்காதீர்கள். அப்படி (வேறுபட்டு) நின்றால் உங்கள் உள்ளங்களும் வேறுபட்டுவிடும். உங்களில் அறிவில் சிறந்தவர்கள் எனக்கு அருகில் (முதல் வரிசை யில்) நிற்கட்டும். பிறகு அவர்களுக்கு அடுத்துள்ளவர் களும், பிறகு அவர்களுக்கு அடுத்துள்ளவர்களும் நிற்கட்டும்" என்று கூறுவார்கள்.

மற்றோர் அறிவிப்பில் "(தொழுகைக்கு ஒன்று கூடும்போது) கடைத் தெருவில் (கூச்சலிடுவதைப் போன்று) கூச்சலிடுவதிலிருந்து உங்களை நான் எச்சரிக்கிறேன்" என்றும், இன்னுமொரு அறிவிப்பில் "உங்கள் (தொழுகை வரிசைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். ஏனெனில், வரிசைகளை ஒழுங்குபடுத்துவது, தொழுகை முழுமை அடைவதின் ஓர் அங்கமாகும்" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியவை இடம் பெற்றுள்ளன.

ஆதாரம் : ஸஹீஹ் முஸ்லிம்,
ஹதீஸ் எண் : 739, 740 & 741

தருபவர் : **ப.பீர்இலாஹி** B.Sc., உத்தமபாளையம்.

## கர்நாடகாவில் மாணவிகள் ஹிஜாப் அணிந்து தேர்வு எழுதலாம்

கர்நாடகாவில் மாணவிகள் ஹிஜாப் அணிந்து தேர்வு எழுதலாம் என அந்த மாநில கல்வித்துறை அமைச்சர் எம்.சி.சுதாகர் தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டு கர்நாடகாவில் அரசுப் பள்ளி ஒன்றில் ஹிஜாப் அணிந்து வந்த இஸ்லாமிய மாணவிகள் தேர்வு எழுத அனுமதிக்கப் படாததால், மாநிலம் முழுவதும் மிகப் பெரிய போராட்டம் வெடித்தது.

கர்நாடகா முழுவதும் பரபரப்பான சூழ்நிலை நிலவி வந்ததை அடுத்து, கல்வி நிறுவனங்களில் சீருடையைத் தவிர பிற ஆடைகள் அணியக் கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனிடையே கர்நாடகாவில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்துள்ள நிலையில், முதலமைச்சர் சித்தராமையா தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாணவிகள் ஹிஜாப் அணியலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக விளக்கம் அளித்த கர்நாடகா கல்வித் துறை அமைச்சர் எம்.சி.சுதாகர், “ஹிஜாப் அணிந்து தேர்வு எழுதும் விவகாரத்தில் சிலர் தேவையில்லாத சர்ச்சையை ஏற்படுத்த முயல்கிறார்கள். சில குறிப்பிட்ட நபர்கள் மட்டுமே குழப்பத்தை ஏற்படுத்த முயல்கிறார்கள். தற்போது அனைத்து தரப்பினரின் சுதந்திரத்தையும் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கர்நாடக தேர்வாணையம் நடத்தும் அனைத்து தேர்வுகளிலும் தேர்வறையில் பெண்கள் ஹிஜாப் அணிய அனுமதிக்கப்படுவார்கள். தேர்வு எழுதும் மாணவிகள் தாங்கள் விரும்பும் ஆடைகளை அணிந்து தேர்வு எழுதலாம்” என்று தெரிவித்தார்.

## பலஸ்தீன தூதரை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர்கள் சந்தித்து ஆதரவு

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர்கள் பலஸ்தீன தூதரை நேரில் சந்தித்து தங்கள் ஆதரவை தெரிவித்தனர்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய அமைப்புச் செயலாளர் இ.டி.முஹம்மது பஷீர் எம்.பி., தலைமையில் பலஸ்தீன தூதுவர் அதனான் அபூ அல் ஹைஜாவை சந்தித்து தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.

கடினமான சூழல் மற்றும் வலியால் அவதிப்படும் சகோதர, சகோதரிகளுக்கு உதவுவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி விவாதிக்கப்பட்டது.

பலஸ்தீனப் போராளிகளுக்கு ஆதரவாக நாட்டு மக்களையும், ஒன்றாக வைத்திருக்க முடிந்த அனைத்தையும் செய்வோம் என்று தலைவர்கள் உறுதியளித்தனர்.

பலஸ்தீன மக்களுக்கான பிரார்த்தனைகள் மற்றும் செயல்பாடுகள் குறித்தும் அவருக்கு எடுத்துரைக்கப்பட்டன.

உலகின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள சகோதர சகோதரிகள் அனுபவித்த வேதனையையும், அதனுடன் தங்கள் இதயங்களை இணைத்துக்கொள்ள முஸ்லிம் லீக் தலைவர்கள் காட்டிய ஆர்வத்தையும் தூதுவர் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

அங்கு நிகழும் மனிதாபிமானமற்ற செயல்கள் குறித்து கசப்பான அனுபவங்கள் அதிகமுள்ள போதிலும் என்றும் தீராத மனஉறுதியுடன் போராடுபவர்கள் இன்றும் அவ்வாறே செயல்படுவதாக தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

துன்பப்படும் மக்களுடன் தங்கள் இதயங்களைப் பகிர்ந்து கொள்ளும் இங்குள்ள மக்களின் அனைத்து வகையான உதவிகளும், ஒத்துழைப்புகளும் இயல்பாகவே கிடைக்கும் என்று தலைவர்கள் தெளிவுபடுத்தினர்.

தேசிய செயலாளர் குர்ரம் அனீஸ் உமர், வழக்கறிஞர் ஹாரீஸ்பீரான், அப்துல் ஹலீம், நூர் ஷம்ஸ் ஆகியோர் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

## கும்பகோணம் அன்னை கல்லூரியில் அருள்மறை திருகுர்ஆனை ஓதக் கேட்டு எழுதி சாதனை படைத்த 20 மாணவிகளுக்கு பாராட்டு விழா!

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அன்னை கல்லூரியில் 24 மணி நேரத்தில் அருள்மறை திருகுர்ஆனை ஓதக் கேட்டு எழுதி சாதனை படைத்த 20 மாணவிகளுக்கு இலண்டன் Talent Certificate Council உலக சாதனை சான்றிதழ் வழங்கி இருந்தது. சாதனை புரிந்த மாணவிகளை கௌரவிக்கும் வகையில் கல்லூரி நிர்வாகம் சார்பில் பாராட்டு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

அன்னை கல்லூரி தாளாளர் அப்துல் கபூர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியை கல்லூரி பேராசிரியர் ஜியாவுத்தீன் பாகவி ஹள்ரத் ஒருங்கிணைத்தார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில செயலாளர் ஆடுதுறை ஷாஜஹான் பங்கேற்று மாணவிகளை வாழ்த்தி உரையாற்றினார்.

சாதனை புரிந்த மாணவிகளுக்கு கல்லூரி நிர்வாகம் சார்பில் பாராட்டு சான்றிதழும், கேடயமும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் கும்பகோணம் மற்றும் திருவிடைமருதூர் வட்டார உலமா பெருமக்கள் பல்வேறு ஜமாஅத் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

## ஹிஜாபி நடுவர் ஷஹீன் அக்தர்!

சீனாவில் நடைபெற்று முடிந்த 19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அக்டோபர் 5ஆம் தேதி கராத்தே போட்டி நடைபெற்ற அரங்கில் ஹிஜாப் அணிந்து வந்த நடுவரை அங்கு திரண்டிருந்த கராத்தே ரசிகர்கள் வியந்து பார்த்தனர்.

மும்பையைச் சேர்ந்த 52 வயது ஷஹீன் அக்தர் சர்வதேச அளவிலான போட்டிகளில் நடுவராகப் பங்கேற்கும் முதல் இந்தியப் பெண்மணி எனும் பெருமையையும் பெற்றுள்ளார்.

13 வயதில் பள்ளிப் பருவத்திலே கராத்தே வகுப்பில் சேர்ந்த ஷஹீன் அக்தர் கல்லூரிப் படிப்பை முடித்து வெளியேறும் போது மாநில அளவில் எட்டாவது தர வரிசையில் பிளாக் பெல்ட் பெற்ற திறமையாளராக மிளிர்ந்தார்.

கடந்த நாற்பது ஆண்டுகளாக முழு நேர கராத்தே விளையாட்டு வீரராகக் களமாடி வருகிறார் ஷஹீன். இவர் மகாராஷ்டிரா மாநில அளவில் ஆறு முறையும், தேசிய அளவில் நான்கு முறையும் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

யூத் லீக், பிரிமியர் லீக், தெற்காசியப் போட்டிகள், காமன் வெல்த் போன்ற போட்டிகளில் இந்தியா சார்பில் கலந்து பதக்கங்களைக் குவித்த பெருமைக்குரியவர் ஷஹீன் அக்தர்.

ஆசிய கராத்தே ஃபெடரேஷன் (AKF), உலக கராத்தே ஃபெடரேஷன் (WKF) ஆகியவற்றின் பல்வேறு வெகுமதிகளையும் பெற்றுள்ள ஷஹீன் அக்தருக்கு முதல் முறையாக சர்வதேச அளவிலான போட்டிகளில் நடுவராகப் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது பாராட்டுக்குரியது.

தொகுப்பு : **பாவா. ஜே. அப்துஸ் ஸலாம்**

# துதிப்போம்!

**அல்ஹாஜ் மீசல் பி.எம்.அபூபக்கர்**

இறையைத் துதிப்போம் அனுதினம்!
இருஉலகிலும் பெறுவோம் மிகுமணம்!
மறையை ஓதி வாழ்வோம்!
மாநபி கள்மொழி கொள்வோம்!
நிறைநபி நாதர் வழியில்
நிதமும் செல்ல முயல்வோம்!
குறையே இல்லாச் செயல்கள்
கொண்டே வாழ்வில் திகழ்வோம்!
வள்ளல் திலகம் ஹள்ரத் அபூ
பக்கர் வாழ்வைக் கொள்வோம்!
தெள்ளிய நீதி அரசர்
ஹள்ரத் உமர்வழி செல்வோம்!
நல்லார் உதுமான் வழியை
நாளும் கொண்டு சிறப்போம்!
வல்லமை மிக்க அலீயார்
வலிமை கொண்டு வாழ்வோம்!

பலமிகு தளபதி தாரிக்
பண்பு கொண்டு வாழ்வோம்!
தலத்தின் சூரர் உக்பா
தம்மின் சால்பை உணர்வோம்!

திங்கள் வதன நபியை
சீராய்த் தந்த இறையை
எங்கும் நிறைவல் லோனை
ஏகமாய் இலங்கும்நல் லோனை
சங்கை மிகுபெரி யோனை
சால்பாய் மனதில் பணிவு
பொங்கிடத் துதிப்போம் அனுதினம்
புவியில் பெறுவோம் மிகுமணம்!

# மன்னிக்கும் மாண்பு மகத்தானது!

மவ்லவி ஹாஃபிழ் அ.செய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தீ

மன்னிப்பது என்றால் தவறு செய்தவரை தண்டிக்காமல், அவரின் தவறை பெருந்தன்மையுடன் மன்னித்து விடுவதாகும்.

மன்னிக்கும் மனப்பான்மை இறைவனின் மகத்தான பண்புகளில் ஒரு பரந்த தன்மையாகும்.

இறைவனின் அழகிய திருநாமங்களில் ஒன்றாகவும் அது அமைந்துள்ளது. அவன் மன்னிப்பாளன் எனும் சிறந்த பெயரால் அழைக்கப்படுகின்றான்.

"தவறிழைப்பது மனித இயல்பு; தவறை மன்னிப்பது தெய்வீக மரபு" என்று கூட பேச்சு வழக்கில் சொல்லப்படுவதுண்டு!

மனிதன் மறதியாளன். இதனால் அவன் தவறு செய்து விடுகின்றான். இறைவன் மன்னிப்பாளன். இதனால் அவன் மனிதன் செய்யும் தவறை மன்னித்து விடுகின்றான்.

மனிதன் இறைவனாக முடியாது. எனினும் இறைவனின் மன்னிக்கும் பண்பை தன்னுள் கொண்டு வர முடியும்.

மன்னிக்கும் மனப்பான்மை இறைத்தூதர் நபி (ஸல்) அவர்களின் சிறந்த குணமாகவும், நல்லவர்களின் சிறந்த பண்பாடாகவும், இறைநம்பிக்கையாளர்களின் உயர்ந்த செயல்பாடாகவும் அமைந்துள்ளது.

## நபி (ஸல்) அவர்களின் மன்னிக்கும் மனப்பான்மை

நபித்தோழர்கள், நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! ஸகீப் கோத்திரத்தாரின் அம்புகள் எங்களை காயப்படுத்தி கிழித்து விட்டன. அவர்களுக்கெதிராக தாங்கள் பிரார்த்தனை செய்யுங்கள்!" என வேண்டியபோது... உடனே நபி (ஸல்) அவர்கள் "இறைவா! அவர்களுக்கு நீ நேர்வழி காட்டுவாயாக!" என்று பிரார்த்தித்தார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர்கள்
(நூல் : திர்மிதீ)

எதிரிகள் கூட அழிவதை நபி (ஸல்) அவர்கள் விரும்பவில்லை. அவர்களும் நேர்வழி பெறுவதைத்தான் விரும்பினார்கள். எதிரிகளையும் மன்னித்து, அவர்களும் வாழ்வதை விரும்பியவர்கள்தான் ஹள்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

உஹதுப்போர் தினத்தில் நபி (ஸல்) அவர்களின் கீழ்ப்பல் உடைக்கப்பட்டது. மேலும், அவர்களின் முகம் காயப்படுத்தப் பட்டது. மேலும், அவர்களின் தலைக்கவசம் அவர்களின் தலையின் மீதே வைத்து நொறுக்கப்பட்டது.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஸஹல் பின் ஸஅத் (ரளி) அவர்கள்
(நூல் : புகாரி 4075)

போர்க்களத்தில் தாங்க முடியாத அளவுக்கு பாதிக்கப் பட்டபோதும் கூட நபி (ஸல்) அவர்கள், யாரையும் பழிவாங்க வில்லை. யாவரையும் மன்னித்த மாமனிதர்தான் அவர்கள்.

தம்மை விஷம் கொடுத்து, கொல்ல சதி செய்த யூதப் பெண்ணை கூட மன்னித்த மாண்பாளர்தான் அவர்கள். யூதப் பெண் நபி (ஸல்) அவர்களிடம் விஷம் தடவப்பட்ட ஆட்டிறைச்சியை அன்பளிப் பாகக் கொண்டு வந்தார். நபி (ஸல்) அவர்கள் அதிலிருந்து சிறிது உண்டார்கள். "அவளைக் கொன்று விடுவோமா?" என்று நபியவர்களிடம் கேட்கப்பட் டது. அவர்கள் "வேண்டாம்" என்று கூறிவிட்டார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள்
(நூல் : புகாரி 2617)

நபி (ஸல்) அவர்கள் நோயில் இறக்க நேரிடும்போது "அந்த உணவை உண்டதால் ஏற்பட்ட வேதனையை நான் தொடர்ந்து அனுபவித்து வரு கிறேன். அந்த விஷத்தின் காரணத்தால் என் இருதய இரத்தக் குழாய் அறுந்து போவதை நான் உணரும் நேரம் இது" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள்
(நூல் : புகாரி 4428)

இஸ்லாத்தின் முதல் போர் பத்ர் போர் ஆகும். அந்தப் போரில் நபியின் சிறிய தந்தை ஹள்ரத் ஹம்ஸா (ரளி) அவர் களை அப்போது அடிமையாய் இருந்து பின்பு விடுதலையாகி, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட வஹ்ஷீ என்பவர் கொலை செய்தார். இவரையும் நபி (ஸல்) அவர்கள் பழிவாங்காமல் நிபந்தனையின்றி மன்னித்து விட்டார்கள். நடந்ததை அவர் விவரிக்கும்போது,

"நான் எனது ஈட்டியை ஹம்ஸா (ரளி) அவர்களின் பாலின உறுப்பை நோக்கி எறிந் தேன். அது பாய்ந்து அவரின் புட்டத்திற்கிடையிலிருந்து வெளியேறியது. அதுதான் அவரின் வாழ்நாள் முடிவதற்குக் காரணம்"

அறிவிப்பாளர் : ஹள்ரத் உபைதுல்லாஹ் (ரளி) அவர்கள்
(நூல் : புகாரி - 4072)

கி.பி.630 ஜனவரி 10ஆம் நாளன்று ஹிஜ்ரி 8 ரமளான் பிறை 20ஆம் நாளில் நபியவர்

களால் மக்கா வெற்றி கொள்ளப் பட்டபோது நபி (ஸல்) அவர்கள் மக்கா குறைஷிகளை நோக்கி "நான் உங்கள் விஷயத்தில் எவ்வாறு நடந்து கொள் வேன் என நீங்கள் கருதுகிறீர்கள்?" எனக் கேட்டபோது "அவர்கள் நீங்கள் நல்லவர்; சங்கையான வர்; மேலும் சங்கையானவரின் மகன் ஆவீர்! எங்களிடம் நல்ல விதமாக நடப்பீர்கள்" என்று பதில் கூறினார்கள். உடனே நபி (ஸல்) அவர்கள் "இன்று பொது மன்னிப்பு வழங்கப் படும் நாள். பழி வாங்கப்படும் நாள் அல்ல! உங்களுக்கு பொது விடுதலை அளிக்கப்படு கிறது" என்று கூறினார்கள்.

தம்மையும், தமது தோழர் களையும் சொந்த தாய் நாட்டை விட்டு அகதிகளாக துரத்தி யடித்த மக்கா குறைஷிகளை தண்டிக்க சகல விதமான வாய்ப் பும், ஆட்சியும், அதிகாரமும் இருந்தும்கூட பொது மன்னிப்பு வழங்கிய மாமனிதர்தான் ஹள்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

இறைவனையும், இறைத் தூதர் ஹள்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களையும் பின்பற்றக் கூடிய முஸ்லிம்கள் மன்னிக் கும் மனப்பான்மையுடன் "மறப் போம் மன்னிப்போம்" என்று நடந்து கொள்ள வேண்டும்.


# ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

## OXFORD ENGLISH SCHOOL (CBSE)

**சிதம்பரம் - 608001.** கடலூர் மாவட்டம்.

**KG to XII Grade**

NEET, JEE, CA,CPT **வகுப்புகள் நடத்தப்படும்.**

★ **ஹாஸ்டல் வசதி உண்டு.**

● முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாமிய மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ்,** M.B.A.,M.Sc.,Ph.D.
Founder & Chairman.

**தொடர்புக்கு :** Email : **oxfordescdm@gmail.com**
Tel : **+91-7373030412, 414, 421.**
WhatsApp : **+91-9566247805** https://oxfordenglishschool.info

"நீங்கள் ஒரு நன்மையை வெளிப்படையாகச் செய்தாலும் அல்லது அதனை மறைத்துக் கொண்டாலும், அல்லது [ஒருவர் உங்களுக்குச் செய்த] தீமையை நீங்கள் மன்னித்தாலும் [அது உங்களுக்கு மிகவும் நல்லது] ஏனெனில், அல்லாஹ் மன்னிப்பவனாகவும் பேராற்றல் உடையவனாகவும் இருக்கின்றான்''

- அல்குர்ஆன் (4 : 149)

"[பயபக்தியுடையோர் எத்தகையோர் என்றால்] அவர்கள் இன்பமான [செல்வ] நிலையிலும், துன்பமான [ஏழ்மை] நிலையிலும் செலவிடுவார்கள்; மேலும் கோபத்தை அடக்கிக் கொள்வார்கள்; மனிதர்[கள் செய்யும் பிழை]களை மன்னிப்போராய் இருப்பார்கள். [இவ்வாறு அழகாக] நன்மை செய்வோரையே இறைவன் நேசிக்கின்றான்''

-அல்குர்ஆன் (3 : 134)

ஹள்ரத் ஹுஸைன் (ரளி) அவர்களின் பேரன் ஜைனுல் ஆபிதீன் என்பவர் ஆவார். ஒரு நாள் அவரின் பணிப்பெண் ஒரு கிண்ணத்தில் ஒளு செய்வதற்காக நீரை நிரப்பிக் கொண்டு எஜமானரிடம் கொண்டு வரும் போது கைத் தவறி கிண்ணம் கீழே விழுந்து, அவரின் முகத்தை காயப்படுத்தியது. உடனே சுதாரித்துக் கொண்ட பணிப்பெண் "பயபக்தியாளர்கள் கோபத்தை அடக்குவார்கள்" எனும் இறைவசனத்தை ஓதிய போது, உடனே ஹள்ரத் ஜைனுல் ஆபிதீன் (ரளி) அவர்கள் நான் என் கோபத்தை அடக்கி விட்டேன்" என்பார். மேலும், "அவர்கள் பிறரின் பிழையை மன்னிப்பார்கள்" என்று அடுத்த வரியை உச்சரித்தபோது, "நான் உன்னை மன்னித்து விட்டேன்" என்பார் ஹள்ரத் ஜைனுல் ஆபிதீன் (ரளி) அவர்கள். "இவ்வாறு நன்மை செய்வோரை இறைவன் நேசிக்கின்றான்" என்ற வரியை கூறியபோது, "நீ இன்று விடுதலை" என்று கூறுவார்.

"தர்மம் செல்வத்தைக் குறைக்காது. மன்னிப்பதால் ஓர் அடியாருக்கு இறைவன் கண்ணியத்தையே அதிகப்படுத்துகிறான். இறைவனுக்காக ஒருவர் பணிவு காட்டினால் அவரை இறைவன் உயர்த்தாமல் இருப்பதில்லை'' என நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்''

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : முஸ்லிம் : 5047)

"காரியங்களில் இறைவனுக்கு மிகவும் பிடித்தது : (1) தண்டிக்க சக்தி இருந்தும் மன்னிப்பது; (2) முயற்சியை விடாமல் நாடுவது; (3) வணக்கத்தில் மென்மையை கடைபிடிப்பது" என ஹள்ரத் உமர் பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

# கோமாளியாக்கப்பட்ட கோமான் முஹம்மது பின் துக்ளக்

வரலாற்றுப் பேரறிஞர் "தாரீகுல் மில்லத்"
செ.திவான் M.A.,M.Phil.,

**தாரிக்-இ-ஃபிரோஸ் ஷாஹி** (Tarikh-i- Firoz Shahi)

தாரிக் இ ஃபிரோஸ் ஷாஹி என்ற நூலைத் தந்தவர் ஜியாவுத்தீன் பரனி.

**W.N. லீஸ்**

டபிள்யூ. என். லீஸ் (W.N.Lees) பதிப்பித்தது.

**எஸ். அகமதுகான் - கபீருஉத்தீன்**

S.Ahmadkhan and Kabir uddin Bibliotheca Indica. Calcutta 1860 - 1862 Extrats Translation History of India as told by it's own Historians translated by H.M.Elliot and J.Dowson Volume III, Page 93 - 268. ஜியாவுத்தீன் பரனி நூலின் சுருக்கம் எலியட் மற்றும் டௌசனால் தரப்பட்டுள்ளது.

**நேர்மையற்ற வரலாற்று ஆசிரியர்**

வரலாறு ஜியாவுத்தீன் பரனிக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. அதன் பயனைப் பற்றி அடிக்கடி எடுத்தியம்பியுள்ளார். மதிநுட்பம் வாய்ந்தவர்களே வரலாறு படிக்கும் தகுதியினைப் பெற்றவர்கள் ஆவர் என்பது பரனியின் கருத்தாகும்.

குறுகிய மனப்பான்மை உடையவர்களும், அற்பர்களும், வீண் வம்பு செய்பவர்களும், கயவர்களும் வரலாறு படிப்பதனால் பயனை அடைய முடியாது என்று எண்ணிய பரனி வரலாற்றாசிரியர் உண்மையை உரைக்க வேண்டும். பாரபட்சமின்றி நடக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லுவார். ஆனால், தான் எழுதிய வரலாற்று நூலை எவ்வாறு எழுதினார் என்பதை விவாதத்திற்கு வைத்தாக வேண்டியுள்ளது.

தமது புரவலரான சுல்தானுடைய கோபத்திற்கு இலக்காகக் கூடாது என்பதற்காக பரனி தமது நூலில் குறிப்பிட வேண்டிய நிகழ்ச்சிகளைச் சில வேளைகளில் குறிப்பிடத் தவறி விட்டார். பரனி சில முக்கிய நிகழ்ச்சிகளை சரி வர எடுத்துச் சொல்லத் தவறி விட்டார் என்பதனை எலியட் சுட்டிக்காட்டுகிறார். அதனால் பரனியை நேர்மையற்ற

வரலாற்றாசிரியர் என்று எலியட் குறிப்பிட்டுள்ளார்.

### தேதிகளும் - தவறுகளும்

பரனியின் வரலாற்று நூலில் தேதிகள் குறிப்பிடுவதில் கவனம் செலுத்தவில்லை. பல நிகழ்வுகள் எப்போது நடைபெற்றன என்பதை பரனி எடுத்துரைக்கவில்லை. சில தேதிகள் தவறாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. சில நிகழ்வுகளின் தேதிகள் ஒன்றன் பின் ஒன்றாகக் கூறப்படவில்லை. அவற்றை ஒழுங்காகவும் அமைக்கவில்லை.

### விருப்பு - வெறுப்பு

வரலாற்று நிகழ்வுகளை எழுதுகிறபோது சில இடங் களில் அவரது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ப நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன.

### 17 ஆண்டுகள் அரசவையில்

முஹம்மது பின் துக்ளக்கின் அரசவையில் 17 ஆண்டு காலம் பணியாற்றியவர் ஜியாவுத்தீன் பரனி. முஹம்மது பின் துக்ளக் மறைந்த ஐந்து ஆண்டு களுக்குப் பின்னரே அவரது நூலை எழுதி முடித்தார். (1356 - 1357) பொதுமக்கள் முஹம்மது பின் துக்ளக்கைப் போற்றிப் புகழ்ந்ததை ஜியாவுத்தீன் பரனி ஒப்புக் கொள்கிறார். ஆனால், சின்னஞ் சிறு குற்றங் களைத் தேடித் தேடிக் கண்டு பிடித்து அவற்றிற்கு மெருகிட்டு விளக்கம் தருவதில் சாமர்த்திய சாலியாகத் திகழுகிறார்.

### பிற்காலமும் - முற்காலமும்

பிற்காலத்தில் நடந்த செய்திகளை முற்காலத்துடன் சேர்த்து வரலாற்றை வாசிப்பவர் களை குழப்பமடையச் செய் கிறார் ஜியாவுத்தீன் பரனி.

### வெகு தந்திரம்

முஹம்மது பின் துக்ளக் கின் ஆட்சியை மிகச் சுருக்கமாக ஜியாவுத்தீன் பரனி எழுதி யிருந்தபோதிலும் அவருடைய பண்பு நலன்களை விளக்குகிற போது, அவற்றுக்கு இடையில் கஷ்டப்பட்டு ஒரு சில வாக்கியங்களைத் திணித்து முஹம்மது பின் துக்ளக்கை கெட்டவர் என்று கருதும்படி செய்து விடுகிறார்.

### புகழும் வசைமாரியும்

முஹம்மது பின் துக்ளக்கை ஜியாவுத்தீன் பரனி புகழ்ந்து வசைமாரி பொழிகிறார். முஹம்மது பின் துக்ளக் மீது குற்றங்கூறி பல பக்கங்களை எழுதியுள்ளார்.

### பழைய புதிய சட்டங்கள் என்ற குழப்பம்

முஹம்மது பின் துக்ளக் பழங்காலச் சட்டங்களையும், பழக்கங்களையும் நீக்கிவிட்டு, புதிய சட்டங்களைப் புகுத்தி விட்டதாகவும், அரசாங்கத்தின்

எல்லாத் துறைகளிலும் இவ்வாறு செய்ததாக ஜியாவுத்தீன் பரனி கூறுகிறார். அந்தப் புதிய முறைகளும், சட்டங்களும் என்னவென்று பரனி எடுத்துக் காட்டாமல் மறைத்து விடுகிறார். ஓரிடத்தில் புதிய சட்டங்கள் அறிவுக்கு நல்லனவாகத் தோன்றினாலும் அதனைச் செயலாற்றிட முடியாது என்பார். எங்கேயும் முஹம்மது பின் துக்ளக்கின் புதிய சட்டங்களைப் பற்றி பரனி விளக்கிடவே இல்லை.

### மிகவும் நிலை தவறிய குழப்பம்

ஜியாவுத்தீன் பரனி தான் கண்ணால் கண்ட விஷயங்களையே சரித்திரமாக எழுதியுள்ளார் என்ற நம்பிக்கையில் பிற்காலச் சரித்திர ஆசிரியர்கள் அவரைப் பின்பற்றி அப்படியே எழுதி முஹம்மதுபின் துக்ளக்கை குறை கூறிவிட்டார்கள். ஜியாவுத்தீன் பரனியின் தாரீக்-இ-ஃபிரோஸ் ஷாஹி நூல் மிகவும் நிலை தவறி குழப்பமாக எழுதப்பட்ட நூலாகும்.

### அநியாயச் செயல்

மவ்லானா ஜியாவுத்தீன் பரனி முஹம்மது பின் துக்ளக்கின் ஆட்சியை விளக்கும் போது அவரது பண்பு நலன்களை மறைத்துவிட்டு துக்ளக்கின் சிறு பிழைகளை எல்லாம் மலையைப் போன்று பெரிதாக்கி விட்டார். இவ்வாறு அவர் செய்த அநியாயச் செயல் ஏதோ பழிவாங்கும் எண்ணத்துடன் செய்ததாகத் தோன்றுகிறது.

### உண்மையை தைரியமாகக் கூறாதவர்

பெரிஷ்டா என்ற முஸ்லிம் வரலாற்றாசிரியர் ஜியாவுத்தீன் பரனி சில நேரங்களில் உண்மையை தைரியமாக எடுத்துக் கூறவில்லை என்பதற்காக அவரைக் கண்டித்துள்ளார் என்பர் பேராசிரியர் டி.ஆர்.இராமச்சந்திரன்.

### பழி வாங்கும் எண்ணம்

ஜியாவுத்தீன் பரனி, முஹம்மது பின் துக்ளக் மீது பழி வாங்கும் எண்ணம் ஏற்பட்டது எதனால் என்பதைச் சொல்ல வேண்டிய கட்டாயமுள்ளது. ஜியாவுத்தீன் பரனியின் தந்தையார் வருவாய்த் துறையில் பணியாற்றியவர். அதனால் உயர் அரசாங்க அதிகாரிகளுடன் பழகுவதற்கு பரனிக்கு வாய்ப்பிருந்தது.

### சதி ஆலோசனை ஸ்தலம் பர்ன்

தோஆப் (உத்தரப்பிரதேசம்) என்ற மாகாணத்தில் பர்ன் என்ற இடம் உள்ளது. கங்கைக்கும், யமுனைக்கும் இடையில் மிகவும் வளம் பொருந்திய மாகாணம். இங்குள்ள மக்கள் செல்வந்தர்கள்; அரசாங்கத்

திற்கு விரோதமாக அடிக்கடி கலகம் செய்தவர்களாய் இருந்தனர். பர்ன் என்ற இடம் அரசாங்கத்தை எதிர்த்து சதி ஆலோசனை செய்கின்ற கூட்டத்தினருக்கு முக்கிய ஸ்தலமாக இருந்தது. இந்த இடத்தில் பிறந்தவர்; வளர்ந்தவர்; வசித்தவர் ஜியாவுத்தீன் பரனி.

**அமைதியும், சமாதானமும்**

முஹம்மது பின் துக்ளக் தனது அரசாங்கத்தின் கீழுள்ள இப்பகுதியில் அமைதியையும், சமாதானத்தையும் நிலவச் செய்திட நடவடிக்கைகளை எடுத்தார்.

**தண்டவரி**

பர்னீயிலுள்ள மக்கள் அரசாங்கத்திற்கு விரோதமாக பகிரங்கமாக கலகம் செய்தனர். ஆனால், முஹம்மது பின் துக்ளக்கின் படைகள் அக் கலகத்தை அடக்கின. அத்துடன் அங்குள்ள மக்கள் மீது தண்ட வரியும் விதிக்கப்பட்டது. கலகம் அடங்கியது. இதனால் ஜியாவுத்தீன் பரனியும், அவரது குடும்பத்தாரும், இதர உறவினர்களும் பரனியில் சிரமங்களையும், கஷ்டங்களையும் அடைந்திருந்தனர்.

**விரோதமாகச் சரித்திரம்**

பின் தனது தந்தை பணியாற்றும் டெல்லிக்கு வந்தார் ஜியாவுத்தீன் பரனி.

முஹம்மது பின் துக்ளக் ஆட்சியில் அவரது படையினரால் தனது ஊரில் அரசாங்கத்திற்கு எதிராக நடந்த கலகம் அடக்கப்பட்டு, தானும் தனது உறவினர்களும், இதர மக்களும் தண்டவரி செலுத்தியது வரலாற்று நிகழ்வு. இது ஜியாவுத்தீன் பரனி, முஹம்மது பின் துக்ளக்கிற்கு விரோதமாக சரித்திரம் எழுதிட காரணமாயிற்று.

அடிமை (முந்தைய துருக்கிய) சுல்தான்கள் ஆட்சிக் காலத்தில் ஜியாவுத்தீன் பரனியின் குடும்பம் வெகு சாதாரண நிலையில் இருந்தது.

கில்ஜி சுல்தான்கள் ஆட்சியில் அந்தக் குடும்பத்தில் பலர் அரசாங்க உத்தியோகங்களையும், உயர் பதவிகளையும், ஜாகிர்களையும் பெற்று புகழ் பெற்ற நிலைக்கு வந்தனர்.

முஹம்மது பின் துக்ளக் ஆட்சிக்காலத்தில் ஜியாவுத்தீன் பரனியின் குடும்பத்தின் உயர்வு, செல்வாக்கு வீழ்ச்சியுற்றது. அது பரனியின் உள்ளத்தில் கோபக் கனலானது. எனவே அவர் எழுதிய முஹம்மது பின் துக்ளக் சரிதையில் குறைவாக எழுதினார். இப்னுபதூதா, ஜியாவுத்தீன் பரனியின் சார்பு வரலாற்றுக் குறிப்புகளை வைத்து முஹம்மது பின் துக்ளக் மீது தந்தையைக் கொன்றவர் என்று கூற முடியாது.

(தொடரும்)

தொடர்-6

# சீரத்துந் நபி (ஸல்) அவர்களின் சீரிய பார்வையில்....

மவ்லானா முஃப்தீ முஹம்மது ஹுஸைன் காஸிமி

## ஆண்கள் தங்கப் பல் அணியலாமா?

ஆண்கள் தங்கத்தை ஆபரணமாக அணிவது ஹராமாகும். அவ்வாறில்லாமல் பல், மூக்கு போன்ற உறுப்புகள் பாதிக்கப்பட்டிருப்பின் தங்கம், வெள்ளியால் அந்த உறுப்புகளை செய்து அணிவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. சில நபித் தோழர்களுக்கு யுத்தத்தில் மூக்கு வெட்டப்பட்டு துர்நாற்றம் ஏற்படவே, நபி (ஸல்) அவர்கள் அந்தத் தோழர்களுக்கு தங்கத்தில் மூக்கு செய்து பதித்துக் கொள்ள அனுமதியளித்தார்கள் என்ற தகவல் பிரபல ஹதீஸ் நூல் மிஷ்காத் ஷரீஃபில் இடம்பெற்றுள்ளது. எனவே, உறுப்புகளாகப் பயன்படுத்துவது அனுமதிக்கப்பட்டதாகும்.

## பள்ளிவாசலில் நுழையும் முறை

அல்லாஹ்வின் அர்ஷிலிருந்து விண் வழியாக மண்ணிற்கு வந்து சேரும் அனைத்து ரஹ்மத்களும் புனித கஅபாவின் வாயிலாக அதன் கிளைகளாகிய பள்ளிவாசல்களை வந்தடைகின்றன. எனவேதான், அனைத்து அகிலங்களுக்கும் அருட்கொடையாம் தாஹா நபி (ஸல்) அவர்கள்,

“அல்லாஹ்வின் திருநாமம் கூறி அல்லாஹ்வின் திருத்தூதர் மீது சாந்தியும் சமாதானமும் உரித்தாக்கியவனாக (நுழைகிறேன்) அல்லாஹ்வே! என் பாவங்களை மன்னித்து எனக்காக உன் அருட்கதவுகளை திறந்து விடுவாயாக! என்று கூறி வலது காலை முன் வைத்து நுழையுமாறு பணித்துள்ளார்கள்.

ஹிஜ்ரி முதல் நூற்றாண்டின் மிகப் பெரும் ஹதீஸ் கலை அறிஞரும், ஆன்மிக ஆசானுமான ஹள்ரத் சுஃப்யான் (ரஹ்) ஒருசமயம் பள்ளியில் நுழைந்தபோது, மறதியாக பள்ளிவாசலில் இடது காலை முன்வைத்து சென்றவுடனே, யா ஸவ்ர்! (ஓ மாடே!) என்று ஓசை கேட்டது! இதையே தங்களது வாழ்க்கைக்கு படிப்பினையாக அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். சுமார் பதினான்கு நூற்றாண்டுகள் கழிந்தபோதும் அன்னாரின் பெயர் சுஃப்யான் ஸவ்ரி என்றே நினைவு கூரப்படுகிறது.

நாமும் படிப்பினை பெறுவோம். அல்லாஹ்வின் அருளைப் பெற வலது காலை முன் வைத்து கவனமாக பள்ளிவாசலில் நுழைவோம். அல்லாஹ் அருள் புரிவானாக!

## அலங்காரமா? அலங்கோலமா?

ஆண்களுக்கு நரைகளுக்கு சாயம் பூசும் விஷயத்தில் சொல்லப்பட்ட அனைத்து விதிமுறைகளும், வழிமுறைகளும் பெண்களுக்கும் பொருந்தும்.

எவ்வாறு மூக்குக்கு நேராக தலையில் வகிடு நடுதலையில் சீப்பால் கோடு போட்டு தலைமுடிகளை இருபிரிவுகளாக பிரிப்பது ஆண்களுக்கு சுன்னத்தோ, பெண்களுக்கும் அதுவே சுன்னத்தாகும். வலது புறத்திலோ, இடது புறத்திலோ வகிடு எடுப்பது நபி வழிக்கு மாற்றமானதாகும்.

சட்டம் : திருமணமான பெண்கள் தம் தலையில் நரை ரோமங்களுக்கு மருதாணி சாயம் பூசுவது போல தம் கணவர் விரும்பினால் தம் கை, கால்களுக்கு மருதாணி பூசுவது விரும்பத்தக்கதாகும். ஆண்கள் மருத்துவம் போன்ற நிர்ப்பந்த காரணமின்றி தமது கை கால்களில் (தலை, தாடி முடி தவிர்த்து) மருதாணி சாயம் பூசுவது ஹராமாகும். இவ்வாறு ஆண்கள் மருதாணி பூசுவதால் பெண்களுக்கு ஒப்பாகி விடுகின்றனர். ஏனெனில் மருதாணி பெண்களுக்கே பிரத்தியேகமான அலங் காரம் ஆகும். அது ஒரு போதும் ஆண்களுக்கு அனுமதிக்கப்பட்ட தல்ல. பெண்களின் மற்ற ஆடை, ஆபரணங்கள் எப்படி ஆண் களுக்கு அனுமதிக்கப்பட்டதல்லவோ அதுபோன்றுதான் மருதாணி யும். அநேக ஆண்கள் மருதாணி பூசிக் கொள்வதற்கு பெண்கள் தான் வலியுறுத்துபவர்களாக இருப்பதினாலேயே இவ்விஷயத்தை குறிப்பிட்டுள்ளோம். ஆடைகள், ஆபரணங்கள், அணிகலன்கள், சிகையழகு போன்ற விஷயங்களில் பெண்களுக்கு ஒப்பாக எந்த ஓர் ஆண் இருப்பாரோ அவரை நபி(ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள். அவ்வாறே மேற்கண்ட விஷயங்களில் ஆண்களுக்கு ஒப்பாக இருக்கும் பெண்களையும் நபி (ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்.

(நூல் : அபூதாவூது)

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது : “ஆணுக்கும், பெண்ணுக்கும் இடைப்பட்ட ஒரு அலியான நபர் நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டார். அவர் தன் கை, கால்களில் மருதாணி பூசி இருந்தார். அதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் இவன் ஏன் இப்படி செய்தான்? என்று தம் தோழர்

களிடம் கேட்டார்கள். அதற்கு தோழர்கள் பெண்களுக்கு ஒப்பாக வேண்டியே இப்படி செய்தார் என தெரிவித்தனர். உடனே நபி (ஸல்) அவர்கள் இவரை மதீனாவை விட்டே வெளியேற்றி விடுங்கள் என்று கூறவே, நபித்தோழர்கள் இவரை வெட்டி வீழ்த்தி விடட்டுமா? என்று கேட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள் வேண்டாம் தொழுபவர்களை கொலை செய்யக்கூடாது என எனக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்கள்.

(நூல் : அபூதாவூது (பாகம் 2 பக்கம் 326)

## பெண்களுக்கு தாடி முளைத்தால்?

**சட்டம்** : அதை சிரைத்து அகற்றிவிடுவது விரும்பத்தக்கதாகும். (நூல் : பதாவா ராஹிலிய்யா)

அல்லாமா தீபீ (ரஹ்) அவர்களும் அவ்விதமே கூறியுள்ளார்கள் என மிர்காத் என்னும் நூலில் காணப்படுகிறது.

(நூல் : மிர்காத், பக்கம் - 457; பாகம் - 4)

**சட்டம்** : மருத்துவ நிர்ப்பந்தமின்றி தலைமுடியை பெண் வெட்டுவதோ, சிரைப்பதோ ஹராமாகும். மருத்துவரீதியான நிர்ப்பந்தம் இருப்பின் தேவையான அளவு சிரைப்பது, வெட்டு வது அனுமதிக்கப்பட்டதாகும். (நூல் : குலாஸதுல் பதாவா)




# கண்களைக் காதலிப்போம்...!

டாக்டர் பெ.ரங்கநாதன்

நாற்பது வயது நபர் ஒருவர் கண் முழுவதும் சிவந்து வலி தாங்க முடியாமல் கண் மருத்து வரிடம் வந்துள்ளார். அவரைக் கண் மருத்துவர் பரிசோதித்த போது கண்ணின் கருவிழியில் இரும்புத்துகள் ஒட்டியிருப் பதைக் கவனித்தார். மேலும் அவருடைய இரண்டு கண் களின் கருவிழி முழுவதும் ஆங்காங்கே பல தழும்புகள் காணப்பட்டன. அதனால் அவருடைய பார்வைத்திறன் குறைவாகவே இருந்தது.

எப்படி இவ்வாறு நடந்தது என்று கண் மருத்துவர் கேட்க, தான் லேத் வேலை செய்வதா கவும், வேலையின் போது அடிக் கடி கண்களில் தூசி விழும் என்பதால் பல நேரம் தானே மருந்துக்கடைகளில் மருந்து வாங்கி கண்ணில் ஊற்றிக் கொள்வதாக அவர் கூறியுள் ளார். வேலை செய்யும்போது பாதுகாப்புக் கண்ணாடி போட்டுக் கொள்வீர்களா என மருத்துவர் கேட்டார்.

“கண்ணாடியா? நம்ம வேலைக்கு அதெல்லாம் ஒத்து வராது டாக்டர்” என்று நோயாளி கூறியுள்ளார். வாகனம் பழுதுநீக்கும் பணி மனைகள், இரும்பு வேலை செய்யும் லேத் போன்றவற்றில் வேலை செய்யும் பலர், தங் களுக்குத் தெரியாமல் பார்வையை இழந்து வரு கிறார்கள் என்பது துயரமான உண்மை.

## அலட்சியம் கூடாது

ஒரு மனிதனின் கண்களின் உள்ளே கறுப்பாகத் தெரியும் கருவிழி, வெளிப்பகுதி நமக்குக் கறுப்பாகத் தெரிந்தாலும் அது நிறமற்ற ஒளி ஊடுருவக் கூடிய கண்ணாடி போன்ற அமைப்பாகும்.

அதில் அடிக்கடி காயம் ஏற்பட்டால் அதில் தழும்பு உண்டாகிப் பார்வையைப் பாதித்துவிடும். இது கண்ணில் நிரந்தமாகப் பாதிப்பை ஏற் படுத்தும் என்று பலருக்குத் தெரியாது. இதனைத் தடுக்கப் பணிமனைகளில் வேலை செய்பவர்கள் கண்டிப்பாக பாதுகாப்புக் கண்ணாடி அணிந்து கொண்டு வேலை செய்ய வேண்டும். அப்போது இரும்புத் துகள்கள் கண்களில் பட்டு காயம் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

அடுத்த நிகழ்வு, இருபது வயது மதிக்கத்தக்க இளைஞர் கண் சிவந்து, கண்ணில் மிக வலியுடன் கண் மருத்துவரைப் பார்க்கச் சென்றுள்ளார். அவரைப் பரிசோதித்த கண் மருத்துவர் அவரின் கருவிழி முழுவதும் புள்ளி புள்ளியாகக் காயம் இருப்பதைக் கண்டார்.

"என்ன கட்டிட வேலை செய்கிறீர்களா?" எனக் கண் மருத்துவர் கேட்க, "ஆமாம்" என்றார் அந்த இளைஞர். கட்டிட வேலை செய்யும் எலக்ட்ரீசியன்கள் கட்டிடத்தின் சில பகுதிகளை உடைக்கும்போது பாதுகாப்புக் கண்ணாடி அணிந்து கொண்டு வேலை செய்வதில்லை. இதனால் கண்களில் சிமெண்ட், மண் துகள்கள் விழுந்து கருவிழி பாதிப்பை ஏற்படுத்தும். இவை தொடர் நிகழ்வுகளாக நடந்து கொண்டிருக்கின்றன.

## புற ஊதாக் கதிர்கள்

நாம் பயன்படுத்தும் வெல்டிங் ஒளி, புற ஊதாக் கதிர்களைக் கொண்டது. அதிகவீரிய மிக்க புற ஊதாக் கதிர்களைத் தொடர்ந்து பார்க்கும்போது அது கண்ணின் கருவிழி, கண் நரம்பின் மையப் பகுதியை பாதிக்கும். அதாவது வெல்டிங் ஒளியை நேரடியாகப் பார்க்கும் போது கண் கருவிழியில் காயம் ஏற்பட்டு கண் வலி, சிவத்தல், உறுத்தல் போன்ற அறிகுறிகள் காணப்படும்.

பாதுகாப்புக் கண்ணாடி இல்லாமல் தொடர்ந்து வெல்டிங் செய்பவர்களுக்கு கண் நரம்பின் மையப்பகுதி (Macula) பாதிக்கப்படும். இது சரிசெய்ய முடியாத பாதிப்பாகும்.

உலகில் 98% தொழில் சார்ந்த கண் பாதிப்பு, பார்வை யிழப்பை விழிப்புணர்வு மூலமும் முறைப்படுத்தப்பட்ட பாதுகாப்பு சாதனங்களுடன்

### பார்வை நாள்

உலக பார்வையிழப்பு தடுப்பு அமைப்பும் (International Agency for the Prevention of Blindness - IAPB) உலக சுகாதார நிறுவனமும் இணைந்து ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் இரண்டாம் வியாழக்கிழமை உலகப் பார்வை தினத்தைக் கடைபிடித்து வருகின்றன. அந்நாளில் பார்வையிழப்பைத் தடுப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் பார்வையிழப்பு பற்றியும், அதனைத் தடுப்பது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதான் இந்த ஆண்டின் இலக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

வேலை செய்வதன் மூலமும் தடுக்கலாம். வேலை செய்யும் இடங்களில் கண்ணில் ஏற் படும் பாதிப்புகளுக்கு முறை யான முதலுதவி, உடனடி கண் சிகிச்சை அவசியம்.

முக்கியமாக கட்டிடம் கட்டும் தொழிலாளர்கள், கழி வறை சுத்தம் செய்யும் தொழி லாளர்கள் போன்ற அமைப்பு சாரா தொழிலாளர்களிடம் கண் பாதுகாப்பு பற்றிய விழிப் புணர்வு தேவைப்படுகிறது.

### அறியாமை கூடாது

நாற்பது வயது மதிக்கத் தக்க பெண் ஒருவர் கழிவறை கழுவ ஆசிட் பாட்டில் மூடியை அவசரமாக திறந்தபோது பாட்டி லில் உள்ள ஆசிட் கண்ணில் பட்டுவிட்டது.

பொறுக்க முடியாத கண் வலியுடன் வந்த அந்தப் பெண்ணைப் பரிசோதித்த கண் மருத்துவர், அவருக்குச் சிகிச்சையளித்து பார்வை யைக் காப்பாற்றினார். இப்படி ஆசிட் கண்ணில் அடித்து விட்டால் என்ன முதலுதவி செய்ய வேண்டும்?

கண்ணில் ஆசிட் அடித்து விட்டால் உடனடியாக சுத்த மான குடிக்கும் தண்ணீரைத் தொடர்ந்து ஊற்றி கண்களைக் கழுவ வேண்டும். உடனடியாக கண் மருத்துவரை அணுக வேண்டும். ஆசிட் பாதிப்பிற்கு உடனடி சிகிச்சை அவசியம். உடனடி சிகிச்சை செய்ய வில்லை என்றால் பார்வையை இழக்க நேரிடும். மேலும் ஒரு முறை கொடுத்த மருந்தை மருத்துவரை கேட்காமல் நீங் களாகவே கண்ணில் ஊற்றிக் கொள்ளக் கூடாது. சுய மருத்துவமும் கூடாது.

### பூஞ்சைத் தொற்று

பெரும்பாலும் விவசாய வேலை செய்பவர்களின் கண் ணில்மண்விழுந்துவிட்டாலோ, கண்ணில் குச்சி குத்தி காயம் ஏற்பட்டு விட்டாலோ உடனடி யாக கண் மருத்துவரை அணுகி சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும்.

காரணம், விவசாயம் செய்யும் காட்டில் உள்ள மண், குச்சி, குப்பையில் பூஞ்சைக் கிருமி இருக்கும். இதனால் காயம் ஏற்படும்போது நம் கண்ணில் பூஞ்சைத் தொற்று ஏற்பட்டு, நம் கண்விழியில் புண் ஏற்படலாம். பூஞ்சைத் தொற்றைச் சரியாக கவனிக்

---

### யாருடன் நட்பு கொள்ள வேண்டும்?

“இறைநம்பிக்கையாளருடன் தவிர (வேறு யாரிடமும்) நீர் (நெருக்கமான) நட்பு கொள்ளாதீர்! உனது உணவை, இறையச்சம் உடையவர் தவிர வேறு எவரும் உண்ண வேண்டாம்” என்று அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஸயீத் (ரளி) அவர்கள்

காமல் விட்டுவிட்டால் அது கண்ணின் உள்பகுதியில் பரவி பார்வை முழுவதும் பறிபோகும்.

பெரும்பாலும் கிராமத்தில் உள்ள விவசாயிகள் கண்ணில் அடிபட்டு புண் ஏற்பட்டவுடன் மருந்துக்கடைகளுக்குச் சென்று மருந்து வாங்கி ஊற்றிக் கொள்கின்றனர்.

புண், கிருமித் தொற்று அதிகமாகும்போது கருவிழி முழுவதும் பாதிக்கப்பட்டு கருவிழி மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது.

விவசாய வேலை செய்யும் போது கண்ணில் அடிபட்டால் கவனிக்க வேண்டியவை:

1. அடிபட்டவுடன் உடனடியாகக் கண் மருத்துவரை அணுக வேண்டும்.
2. தானாகச் சரியாகிவிடும் என வீட்டில் இருக்கக் கூடாது. மருத்துவரை அணுகாமல் நீங்களாக மருத்துவம் பார்த்துக் கொள்ளக் கூடாது.
3. மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் நீங்களாகவே மருந்துக்கடைகளில் மருந்து வாங்கி ஊற்றக்கூடாது.
4. கருவிழிப் புண்ணுக்கு மாற்று மருத்துவ முறையில் சிகிச்சை எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

---

"மக்களிடம் ஒரு காலம் வரும்; அப்போது மார்க்கத்தைப் பேணுவதில் பொறுமையாக இருப்பவன், கொழுந்துவிட்டு எரியும் நெருப்பைக் கையில் பிடித்திருப்பதைப் போன்று இருப்பான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் : திர்மிதி)


பாவா மெடிக்கல்ஸ்

53/4, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை–1.

04373-254354; 253339; 99444 54354

# மனம் ஏங்குகிறது!

— அத்தாவுல்லாஹ் —

மறைந்த குடியரசுத்தலைவர் அப்துல் கலாம் அவர்களின் இளமையில் நடந்த நெகிழ்ச்சி மிக்க நிகழ்ச்சி இது...

அவரது நெருங்கிய நண்பர் பெயர் ராமநாத சாஸ்திரி. பூணூல் மற்றும் குடுமியுடன் காணப்படும் மாணவர். அவரும் இவரும் நண்பர்கள். அவர் அப்படித்தான் பள்ளிக்கு வருவார். அப்துல் கலாம் இஸ்லாமிய அடையாளமான தொப்பியுடன் தான் பள்ளி செல்வார். இருவரும் முதல் வரிசையில் உட்கார்ந்திருப்பார்கள்.

இருவரும் நெருங்கிய இணை பிரியா நண்பர்கள்... இருவரின் தந்தையரும் அப்படித்தான்...

ஒரு நாள் புதிதாக வந்தார் ஆசிரியர் ஒருவர். அவர் உயர் வகுப்பைச் சார்ந்தவர்.

இரண்டு மாணவர்களும் இப்படி இணை பிரியா நண்பர் களாய் இருப்பதைப் பார்த்த அவருக்குப் பொறுக்கவில்லை.

கலாமை கடைசி பெஞ்சுக்கு அனுப்பி விட்டார்.

அந்த வேதனையை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

சக மாணவருக்கும் அப்படித்தான்.

இருவரும் கண்ணீர் விட்டு அழுது விட்டனர்.

வீட்டுக்குச் சென்று தங்கள் தந்தையரிடமும் கூறி விட்டனர்.

இராமநாத சாஸ்திரியின் தந்தையார்தான் அங்கேயுள்ள கோவிலின் தலைமை சாஸ்திரி. பெயர் பக்ஷி லட்சுமண சாஸ்திரி. அந்த சாஸ்திரிகளும் அப்துல் கலாமின் தந்தையாரும் நீண்ட கால நண்பர்கள். அவர்களோடு ஒரு கிறிஸ்தவப் பாதிரியாரும் உண்டு.

சாஸ்திரிகள் மறுநாள் அந்த ஆசிரியரைக் கூப்பிட்டு கண்டித்திருக்கிறார்.

"இந்த நச்சு விதையை குழந்தைகள் மனதில் விதைக்காதே. இதற்காக நீ மன்னிப்புக் கேள்.

இல்லையென்றால் ஊரை விட்டே போய் விடு"

விதைத்த நச்சு விதையை முளையிலேயே கிள்ளியெறிந்து விட்டார்களே என்று வெலவெலத்துப் போய் விட்டார் அந்த நச்சாசிரியர்!

அன்றைய இராமேஸ்வரம் சமூக நல்லிணக்கத்தின் சான்றாகத் திகழ்ந்த தளம்.

அதுதான் அனைத்துத் தரப்பு மக்களோடும் அனுசரித்துப் போகும் தன்மையை அப்துல் கலாம் அவர்களுக்கு வழங்கி இருக்கிறது.

இப்போதும் அப்படிப்பட்ட ஆசிரியர்கள் பெருகிக் கொண்டு வருகிறார்கள். சாஸ்திரிகள் என்ற பெயரிலும் அதுவல்லாத பெயர்களிலும்.

கலாமின் நண்பரின் தந்தையைப் போன்றவர்கள்தாம் அருகி விட்டார்கள்.

அவர்களோ, மதத்தையும் கடந்து மக்கள் மனதில் மனிதத்தை விதைத்துச் சென்றவர்கள்.

இப்படிப்பட்ட சூழலில் வளர்ந்த நிலைதான் அப்துல் கலாம் அவர்களைப் பக்குவப்படுத்தியிருக்கிறது.

ஆனால், இப்போதோ, வருகின்ற ஆசிரியர்களே பிரித்து வைக்கும் இயல்புடையவர்களாக இருக்கின்றனர். துரதிர்ஷ்டவசமாக ஆங்காங்கே பல சாஸ்திரிமார்களே அதை முன்னின்று செய்கின்றனர்.

அவர்களை அரசாங்கமே ஊக்கப்படுத்துகிறது.

முஸ்லிம்களின் நிலையே இப்படியென்றால், ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்டவர்களின் நிலையோ மிக மிக மோசமாக இருக்கிறது. ஆனால், அவர்களே பலிஆடுகளாகப் பயன்படுத்தப்படுகிறார்கள்.

வேதனை என்னவென்றால் அதனை உணரும் சக்தியற்றவர்களாக கிடக்கிறார்கள்.

எங்கே வளரும் சமய நல்லிணக்கம்?

மீண்டும் எல்லோரும் ஒன்றாக இணைந்து வாழும் சமயக் காழ்ப்புணர்வில்லாத பழைய சமுதாயம் மலராதா என்று மனம் ஏங்குகிறது.

# கப்ரில்......
# தொ(ல்)லைக்காட்சி

"மனிதர்களே! எதை விட்டு நீங்கள் தடுக்கப்பட்டிருக் கின்றீர்களோ, அத்தகைய பெரும் பாவங்களை நீங்கள் தவிர்த்துக் கொண்டால், உங் களுடைய [சிறு சிறு] பாவங் களையும், [குறை களையும்] மன்னித்து, கண்ணியமான இட[மான சொர்க்க]த்தில் உங்களை பிரவேசிக்கச் செய்வோம்" [4:31] என்று அல்லாஹ் தன் அருள் மறையில் கூறியுள்ளான்.

## மார்க்க விஷயங்களை செவியேற்கும் ஒழுக்க நடைமுறை

"அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு தடவை, ஒரு ஸஹாபியின் ஜனாஸாவில் கலந்து கொண்டவர்களாக ஜன்னத்துல் பகீஹ் என்ற அடக்கஸ்தலம் வரை சென்றார் கள். அங்கு சென்றடைந்த பின் கப்ரு முழுமையாக தோண்டி முடிக்க சிறிது நேரமாகும் என்பதை அறிந்ததும், ஓரிடத் தில் அமர்ந்து விட்டார்கள். உடனே நாங்களும் (ஸஹாபாக் கள்) அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அக்கம் பக்கமாக அமர்ந்து கொண்டோம். அப்போது எங்கள் தலைகளின் மீது பறவைகள் வந்தமர்ந்து செல் லும் அந்தளவுக்கு மிக கண்ணியத்தோடும், மரியாதையோடும் இருந்தோம்" என்று ஹள்ரத் பராஃ இப்னு ஆஜிப் (ரளியல்லாஹு அன்ஹு) என்ற நபித்தோழர் அறிவிக் கிறார்கள்.

நபித்தோழர்களிடம் சிறந்த ஒழுக்கமும், தீனின் தேட்டமும், ஆர்வமும் மிகுதி யாக இருந்தன. எனவே அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் மார்க்க விஷயங்களை செவியேற்ப தற்காக அமரநேரிட்டால் தங் களின் உடலையும் சிந்தனை யையும் அண்ணல் நபி (ஸல்) அவர்களையே முன்னோக்கி வைத்திருப்பார்கள். அக்கம் பக்கமாக திரும்பிக் கொண்டோ, ஆர்வமில்லாமலோ அமர மாட்டார்கள். இதுவே மார்க்க விஷயங்களை செவியேற்ப தின் ஒழுக்கமாகும். மேலும் ஹள்ரத் பராஃ இப்னு ஆஜிப் (ரளி) அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அமர்ந்தி ருந்த நிலையைப்பற்றி விவரிக்கிறார்கள்.

“ஆழ்ந்த கவலையில் மூழ்கியுள்ள ஒரு மனிதன், தன்கையிலுள்ள குச்சியால் தரையை கிளறிக் கொண்டே சிந்தித்துக் கொண்டிருப்பதைப் போல அண்ணல் நபி (ஸல்) அவர்களும் ஆழ்ந்த கவலையால் தங்களின் தலையை கீழே தொங்கப் போட்டவர்களாக தங்கள் கையிலிருந்த குச்சியால் பூமியை கிளறிக் கொண்டே ஆழ்ந்த சிந்தனையிலும், யோசனையிலும் திளைத்திருந்தார்கள். ஸஹாபாக்கள் அனைவரும் அவர்களையே கவனித்தவர்களாக, மிக அமைதியாக அமர்ந்திருந்தார்கள். இந்நிலையில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இரண்டு அல்லது மூன்று தடவை கப்ரின் தண்டனையிலிருந்து பாதுகாவல் தேடிக் கொள்ளுங்கள், கப்ரின் வேதனையிலிருந்து பாதுகாவல் தேடிக் கொள்ளுங்கள் கப்ரின் வேதனையிலிருந்து பாதுகாவல் தேடிக் கொள்ளுங்கள் என்று அருளி கப்ரின் வேதனைகள் மற்றும் அதன் நன்மைகளைப் பற்றி மிகத் தெளிவாக விவரித்தார்கள்”.

## உபதேசம் கேட்கும் போது தஸ்பீஹ் செய்ய வேண்டாம்

மேற்கூறப்பட்ட ஹதீஸில் மூன்று விஷயங்கள் நமக்கு விளங்குகின்றன.

(1) நாம் ஒருவரிடம் மார்க்க விஷயத்தைப் பற்றி பேசவோ, கேட்கவோ, அல்லது அதை கற்றுக் கொள்ளவோ சென்றால், அக்கம் பக்கமாகத் திரும்புவதை விட்டுவிட்டு, முற்றிலும் பேசக் கூடியவரை நோக்கி அமர்ந்திருக்க வேண்டும். எனவே தான் பேச்சை கேட்டுக் கொண்டே தஸ்பீஹ் செய்வதை உலமா பெருமக்கள் தடுத்துள்ளார்கள். ஏனெனில், ஸஹாபாக்கள் அண்ணல்நபி(ஸல்)அவர்களின் பேச்சை செவியேற்பதற்காக அமர்ந்திருக்கும் போது, அவர்களின் தலைகளின் மீது பறவைகள் கூட அமர்ந்து செல்லும் என்றால், அவர்கள் அந்த அளவுக்கு சிந்தனையை ஒருமைப்படுத்தி, அமைதியாகவும், ஆடாமலும், அசையாமலும் அமர்ந்துள்ளார்கள் என்பதை யூகித்துக் கொள்ளலாம். ஏனெனில், பறவைகள் ஏதேனும் சிலைகள் போன்ற உயிரற்றவை மீது தான் அமர்ந்து செல்லும். எனவே, அந்தநேரத்தில் நாவால் தஸ்பீஹ் செய்வதை நிறுத்தி விட்டு, தன் உடலையும், சிந்தனையையும் ஒருமைப் படுத்தி மார்க்க விஷயத்தை கேட்பதில் முழுக்கவனம் செலுத்துவது தான் ஒழுக்க நடைமுறையாகும் என்று உலமா பெருமக்கள் கூறுகின்றனர்.

## கப்ருஸ்தானுக்குள் பேண வேண்டிய ஒழுக்கம்

(2) கப்ருஸ்தானுக்குள் சென்ற பின், கப்ரின் வேலைகள் நிறைவடையாமல் இருக்குமேயானால், அங்கு அமரலாம். இருப்பினும் இன்று சிலர் கப்ருகளின் மீது அமர்வதை அல்லது நிற்பதைப் போல, அமரவோ, நிற்கவோ கூடாது. அப்படி அதன் மீது அமரவோ, நிற்கவோ மார்க்கத்தில் அறவே அனுமதி கிடையாது. எனவே கப்ரைவிட்டு ஒரு ஓரமாக நிற்கவோ, அமரவோ வேண்டும். அதே போல கப்ருகளின் மீது நடப்பதும் கூடாது. மாறாக ஓரமாக நடைபாதை யில் நடக்க வேண்டும் என்பதும் மேற்கூறப்பட்ட ஹதீஸின் மூலம் தெரிய வருகிறது.

## கப்ருஸ்தானில் தன் மரணத்தைப்பற்றி சிந்திப்பது

(3) கப்ருஸ்தானுக்குள் நுழைந்த பின்பும் இந்தக் காலத்தில் மிகவும் பொடுபோக்கோடு உலக விஷயங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள். மேலும், அங்குள்ள கப்ருகளைப் பார்த்தும் கூட, தன்னுடைய மரணம், மற்றும் கப்ருடைய நிலைகளைப் பற்றி நினைத்தும் பார்ப்பதில்லை. ஆனால், இந்த ஹதீஸின் மூலம் கப்ருஸ்தானில் நுழைந்த பின்பு எதைப் பற்றி பேச வேண்டும், நினைக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. அங்கு சென்றபின் தன்னுடைய மரணத்தைப் பற்றியும், கப்ரைப் பற்றியும், கப்ரின் நிலைகளைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். மேலும் அங்கு அடக்கப்பட்டுள்ளவர்களைப்பற்றி இவர்களும் ஒரு நாள் நம்மைப்போல உண்டு, உறங்கி, உழைத்து உல்லாசமாக இருந்துவந்தவர்கள் தான். இன்று அவர்கள் கப்ரில் தனியாக இருளில் இருக்கிறார்களா? ஒளியில் இருக்கிறார்களா? இன்பத்தில் இருக்கிறார்களா? துன்பத்தில் இருக்கிறார்களா? என்பதை அறிவிக்க முடியாமல் உறங்கிக் கிடக்கிறார்களே! நாமும் ஒருநாள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதையும், இன்று நான் ஒரு மையித்தை இங்கு கொண்டு வந்ததைப் போல, எனக்கும் ஒரு நாள் மரணம் வந்துவிடும். நானும் மையித்தாக இங்கு கொண்டு வரப்படுவேன்! அந்தநேரத்தில் பெற்றோர்களோ, மனைவியோ, மக்களோ, பொருளோ உடன் வரமாட்டார்கள். அதிகபட்சமாக வந்தாலும், கப்ருவரை வருவார் கள். அதன்பின் தனிமையாக்கப்படுவேன்! என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

# இஸ்லாம் கூறும் நாவடக்கம்

**பேராசிரியர் வி.ஏ.எம்.யாஸீன்,**
எம்.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,எம்.ஃபில்.,

அல்லாஹ் படைத்த அற்புதமான படைப்புகளில் மனித குலத்திற்கு மட்டும் அவன் பேசும் சக்தியை கொடுத்திருக்கிறான்.

"அவனே மனிதனைப் படைத்தான். அவனுக்கு [பேச்சையும்] விளக்கத்தையும் கற்றுக் கொடுத்தான்."

- அல்குர்ஆன் (55 : 3, 4)

நமது ஆதிபிதாவான ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் முதன் முதலில் பேசும் சக்தியை கொடுத்தான். பொருட்களின் பெயர்களை அவர்களுக்கு கற்றுக் கொடுத்து அவற்றை மலக்குகள் முன் கூற வைத்தான்.

"இன்னும், [இறைவன்] எல்லாப் [பொருட்களின்] பெயர்களையும் ஆதமுக்கு கற்றுக் கொடுத்தான். பின் அவற்றை வானவர்கள் முன் எடுத்துக்காட்டி, 'நீங்கள் [உங்கள் கூற்றில்] உண்மையாளர்களா யிருப்பின் இவற்றின் பெயர்களை எனக்கு விவரியுங்கள்' என் றான். அவர்கள் '[இறைவா! ] நீயே தூயவன். நீ எங்களுக்கு கற்றுக் கொடுத்தவை தவிர எதைப்பற்றியும் எங்களுக்கு அறிவு இல்லை. நிச்சயமாக நீயே பேரறிவாளன்; விவேகமிக்கோன்' எனக் கூறினார்கள். 'ஆதமே! அப்பொருட்களின் பெயர்களை அவர்களுக்கு விவரிப்பீராக' என்று [இறைவன்] சொன் னான். அவர் அப்பெயர்களை அவர்களுக்கு விவரித்தபோது, 'நிச்சயமாக நான் வானங்களி லும், பூமியிலும் மறைந்திருப்ப வற்றை அறிவேன் என்றும், நீங் கள் வெளிப்படுத்துவதையும், நீங்கள் மறைத்துக் கொண்டி ருப்பதையும் நான் அறிவேன் என்றும் உங்களிடம் நான் சொல்லவில்லையா?' என்று [இறைவன்] கூறினான்"

- அல்குர்ஆன் (2: 31-33)

பேசும் சக்தி மனித குலத் திற்கு கொடுக்கப்பட்ட மாபெரும் வரம் என்றே சொல்ல வேண்டும். பேசும் சக்தி மிகவும் வலிமையானது. கடுமையான பேச்சு கலகத்தை உண்டு பண்ணுகின்றது. கனி வான பேச்சு கல் நெஞ்சத்தை யும் கரைய வைத்துவிடுகிறது. ஒருவருடைய பண்புகளை

அவருடைய நடை, உடை, பாவனைகள் படம் பிடித்துக் காட்டு வதைப் போல் பல நேரங்களில் அவரது பேச்சுக் களும் படம் பிடித்துக் காட்டு கின்றன. ஒருவர் எப்படி பேசு கிறாரோ அதை வைத்துதான் அவருடைய தராதரம் கணிக்கப் படுகிறது. அவரது தனித் தன்மை வெளிப்படுகிறது. உதாரணமாக, நல்லதை பேசுபவர்கள் நல்லவர்கள் என்றும், கெட்டதை பேசுபவர் கள் கெட்டவர்கள் என்றும், பொய் பேசுபவர்கள் பொய்யர் கள் என்றும், சூழ்நிலைக்கு தக்கவாறு பேசுபவர்கள் சந்தர்ப்பவாதிகள் என்றும், இட்டுக்கட்டி பேசுபவர்கள் குழப்பவாதிகள் என்றும், நம் முகத்திற்கு முன்னால் ஒன்றும், நம் முதுகுக்குப் பின்னால் வேறொன்றும் பேசுபவர்கள் மோசக்காரர்கள் என்றும், கொடுக்கல் வாங்கலில் முன்னுக்கு முரணாக பேசுபவர் கள் மோசடிக்காரர்கள் என்றும், உள் ஒன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்கள் நயவஞ்சகர்கள் என்றும், புறம் பேசுபவர்கள் புரளியாளர்கள் என்றும், எரிந்து விழுந்து பேசு பவர்கள் கோபக்காரர்கள் என் றும், தூங்கி வழிந்து பேசுபவர் கள் சோம்பேறிகள் என்றும், அதிகப்படியாக முகஸ்துதி செய்பவர்களை பசப்புக்காரர் கள் என்றும், மற்றவர்களுக்கு மரியாதை கொடுக்காமல் பேசு பவர்கள் கர்வம் கொண்டவர்கள் என்றும், எந்த இடத்தில், எந்த நேரத்தில், எதை பேசவேண்டும் என்று தெரியாமல் பேசுபவர் கள் இங்கிதம் இல்லாதவர்கள் என்றும், ஒரே விஷயத்தை பல சூழ்நிலைகளில் மாற்றி மாற்றி சொல்பவர்கள் ஏமாற்றுப் பேர் வழிகள் என்றும், தயங்கித் தயங்கி பேசுபவர்களை பயந்த சுபாவமுள்ளவர்கள் என்றும், கோர்வை இல்லாமல் பேசுபவர் களை உளறுவாயர்கள் என் றும், எப்போதும் லொட லொட என்று பேசுபவர்களை ஓட்டை வாயர்கள் என்றும் மனிதர் களுக்கு பட்டப் பெயர்கள் சூட்டப்படுகின்றன.

ஆகவே, சமுதாயத்தில் ஒருவருடைய கண்ணியம், அவர் எப்படி பேசுகிறாரோ அதை பொறுத்து இருக்கிறது.

பட்டணத்திலிருந்து கிராமத்திற்கு சென்ற ஒருவர் அங்கே ஒரு கிராமவாசியிடம் இந்த ஊர் நல்ல ஊரா? என்று கேட்டார். அதற்கு அந்த கிராம வாசி உன் வாய் நல்லதாக இருந்தால் இந்த ஊரும் நல்லதாக இருக்கும் என்று பதில் அளித்தார். "வாயுள்ள பிள்ளைதான் பிழைக்கும்" என்பது பழமொழி. நல்ல முறை யில் வாடிக்கையாளர்களிடம் பேசினால் தான் வியாபாரம் சிறப்பாக நடக்கும். மேல் அதிகாரிகளிடமும், சக ஊழியர்

களிடமும் சுமூகமாகப் பேசினால் தான் உத்தியோகத்தில் நிலைக்க முடியும். அண்டை வீட்டார்களிடம் அனுசரணையாகப் பேசினால் தான் அந்த மஹல்லாவில் குடியிருக்க முடியும். ஆகவே கிராமவாசி சொன்னது போல் வாய் நல்ல வாயாக இருக்கவேண்டும். ஏனெனில் எல்லா பிரச்சனைகளுமே வார்த்தைகளில் தான் ஆரம்பிக்கின்றன.

"மதுரைக்கு வழி வாயிலே" என்று இன்னொரு பழமொழியும் இருக்கிறது. மதுரைக்கு போவதற்கு மற்றவர்களிடம் நல்லபடியாகப் பேசி வழி கேட்டு போவது போலவே, வாழ்க்கையில் முன்னேறுவதற்கு மற்றவர்களிடம் நல்லபடியாகப் பேசி வழி வகைகளை தெரிந்து கொள்ள வேண் டும் என்பது இந்தப் பழ மொழியின் அர்த்தமாகும். ஆகவே ஒருவரின் வாழ்க்கை வெற்றிக்கு அவர் மற்றவர் களிடம் நல்லபடியாகப் பேசி பழகும் முறை அடிப்படையாக அமைகிறது.

"பேசுவதற்கு முன் யோசி, யோசிப்பதையெல்லாம் பேசி விடாதே" என்று ஆங்கிலக் கவிஞன் பைரன் கூறுவது போல் பேசுவதற்கு முன் நன்றாக யோசித்து பேசுதல் வேண்டும்.

சிலரின் பேச்சு சிரிக்க வைக்கும். சிலரின் பேச்சு சிந்திக்க வைக்கும். சிலரின் பேச்சு வியக்க வைக்கும். சிலரின் பேச்சு வியர்க்க வைக்கும். சிலரின் பேச்சு மலைக்க வைக்கும். சிலர் எதைப் பேசினாலும் தெளிவாக இருக்கும். சிலர் என்ன பேசுகிறார்கள் என்பதே புரியாமல் இருக்கும். சிலர் எதற்காக பேசுகிறார்கள் என்பதே புதிராக இருக்கும். சிலர் பேசினால் உற்சாகம் வரும். சிலர் பேசினால் உறக்கம் வரும். சிலர் பேசினால் மயக்கமே வரும்.

சிலர் பேசி சமாதானத்தை உருவாக்குவார்கள். சிலர் பேசி சண்டையை உண்டாக்குவார்கள். சிலர் பேசி சந்தேகங்களை கிளப்புவார்கள். சிலர் பேசி சலிப்படையச் செய்வார்கள்.

சிலர் நினைத்து பேசுகிறார்கள். சிலர் நினைத்ததை பேசுகிறார்கள். சிலர் சொல்ல வேண்டியதை சொல்கிறார்கள். சிலர் சொல்ல வேண்டும் என்பதற்காகவே சொல்கிறார்கள். சிலர் பேசியே குழப்புகிறார்கள். சிலர் குழம்பிப் போய் பேசுகிறார்கள். சிலர் அரிய விஷயங்களை பேசுகிறார்கள். சிலர் அவர்கள் அறியாத விஷயங்களையும் பேசுகிறார்கள். சிலர் புரியும்படி பேசுகிறார்கள். சிலர் அவர்களுக்கே புரியாத விஷயங்களை பேசுகிறார்கள்.

இரண்டு வயதில் பேச ஆரம்பித்து மண்ணறைக்குப் போகும் வரை அனுதினமும் மனிதர்கள் பேசுகிறார்கள். பேசிக்

கொண்டே இருக்கிறார்கள். இலக்கியப் பேச்சு, இலட்சியப் பேச்சு, இனிமையான பேச்சு, இயல்பான பேச்சு, களங்கமற்ற பேச்சு, கலக்கமற்ற பேச்சு, அறிவியல் பேச்சு, அன்பான பேச்சு, அமைதியான பேச்சு, ஊக்கமான பேச்சு, உற்சாக மான பேச்சு,உண்மையான பேச்சு, பண்பான பேச்சு, பணி வான பேச்சு, கனிவான பேச்சு, தெளிவான பேச்சு, அளவான பேச்சு, விளக்கமான பேச்சு, நிதானமான பேச்சு, நேர்த்தியான பேச்சு, நேசமான பேச்சு, சிந்தனை மிக்க பேச்சு, திட்ட மிட்ட பேச்சு, சமயத்திற்கேற்ற பேச்சு, சபைக்கேற்ற பேச்சு, பிரியமான பேச்சு, மகிழ்ச்சியான பேச்சு, கருத்தான பேச்சு, கம்பீரமான பேச்சு, குதர்க்க மான பேச்சு, குத்தலான பேச்சு, ஏளனமான பேச்சு, வன்மமான பேச்சு, கேலிப் பேச்சு, ஆபாச மான பேச்சு, கொச்சையான பேச்சு, விமர்சனப் பேச்சு, நகைச்சுவை பேச்சு, கொள்கை பேச்சு, நம்பிக்கை பேச்சு, அரசியல் பேச்சு, சமூக விழிப்புணர்வு பேச்சு, மத நல்லிணக்கப் பேச்சு, சமூக முரண்பாடில்லாத மதம் சார்ந்த மனிதாபிமான பேச்சு, நிறுவனங்களுக்கான வியாபார வளர்ச்சி பேச்சு, நாட்டிற்கான தூதரகப் பேச்சு, தோழமை பேச்சு, கணவன் மனைவிக்கு இடையே காதல் பேச்சு இப்படிப்பட்ட பலவகை யான பேச்சுவார்த்தைகள் அனுதினமும் நடந்து கொண்டே இருக்கின்றன.

பேசுவது வாழ்க்கையில் ஒரு முக்கியமான அம்சமாகும். பேசுவதற்கான உரிமை இந்த உலகத்தில் அனைவருக்கும் உண்டு.

ஆனால் இடம், பொருள், ஏவல் இம்மூன்றையும் கருத் தில் கொண்டு பேசுகின்ற பேச்சு வார்த்தைகள் தான் வெற்றி அடைகின்றன. இதைப் போல் நாம் யாரிடம் எப்படி பேசுகின்றோம் என்பதை பொறுத்துதான் நம்முடைய கருத்துக்கள் சமுதாயத்தில் ஏற்கப்படுகின்றன. நம்மைச் சுற்றியிருக்கும் எல்லாருமே சமுதாயம் என்ற வட்டத்திற் குள் அடங்குகிறார்கள். 'சொல் லும் விதமே வெல்லும் விதம்' என்ற பழமொழிக்கு ஏற்ப சமு தாயம் நம்முடைய கருத்துக் களை ஏற்கும் அளவிற்கு நம்முடைய கருத்துக்களை வெளிப்படுத்தும் திறன்தான் பேச்சுக் கலையாகும்.

இரண்டுவயது ஆவதற்குள் நாம் பேசக் கற்றுக்கொள் கிறோம். ஆனால், எத்தனை வயதானாலும் எப்படி பேச வேண்டும் என்று நாம் கற்றுக் கொள்வதில்லை என்று கிரேக்க தத்துவ ஞானி சாக்ரடீஸ் கூறினார். பேசும் வார்த்தைகள்

பற்பசை போன்றது. பற்பசையை ஒரு முறை வெளியே எடுத்தால் அதை மீண்டும் டியூபுக்குள் நுழைக்க முடியாது. அதைப்போல் ஒரு முறை வாயிலிருந்து வார்த்தைகள் வெளியே வந்து விட்டால் அவற்றை மீண்டும் வாய்க்குள் நுழைக்க முடியாது என்று அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஒரு முறை வேடிக்கையாக கூறினார்.

உட்கார்ந்து சரியான முறையில் பேசி பிரச்சனைகளுக்கு தீர்வு காணாமல் போனதினால் நீதிமன்றங்களில் வழக்குகள் நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றன. "சிதறிப்பாய்ந்த வில் அம்பும், சிந்திக்காமல் உதிர்த்த சொல்லும் கொண்ட இலக்கை அடைவதில்லை" என்பது பழமொழி. ஆகவே சிந்தித்து பேசப்படும் பேச்சு, சிக்கல்களை தீர்க்கிறது. சீரழிவை தடுக்கிறது. சிறப்பான பலன்களை தருகிறது. உள்ளத்திலிருந்து வரும் பேச்சு உறவுக்கு கை கொடுக்கிறது. எந்த ஒரு காரியமும் வெற்றியா, தோல்வியா என்பதை, பேசுகிற பேச்சை வைத்துதான் முடிவு செய்ய முடியும். ஆகவே பேசுவது என்பது ஒரு கலையாகும்.

சிலர் நகைச்சுவையான பேச்சின் மூலம் எதிரிகளை மட்டம் தட்டுவதும் உண்டு. அறிஞர் பெர்னாட்ஷா மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர். இருந்தாலும் அவருக்கு எதிரிகளும் இருந்தார்கள். ஒரு முறை அவர் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசி கொண்டிருந்தபோது ஒருவன் அவரை முட்டாள் என்றான். இன்னொருவன் அவரை பைத்தியக்காரன் என்றான். 'ஒரு முட்டாள் என்னை பைத்தியக்காரன் என்கிறான். ஒரு பைத்தியக்காரன் என்னை முட்டாள் என்கிறான். இதைப் போல் நாட்டில் முட்டாள்களும், பைத்தியக்காரர்களும் இருப்பார்கள். நீங்கள் கண்டு கொள்ள வேண்டாம்' என்று பெர்னாட்ஷா கூறியதும் அந்த இருவரும் அங்கிருந்து ஓடி விட்டார்கள்.

முன்னாள் இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலிடம் உதவி கேட்க வந்த நண்பர் ஒருவர் நீங்கள்தான் கடவுள் என்று கூற, உடனே வின்ஸ்டன் சர்ச்சில் சரி நீங்கள் அடுத்த வாரத்திலிருந்து சர்ச்சுக்கு போக வேண்டாம். என் வீட்டிற்கு வந்து என்னை வழிபடுங்கள் என்று கூற, அவரின் நண்பர் முகத்தில் அசடு வழிந்தது.

சிறப்பாகப் பேசுவது, உரையாடுவது மென்திறன்களில் (Soft Skills) ஒன்றாகக் கருதப்படுகிறது. பெரும் கார்ப்பரேட் நிறுவனங்கள் தங்களின் ஊழியர்கள் பேச்சுக் கலையில் மேம்பட வேண்டும் என்பதற்காக உள்நாட்டு

மற்றும் வெளிநாட்டு நிபுணர்களை அழைத்து வந்து அவர்களுக்கு பயிற்சியளிக்கிறார்கள். இதற்காக பல இலட்சம் ரூபாய்களை செலவழிக்கிறார்கள். ஆனால் யாரிடம் எப்படி பேச வேண்டும் என்ற வழி முறைகளை இஸ்லாம் 1400 ஆண்டுகளுக்கு முன்பே இந்த உலகத்திற்கு எடுத்துக் கூறி இருக்கிறது.

இந்த வழி முறைகள் உலகத்தில் உள்ள அனைவருக்கும் பொருந்துவதாகும். குறிப்பாக முஸ்லிம்களாகிய நமக்கு இந்த வழி முறைகள் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்ற முறையில் அமைந்திருக்கின்றன. அதாவது இந்த வழி முறைகளைப் பின்பற்றினால் நம்முடைய இம்மை வாழ்வு சிறப்பாகும். அதே நேரத்தில் மறுமையில் அல்லாஹ்விடம் நமக்கு நற்கூலியும் கிடைக்கும்.

பேச்சுக் குரல் ஒலியின் அளவுதான் (Voice Modulation ) பேச்சுக் கலையின் முதல் அம்சமாகும். சப்தம் (Sound) டெசிபல் (Decibel) என்ற அளவுகோலால் அளக்கப்படுகிறது. நாம் சாதாரணமாகப் பேசும் போது 55 முதல் 60 டெசிபல் வரை குரலின் ஒலி இருக்க வேண்டும். இன்னும் அதிகமாகப் போனால் 65 டெசிபல்வரை குரலின் ஒலி இருக்கலாம். அதற்கு மேல் குரல் ஒலி அதிகமானால் எதிரில் இருப்பவர்களுக்கு எரிச்சல் உண்டாகும். நம்முடைய குரலின் ஒலி அதிகமானால் நம்முடன் பேசிக் கொண்டிருப்பவர்களின் கவனம் சிதறிவிடும். நாம் கூறும் கருத்துக்கள் அவர்களின் மனதில் பதியாது. எங்களுக்கு வேறு வேலைகள் இருக்கின்றன என்று கூறி அவர்கள் எழுந்து போய் விடுவார்கள். அல்லது நாம் கூறிய கருத்துக்கள் அவர்களின் மனதில் பதியாவிட்டால் நாம் எதிர்பார்த்த அளவிற்கு பேச்சு வார்த்தை வெற்றிகரமாக முடியாது. இதனால் தான் உன் சப்தத்தை தாழ்த்திக் கொள் என்று அறிஞர் லுக்மான் (அலை) அவர்கள் தன்னுடைய மகனுக்குக்கூறிய அறிவுரையை அல்லாஹ் திருமறையில் சுட்டிக்காட்டியிருக்கிறான்.

**“உன் சப்தத்தையும் தாழ்த்திக்கொள். ஏனென்றால், சப்தங்களிலெல்லாம் மிக்க வெறுக்கத்தக்கது கழுதையின் [உரத்த] சப்தமே!**

-அல்குர்ஆன் (31 : 19)

ஓர் அளவுக்கு மேல் பேசும் சப்தம் அதிகமானால் அது கழுதையின் சப்தத்திற்கு ஈடாகிவிடுகிறது. அந்த சப்தம் அருவெறுக்கத்தக்கதாகும். ஆகவே, அளவான குரல் ஒலியுடன் உரையாடினால் நாம் கூறும் கருத்துக்கள்

நம்மோடு உரையாடுபவர்களின் கவனத்தை ஈர்க்கும். பேச்சு வார்த்தைகளும் சுமூகமாக முடிவுக்கு வரும்.

உரையாடும்போது மென்மையாக உரையாடுங்கள் என்று இன்றைய மென்திறன் (Soft Skills ) நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால் இதையே 1400 ஆண்டுகளுக்கு முன்னரே அல்லாஹ் தன் திருமறையில், கழுதை போல் உரத்த குரலில் பேசுவதை கண்டிக்கின்றான். ஆகவே மென்மையாகப் பேச வேண்டும் என்று அல்லாஹ் இந்த உலகத்தாருக்கு அறிவுறுத்துகிறான்.

அடுத்தபடியாக பேசுவதை தெளிவாகப் பேசவேண்டும். சொல்ல வேண்டிய கருத்துக்களை சரியான வார்த்தைகளால் விளக்கவேண்டும். தெளிவாகப் பேசாதவர்களைப் பற்றி மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு பொது கூட்டத்தில் நகைச்சுவையான ஒரு துணுக்கை கூறினார்கள். ஒருவர் மதிய வேளையில் பசியோடு ஹோட்டலுக்கு வந்து சர்வரைப் பார்த்து "ஏம்பா மூளை இருக்கா? என்று கேட்டாராம். சர்வர் உள்ளே சென்று சமையல் அறையில் பார்த்துவிட்டு வந்து "இதற்கு முன்னே சாப்பிட்டவர்களுக்கு மூளை இருந்தது. உங்களுக்குத் தான் மூளை இல்லை" என்று சொன்னாராம்.

இப்படித்தான் பலர் தெளிவில்லாமல் பேசுகிறார்கள் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதும் கூட்டத்தில் சிரிப்பலை எழுந்தது.

தெளிவாகப் பேசுவது எப்படி என்பதைப் பற்றி மென்திறன் நிபுணர்கள் சில ஆலோசனைகளை வழங்கியுள்ளார்கள்.

* ஒவ்வொரு வார்த்தையையும் தெளிவாகவும், துல்லியமாகவும் சொல்ல வேண்டும்.
* சொற்றொடர்களுக்கும் மற்றும் எண்ணங்களுக்கும் இடையில் இடை நிறுத்தம் தேவை.
* பேசும் போது வார்த்தைகளை அவசரப்படாமல் மெதுவாக உச்சரிக்க வேண்டும்.
* சொல்லப்படும் கருத்துக்கள் புரிந்து கொள்ளப்படும் அளவிற்கு பேச்சில் தெளிவு இருக்க வேண்டும்.

இன்று மென்திறன் நிபுணர்கள் கூறும் வழி முறைகளை 1400 ஆண்டுகளுக்கு முன்பே நபி (ஸல்) அவர்கள் கடைபிடித்திருக்கிறார்கள்.

**ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது :**

**"நபி (ஸல்) அவர்கள் ஒரு விஷயத்தை பேசுகிறார்கள் என்றால், அதை (வார்த்தை வார்த்தையாக, எழுத்து**

எழுத்தாகக் கணக்கிட்டு) எண்ணக்கூடியவர் எண்ணி இருந்தால், ஒன்று விடாமல் எண்ணியிருக்கலாம். (அந்த அளவுக்கு நிறுத்தி நிதான மாக, தெளிவாகப் பேசி வந்தார் கள்.) நீங்கள் ஹதீஸ்களை ஒன்றன்பின் ஒன்றாக வேக வேகமாக அறிவிப்பதைப் போல் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவசர அவசரமாக அறிவித்ததில்லை.''

(ஸஹீஹுல் புகாரி : 3568)

மேலும் சொல்லப்படும் கருத்துக்கள் புரிந்து கொள்ளப் படும் அளவிற்கு ஒரு விஷயத்தை மூன்று முறை கூறி இருக்கிறார்கள்.

ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது :

''நபி (ஸல்) அவர்கள் ஒரு விஷயத்தைச் சொன்னால், தாம் கூறுவது நன்கு புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதற் காக மும்முறை அதை திரும்பத் திரும்பச் சொல்வார் கள். மக்களிடம் வந்தால் அவர் களுக்கு மும்முறை முகமன் (சலாம்) சொல்வார்கள்.''

(ஸஹீஹுல் புகாரி 95)

ஆகவே அவசரப்படாமல் நிறுத்தி நிதானமாகப் பேச வேண்டும். தெளிவாகப் பேச வேண்டும். புரிந்து கொள்ளப் படும் அளவிற்கு கருத்துக் களை திரும்பத் திரும்பக் கூறி மற்றவர்கள் மனதில் பதிய வைக்க வேண்டும் என்று இஸ்லாம் பேசும் முறையை உலகத்தாருக்கு எடுத்துக் கூறுகிறது.

சீறாப்புராணத்திற்குச் சிறந்ததோர் உரையெழுதிய சதாவதனி செய்குதம்பி பாவலர் தமிழ்ப் பெரும்புலவர். இவர் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டதை பாராட்டி அஞ்சல் துறை அவருடைய நினைவு அஞ்சல் தபால்தலையையும் வெளியிட்டது. இரண்டாம் உலகப் போர் நடந்த கால கட்டத்தில் தமிழ்நாட்டில் பெரும்பாலான இளைஞர்கள் இராணுவத்தில் சேர்க்கப்பட்ட னர். அந்த தமிழ் இளைஞர் களுக்கு ஆங்கிலம் தெரியாத தால் அன்றைய பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் கற்றுக் கொடுத்த அணிவகுப்பை சரியாகச் செய்ய முடியாமல் இளைஞர்கள் திணறினர். லெஃப்ட் என்று சொல்லும் போது வலது காலை வைப்பதும், ரைட் என்று சொல்லும்போது இடது காலை வைப்பதுமாக இளைஞர்கள் அணி வகுப்பில் குழம்பிக் கொண்டிருந்தார் கள். இவர்களுக்கு எவ்வாறு அணிவகுப்பை கற்றுத் தருவது என்று பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் திகைத்துக் கொண்டிருந்தனர். அப்போது செய்குதம்பி பாவலர் அவர்கள் இளைஞர்

களுக்கு அணி வகுப்பை தான் சரியாக கற்றுத் தருவதாக பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகளிடம் கூற, அவர்கள் சிரித்தார்கள். "இராணுவ அதிகாரிகளாகிய எங்களாலேயே முடியவில்லை. உம்மால் எப்படி முடியும்?" என்று அவர்கள் கேலி செய்ய ஆரம்பித்தார்கள். அப்போது இராணுவ தலைமை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் வில்லியம் கேம்பல் என்பவர் இராணுவ வீரர்களுக்கு அணி வகுப்பு பயிற்சியளிக்க செய்குதம்பி பாவலருக்கு அனுமதி வழங்கினார்.

"பயிற்சியளிக்க ஒரு வண்டி நிறைய வைக்கோல் வேண்டும்" என்று செய்குதம்பி பாவலர் கேட்க, வில்லியம் கேம்பல் திகைத்துப் போய் விட்டார். "இராணுவ அணிவகுப்பு பயிற்சியளிக்க வைக்கோல் எதற்கு? நீ எங்களை கேலி செய்கிறாயா?" என்று கேம்பல் கோபத்துடன் கேட்க, செய்கு தம்பி பாவலர் சிரித்துக் கொண்டே "வைக்கோல் அவசியம்" என்று கூறினார்.

செய்குதம்பி பாவலர் என்னதான் செய்யப் போகிறார்? பார்க்கலாம் என்று எண்ணிக் கொண்டு கேம்பல் ஒரு வண்டி நிறைய வைக்கோலை வரவழைத்தார்.

வைக்கோலை வைத்து செய்குதம்பி பாவலர் என்ன மாயாஜாலம் செய்ய போகிறார்? என்று பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகளும், பிரிட்டிஷ் இராணுவ வீரர்களும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். செய்குதம்பி பாவலர் கூறியபடி தமிழ்நாட்டு இராணுவ வீரர்கள் மதராஸ் கடற்கரையில் கூடினர். கொஞ்சம் வைக்கோலை எடுத்து வலது காலில் கட்டிக் கொள்ளவேண்டும் என்று செய்கு தம்பி பாவலர் தமிழ் நாட்டு இராணுவ வீரர்களிடம் கூற, அவர்களும் கொஞ்சம் வைக்கோலை எடுத்து வலது காலில் கட்டி கொண்டு வரிசையாக நின்றனர். "வைக்கோல் கால் என்று நான் சொல்லும்போது, நீங்கள் வைக்கோல் கட்டி இருக்கும் வலது காலை முன் வைக்க வேண்டும். வெறும் கால் என்று நான் சொல்லும்போது, நீங்கள் இடது காலை முன் வைக்க வேண்டும்" என்று இளைஞர்களிடம் கூறிவிட்டு செய்குதம்பி பாவலர் "வைக்கோல் கால்; வெறுங் கால். வைக்கோல் கால்; வெறுங் கால்" என்று உரக்கக் கூற ஆரம்பித்தவுடன் இளைஞர்கள் எந்தக் குழப்பமுமில்லாமல் அணிவகுப்பை செய்தனர். இராணுவ அதிகாரிகளும், பிரிட்டிஷ் இராணுவ வீரர்களும் இதைப் பார்த்து அசந்து போனார்கள். கேம்பல் ஓடி வந்து செய்குதம்பி பாவலரை

இறுக்கமாக தழுவிக் கொண்டார். "உனக்கு என்ன சன்மானம் வேண்டும்? கேள்; நான் தருகிறேன். வேண்டுமென்றால் உனக்கு செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் நல்ல சம்பளத்தில்வேலை தருகிறேன்" என்று கேம்பல் கூறினார். "உங்களால் செய்ய முடியாததை தமிழ் நாட்டவர்களால் செய்ய முடியும் என்பதை உனக்கு உணர்த்தவே நான் இந்த பயிற்சி முறையை செய்து காட்டினேன். அந்நியனான உன்னிடம் அடிமை வேலை செய்ய எனக்கு விருப்பமில்லை. உன்னுடைய சன்மானம் எதுவும் எனக்கு தேவையில்லை. நாங்கள் வாழ சுதந்திரம் தேவை. இதை உன் மேல் அதிகாரிகளிடம் கூறு" என்று சொல்லி விட்டு செய்குதம்பி பாவலர் அங்கிருந்து சென்று விட்டார். இதற்கு பின் இந்தியாவில் பல மாநிலங்களில் இராணுவத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கிலம் தெரியாத இளைஞர்களுக்கு இந்த வைக்கோல் அணிவகுப்பு பயிற்சியை பிரிட்டிஷ் அரசாங்கம் அளிக்க ஆரம்பித்தது. ஆகவே சொல்வதை தெளிவாகச் சொல்ல வேண்டும். மற்றவர்களுக்கு புரியும் மொழியில் விவரிக்க வேண்டும்.

(தொடரும்)


துவக்கம் 1958

**குர்ஆனின் குரல்**

நம்பர் 1 மாத இதழ்

நிறுவனர்கள் : அல்லாமா
**அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி** (ரஹ்)

அல்லாமா "அஸ்அதுல் மில்லத்"
**அ. முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ** (ரஹ்)

பொறுப்பாசிரியர் : மவ்லவீ முஃப்தீ
**மு.முஹம்மது இஸ்மாயீல்**
காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஹஸ்ரத்

**குர்ஆனின் குரல்**
தபால் பெட்டி எண் : 45,
4/25, எழில் நகர், மேலமடை,
**மதுரை-625020.**

அலுவலக அலைபேசி எண் :
**94420 56547**
E.mail : quraaninkural@gmail.com
web : www.quraaninkural.com

ஓராண்டு சந்தா ரூ.300/-
தனி இதழ் ரூ.25/-

விளம்பரம் மற்றும் ஏஜன்ஸீ
தொகை செலுத்துபவர்களுக்கு :
Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No. 6851528029 IFSC Code : IDIB000T003

சந்தா தொகை செலுத்துபவர்களுக்கு :
M/s. INDIAN OVERSEAS BANK,
Madurai Meenakshi College Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No. 175701000003467
IFSC Code : IOBA0001757

Google Pay Name : QURANIN KURAL
Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH

குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

# ஆணவ வெறி கொண்ட அரபுக் குறைஷிகள்

கம்பம் மவ்லானா
**பி.எம். பீர் முஹம்மது பாகவி ஹஸ்ரத்**

எவ்வித உள்நோக்கமுமில்லாமல் அண்ணலிடம் வெளிப்பட்ட எதார்த்தமான பேச்சைக் கேட்டு "புதைல் பின் வரகா" உண்மை நிலையைத் தெரிந்து கொண்டார். இறை வணக்கம் செய்யவே இறைப்பள்ளி நோக்கி வந்திருக்கின்றனர். போர் புரியும் எண்ணம் துளியும் இல்லை என்பதையும் அறிந்து கொண்டார். உணர்ச்சி வசப்பட்டு, வெறி கொண்டு சீறும் நயவஞ்சகக்காரர்களான குறைஷியருக்கு இது குறித்து விளக்கிச் சொல்ல வேண்டும் என எண்ணி "புதைல்" பெருமானாரிடம் விடைபெற்றுக் கொண்டு மக்கா திரும்பினார்.

ஒரு நாடோடிக்கூட்டத்தின் தலைவராக இருந்தும் சமாதானத்தின் தூதனாக புதைல் சென்ற விதம் அவரது உயர்ந்த உள்ளத்தைத்தான் காட்டுகின்றது. அந்த அறியாமைக் காலத்தில் இவ்வாறான எண்ணம் தோன்றுவது அரிதானதாகவே இருந்தது. கிராமப்புறத்தில் வாழ்ந்த மக்களின் எண்ணம் - மனநிலை நகர்ப்புறத்தாரிடையே இல்லை என்பது அன்றைக்கே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆம்! அண்ணலின் எண்ணத்தை, அவர்களது வருகையின் நோக்கத்தை புதைல் எடுத்துரைத்தபோது, அந்த மக்க மாநகர் அரபுத்தலைவர்கள் அதைச் செவி கொடுத்துக் கேட்பதற்குக்கூடத் தயாராக இல்லை. "புதைலே... போதும் நிறுத்தும்! முஹம்மது பற்றி நீர் கூறும் எதையும் நாம் கேட்க விரும்பவில்லை என்றார் இக்ரிமா. இவர் குறைஷியரின் பெருந்தலைவன்மடிந்திட்ட அகந்தைக்காரன் அபூஜஹ்லுவின் மகனாவார்.

"ஃதகீப் கிளைத் தலைவரான உர்வா பின்மஸ்ஊத் ஃதகபி என்பார் ஆங்கு இருந்தார். எப்போதுமே குறைஷியரின் சார்பாளராகவும், நேயராகவும் இருந்தார். குறைஷியரின் மீது அதிக உரிமை எடுத்துக் கொள்ளக் கூடியவராகவும் இருந்தார். "எவரும் ஆத்திரப்பட்டு அழிவைத் தேடிக் கொள்ள வேண்டாம். "புதைல்" சொல்வதை சற்று நிதானமாகக் கேட்போம். ஆத்திரமும், ஆவேசமும்தான் பல அழிவுகளையும், தோல்வி

களையும், மாறா சோகங்களை யும் தந்து விட்டது. இனியும் அவை நீடிக்க வேண்டாம்" அழுத்தமாகப் பேசினார் உர்வா. அனைவரும் அமைதியாயினர். அவரின் ஆணித்தரமான பேச்சு அங்கிருந்த தலைவர்களை ஓரளவு சிந்திக்க வைத்திருக்க வேண்டும். அனைவரும் அவரையே உற்று நோக்கினர்.

"புதைலே!" முஹம்மதிட மும், அவரது தோழர்களிடமும் நீர் கண்டவற்றைக் கூறும். அவர்களது வருகையின் நோக்கம் தான் என்ன?" என உர்வா வினவினார்.

அண்ணலின் நிலையை தெள்ளத் தெளிவாக விளக்கி னார் புதைல். புதைலின் பேச் சைக் கேட்டு மகிழ்ந்திட்ட உர்வா, "குறைஷியரே! நீங்கள் சந்தோஷப்படுங்கள்! புதைல் உங்களுக்கு மாபெரும் வெகு மதியையே கொண்டு வந்திருக் கிறார். அழிவையும், இழிவை யும் தேடிக் கொள்வோரைத் தவிர வேறெவரும் இதனை நிராகரிக்க மாட்டார். நீங்கள் அனுமதித்தால் உங்கள் சார்பில் இது குறித்து அந்த முஹம்ம திடம் பேச்சுவார்த்தை நடத்த நான் செல்வேன் " என்றார்.

மறுப்பேதும் கூறாத குறைஷியர் அவரது கூற்றை அப்படியே ஏற்று அங்கீகரித் தனர். ஹுதைபிய்யா செல்ல உர்வா ஆயத்தமானார். நபிகளாரின் நடவடிக்கையை அறிந்து வர பனூஹாரித் கிளை யின் பண்பட்ட வீரத் தளபதியாம் ஹுலைஸ் என்பாரை இரகசிய மாக முன்னதாகவே அனுப்பி இருந்தனர் இந்தக் குறைஷிகள்.

உண்மையில் ஹுலைஸ் நல்ல பண்பாளர். மிகச் சிறந்த வீரர். நீதி நேர்மைக்குக் கட்டுப் பட்டவர். அக்கிரமம் எவர் செய் தாலும் தட்டிக் கேட்பவர். உஹுதில் உயிர் துறந்த இஸ்லாமிய அறப்போர் வீரர்களின் புனித உடல்களைக் குதிரைகளை விட்டு சிதைத்தபோது அன்றைய தளபதி அபூஸுஃப்யானையே கடுமையாகக் கண்டித்தவர். "இதென்ன கொடுமை? இது எந்த வகையில் நியாயம்? போர் நெறிக்கும், வீரத்துக்கும் இது அழகல்ல" என்றார். துணி வான, மிகுந்த கண்ணியம் வாய்ந்திட்ட அந்தப் பெருமகன் ஆங்கு வந்தபோது அவரை அறிந்து கொண்ட அண்ணலார் தாங்கள் வந்துள்ள நோக்கத்தைத் தெளிவுபடுத்துவதற்காக இறை வணக்கத்தின் (உம்ரா) இறுதியில் அறுத்துப் பலியிடு வதற்காக - ஏழைஎளியோருக்குப் பங்கீடு செய்வதற்காக அடை யாளமிட்டுக் கொண்டு வரப் பட்ட ஒட்டகங்களை அவர் முன்னே அனுப்பினார்கள். அந்த வாயற்ற ஜீவன்கள் அமைதியாக நடைபயின்று அணிவகுத்தன.

சிறிதுநேரம் மௌனத்துடன் இருந்து அனைத்தையும் அவதானித்த ஹுலைஸ் எதுவும் பேசிக் கொள்ளாமல்... எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்தாமல் மக்கா திரும்பினார். ஏனெனில் பேசுகின்ற அளவுக்கு ஆங்கு எதுவுமில்லை. ஆம்! ஆங்கிருந்த அனைவருமே புனிதப் பயணிகள். அந்த தோற்றமே ஆங்கு நிறைவாகத் தென்பட்டது. இஹ்ராம் எனும் புனித ஆடை அணிந்திருந்தனர்.

குறைஷியரின் இரகசிய தூதராகச் சென்று வந்த வீரர் ஹுலைஸ் “குறைஷியரே! ஹுதைபிய்யாவில் கூடாரமிட்டிருக்கும் முஸ்லிம்களை நான்நன்கு கவனித்துவிட்டேன். உற்று நோக்கி அவர்களின் உண்மை நிலையைத் தெரிந்து கொண்டேன். அவர்களின் நோக்கம் தூய்மையானது. இறையில்லத்தைத் தரிசிக்கும் புனித யாத்திரையை மேற்கொண்டு தான் இங்கு வந்திருக்கின்றனர். போர் புரியும் எந்த உள் நோக்கமும் அவர்களுக்கு அணுவளவும் இல்லை. அவர்களின் உள்ளும் புறமும் அமைதியும் சாந்தமுமே தெரிகின்றது. இதை உறுதியாக நான் அறிந்தேன்” என்றார்.

செருக்குப் பிடித்த குறைஷித் தலைவர்களில் சிலர் அவரது கருத்தைப் புறக்


நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்

பாவா மெடிக்கல்ஸ்

294/1, சாலை தெரு,
இராமநாதபுரம் – 623 501.

போன் : 04567–224500, 228500
செல் : 9443255158

கணித்தனர். ஹுலைஸை அலட்சியப்படுத்தினர். பாலை வனப் பட்டிக்காட்டு மனிதரான இவருக்கு உண்மை நிலை எங்கே தெரியப்போகிறது? தீர்க்க யூகத்தையும் துல்லிய கணிப்பையும் இவர் எங்கே அறியப் போகிறார்? இவர் ஏதாவது சொல்லுவார்; இவரது பேச்சை விட்டுத் தள்ளுங்கள்! என்றனர்.

'ஆம்! செருக்கு பிடித்த ஆணவக்காரர்களான குறைஷியரின் இயல்பு இதுதான். என்னதான் தங்களோடு போர்க் கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்ட கோத்திரத்தாராயினும் தாங்களே உயர்ந்தவர்களென்ற இறுமாப்பு அவர்களின் இரத்தத்தோடு கலந்ததாயிருந்தது. மற்ற கோத்திரத்தாரை இழிவாகக் கருதி ஏளனமாகப் பேசி விடுவர். ஏதோ நெருக்கடியான நேரத்திற்கு வேண்டுமானால் இப்படிப்பட்டவர்களைப் பயன்படுத்துவார்களே தவிர, மற்றபடி வேறெந்த சம அந்தஸ்தையும் வழங்கமாட்டார்கள். சாதாரணமாகவே ஆக்கி விடுவர். இவ்வாறானோர் இன்றும் இருக்கின்றனர். சந்தர்ப்பவாதிகள் - சுயநலக்காரர்கள் - வக்கிர மனத்தினர்.

பனூ ஹாரித் கூட்டத் தளபதி ஹுலைஸ் குமுறினார். குரலை உயர்த்தினார். "குறைஷித் தலைவர்களே! இதென்ன அநீதி? மக்காவின் இறை ஆலயம் எல்லாருக்கும் பொதுவானது. இறை வணக்கம் புரியவரும் புனிதப் பயணிகளை வரவேற்று உபசரித்து அவர்களுக்கு உதவுவது தொன்று தொட்டு நடந்துவரும் மரபாகும். கஅபாவின் காவலர்களான பொறுப்பாளர்களின் பன்னெடுங் கால மரபாகும். கடமையாகும். இந்தக் கடமையை இன்று நீங்கள் ஏன் மீறுகிறீர்கள்? இது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கின்றது. இவ்வாறான அநீதி அக்கிரமத்திற்குத் துணை போகவா உங்களோடு நாம் ஒப்பந்தம் செய்தோம்? எரிமலையாய்ப் பொங்கினார் ஹுலைஸ்.

## அலைக்கழிக்கப்பட்டு அவமதிக்கப்பட்ட புனிதப் பயணிகள்

"முஹம்மதும், அவரைச் சார்ந்தோரும் எந்த எண்ணத்துடன் இங்கு வந்திருக்கின்றனரோ அதற்குத் தடையாக உங்களில் எவரும் இருக்க வேண்டாம். இது புனித யாத்ரீக தர்மமல்ல. பன்னெடுங் காலத்திய மரபை மீறாதீர்கள். அவ்வாறு மீறுவீர்களேயானால் இனி என்றைக்கும் நாம் உங்களுக்குத் துணையாக வரமாட்டோம். இப்போதே இங்கிருந்து எம்மவரைத்திருப்பி அழைத்துச் சென்றிடுவோம்" என உணர்ச்சி பொங்க உரத்துப்

பேசினார் பாலைவனக் கூட்டுப் படைத்தலைவர் ஹுலைஸ்.

எல்லாரிலும் நீதியை விரும்பும் நேர்மையாளர்கள் இருக்கின்றனர் என்பதற்கோர் எடுத்துக்காட்டுதான் இவரது பேச்சு. தனது நீண்ட காலத்திய நண்பர்களான நட்புக் கூட்டத்தாராகிய குறைஷித் தலைவர்களை எதிர்த்துப்பேசவேண்டும் என ஹுலைஸ் ஒருபோதும் திட்டமிடவுமில்லை. நினைக்கவுமில்லை. ஆனால் அவருள் அமிழ்ந்திருந்த உண்மை, நீதி, மனசாட்சி ஆகிய அனைத்தும் விழித்துக் கொண்டன. வீறு கொண்டெழச் செய்தன. எல்லாரிலும் எல்லாரும் இருக்கின்றார்கள். ஓரினத்தில் ஓரிருவர் கெட்டவர் இருக்கின்றார்கள் என்பதற்காக அந்த இனமே கெட்ட இனம் எனக் குற்றம் சொல்ல முடியாது. எல்லாரிலும் நல்லோர் இருப்பது போல தீயோரும் இருக்கவே செய்வர். நல்லதும், கெட்டதும் கலந்ததுதான் இவ்வுலகு.

'ஹுலைஸ்' இப்படி எதிர்த்துப் பேசி ஒரு தீவிர முடிவுக்கு வருவாரென அந்தக் குறைஷித் தலைவர்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. மற்றபடி ஹுலைஸின் பலம் அவர்களுக்கு நன்கு தெரியும். சிறுசிறு நாடோடிக் கூட்டங்களின் சக்தி வாய்ந்த ஒருங்கிணைப்புத் தலைவரான அவரைப் பகைத்துக் கொள்ளவோ, இழக்கவோ ஆங்கிருந்த அனுபவம் வாய்ந்த குறைஷித் தலைவர்களில் சிலர் தயாராக இல்லை. அதன் விளைவுகளை அவர்கள் அறிந்திருந்தனர். ஹுலைஸின் பலம் எப்போதும் இவர்களுக்குத் தேவைப்பட்டது. இதனால் இந்நிலை நீடிப்பதை விரும்பாத அவர்கள், உணர்ச்சிவசப்பட்டு ஆத்திரத்துடன்கத்திக்கொண்டிருந்த இளம் குறைஷித் தலைவர்களை அடக்கி அமைதிப்படுத்தினர்.

"ஹுலைஸே! எதையும் தீர்க்கமாக முடிவு செய்ய முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் நெருக்கடியான இவ்வேளையில் தயை கூர்ந்து நீர் சிறிது பொறுமையாக இரும். அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துவிடவேண்டாம்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர்.

அநீதியைத் தட்டிக் கேட்டவர் அவசரக்காரர்! நீதிக்காகப்போராடுபவர் குழப்பவாதி! நேர்மைக்காகக் களம் இறங்குபவர் பயங்கரவாதி! ஆதிக்க வெறியை எதிர்த்து நிற்போர் தீவிரவாதி. இது என்ன அளவுகோல்? இதுதானே அன்றைய உலகத்திலும் இன்றைய உலகத்திலும்! எப்போதுமே ஆதிக்க வெறி பிடித்தோர்

நீதியை விரும்புவதே இல்லை. இந்தப் பூமிப் பரப்பும், அந்த வாயு மண்டலமும் அத்தனையும் தமக்குத் தான். தங்களுக்கு மட்டும்தான் என எண்ணும் அகன்றபேராசையும், பச்சையான சுயநலமும், இறுமாப்பும் தான் காரணம். இன்றும் இத்தகையோர் வல்லரசுகள் எனும் பெயரில் உலகின் சண்டியர்களாக சாட்டாம்பிள்ளைகளாக இருக்கின்றனர்.

மொழியாலும், இனத்தாலும், நிறத்தாலும் எல்லாரிலும் நாங்களே மேம்பட்டவர்கள். இந்த உலகத்தின் ஒட்டு மொத்த அதிபதிகள். நாங்கள் சொல்வதைத்தான் எல்லாரும் கேட்க வேண்டும். நாங்கள் எல்லாரிலும் தலையிடுவோம். எந்த நாட்டையும் தட்டிக் கேட்போம். எங்களை எவரும் எதற்காகவும் கேட்கக் கூடாது என்ற மனப்போக்கு ஆதிக்க வெறிகொண்ட வல்லரசுகளிடம் இன்றைக்கு இருப்பது போல அன்றைய அறியாமை ஆணவ வெறி கொண்ட அரபுக் குறைஷியரிடம் இயல்பாக இருந்தது.

குறைஷியரால் அனுப்பப்பட்ட உர்வாபின் மஸ்ஊத் ஃதகபி அண்ணல் பெருமானாரிடம் வந்தார். எப்போதுமே பிறரை மதித்துப் பழக்கப்பட்ட அண்ணல் அவரை அன்புடன் வரவேற்று உபசரித்து அமரச் செய்தார்கள். இயல்பிலேயே "உர்வா" ஒரு பெருமைக்காரர். குறைஷியர் தன் தலையில் ஏதோ ஒரு பெரியகிரீடத்தையே சூட்டி அனுப்பியது போல இந்தத் தூதை அவர் கருதினார். இவ்வாறு எண்ணிக் கொண்ட அவர், இறைத்தூதரிடம் அடக்கமில்லாது அதிகப்பிரசங்கித்தனமாக நடந்து கொண்டார்.

செம்மல் நபிக்குச் சமமாகத் தன்னைப் பாவித்த அவர், பேச்சினூடே அண்ணலின் தாடியில் கை வைப்பதும், அணிந்திருந்த சட்டையைப் பிடித்துஇழுப்பதுமாக இருந்தார். அண்ணலை அலட்சியப் படுத்துவது போன்ற தோற்றத்தை உண்டாக்கினார். அண்ணலோ மலர்ந்த முகத்துடன் புன்னகை சிந்தி இவரது போக்கைக் கண்டு கொள்ளாமல் அவரிடம் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

தோழர்களுக்கோ தூக்கி வாரிப்போட்டது. தாங்கள் உயிரினும் மேலாகக் கருதிப் பின்பற்றும் இறைத்தூதரை இந்த உர்வா சாதாரணமாகக் கருதி நடந்து கொள்வதைப் பொறுக்க முடியாத அப்பெருமக்கள் பரபரப்பாயினர். அவர்களில் முகீரா (ரளி) எனும் தோழர் தன் உடைவாளின் ஒரு பகுதியால் உர்வாவின் கரத்தைத் தட்டிவிட்டு இவ்வாறு செய்ய வேண்டாம் என

உணர்த்தினார். உர்வாவோ மறுபடியும் தூதரின் தாடியில் கை வைக்க ஆரம்பித்தார். வெகுண்டெழுந்த முகீரா (ரளி) "இதோ பாரும்! இறைத் தூதரிடம் மரியாதையாக நடந்து கொள்ளும்! முதலில் மரியாதையைக் கற்றுக் கொண்டு வாரும். உனது கை உனக்கு வேண்டுமென்றால் உடனே அண்ணலின் பொன் மேனியிலிருந்து உனதுகரத்தை எடுத்துக் கொள்ளும்!" என வாளை உயர்த்தி எச்சரித்தார். இறைத்தூதர் நபியவர்கள் மீது தோழர்கள் வைத்திருந்த மதிப்பு, மரியாதை, ஆழமான அன்பைப் பார்த்து வியந்திட்ட உர்வா, பின்னரே அடக்கமாக அடங்கிப் போனார். அச்சத்துடன் உரையாடினார்.

உண்மை நிலை அறிந்து வரும் ஒற்றராக, குறைஷியரின் தூதராக அங்கு வந்த உர்வா, பல கோணத்தில் அண்ணலிடம் மனம் விட்டுப் பேசினார். தோழர்களிடம் ஏற்பட்டிருந்த நல்ல மாற்றங்களை நன்கு நோட்டமிட்டுத் தெரிந்து கொண்டார். முன்பு மக்காவில் நம்மோடு இருந்தவர்களா இவர்கள்? எங்கே அந்த மூர்க்கக் குணம்? எங்கே அந்த முரட்டுத்தனம்? அந்த வெறியும், வேகமும், ஆர்ப்பரிப்பும், எதற்கும் எவர்க்கும் கட்டுப் படாத தான் தோன்றித்தனமும் என்ன ஆயின? இவர்களுக்கு என்ன வந்துவிட்டது? ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இங்கு இருக்கின்றனர். என்னே அமைதி! என்னே அடக்கம்! என்னே பணிவு! என்னே சாந்தம்!

எல்லாரின் முகத்திலும் ஒளியல்லவா வீசிக் கொண்டிருக்கின்றது? ஆ... என்னென்னவோ ஓதுகின்றார்கள்...! எதை எதையோ உச்சரிக்கின்றார்கள்! இவர்கள் செய்யும் இறை வணக்கமும் ஒரு புதுமையாக, புதிய முறையாக இருக்கின்றதே! என்ன! எந்தக் கடவுளின் சிலையும் இவர்களின் முன்னே இல்லையே! உடல் கழுவி தூய்மையாக்குகின்றார்கள். சீராக நின்று கைகளை உயர்த்திப் பணிவுடன் கட்டிக் கொண்டு ஏதோ ஓதுகின்றனர். பின் குனிந்து ஏதோ உச்சரிக்கின்றனர். பின் நிமிர்ந்து, பணிந்து, நெற்றியை நிலத்தில் பதித்து ஏதோ ஓதி மீண்டும் அவ்வாறு செய்து முறையாக இறை வணக்கம் செய்கின்றனரே! பின்னர் ஒருவருக்கொருவர் கரம் பிடித்து அனைவரும் ஆரத்தழுவி சகோதரத்துவத்தைப் பலப்படுத்திக் கொள்கின்றனரே! உர்வாவின் சிந்தனை, சிறகு விரித்தது. வியந்து நின்றார்!

(தொடரும்)

# துஆ மஜ்லிஸ்

## பரிபூரண உடல்நலம் பெற

என் தாயாரின் கால் மூட்டு வலி நீங்கி, கஷ்டங்கள் இலேசாகி, பரிபூரண சுகம் பெற்று, ஆரோக்கியத்துடன் எழுந்து நடந்து நலமுடன் வாழ வல்ல ரஹ்மானிடம் துஆ செய்யுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம். -

**K.M.குடும்பத்தினர்** – மதுரை – 20

அப்ஸரா பானு - சென்னை; மவ்லானா அப்துல் அஹது ஹள்ரத் - செங்கல்பட்டு; நஜீர் அஹமது - மங்கலம்; சதக்கத்துல்லாஹ் மளிகை - மங்கலம்; ஏ.ராபியத் பஸரியா - மூணார்; என்.மும்தாஜ் - தஞ்சாவூர்; எல்.ரேஷ்மா - சவூதி அரேபியா; எஸ்.ஹஸன் பானு, எஸ்.நூருன்னிஷா - தஞ்சாவூர்; ஆர்.முஹம்மது சாதிக் - ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ - ஒட்டன் சத்திரம்; ஜவாஹிர் பேகம் - மதுரை; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; காஜா மைதீன், ஜாகீர் உசேன் - மங்கலம்; சந்தா எண் B 399 - மடத்துக்குளம்; எம்.உமர் - ஈரோடு; சிராஜும் முனீரா - டெல்லி; தங்கமணி - ஈரோடு; எம்.ஹபீபுன்னிஸா - ஈரோடு; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, செய்யது அபுதாஹிர், அப்துஸ் ஸலாம் - மதுரை; பாத்திமா - பழனி; காஜா மைதீன் - நெய்க்காரப்பட்டி; சையத் ருக்ஸானா - திருச்சி; அ.அப்துல்லாஹ், உஷ்ணாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா - மதுரை; ரஷாத் - தஞ்சாவூர்; பி.தாஹிரா - பழனி; குரல் வாசகி - தஞ்சாவூர்; குரல் வாசகி - லால்குடி; நசீர் - தஞ்சாவூர்; நியாமத் - பெரிய கலையம்புத்தூர்; ஷாகுல் ஹமீது - மதுரை; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் - மதுரை; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் - மதுரை; எஸ்.சபியா பீ - ராசிபுரம்; சந்தா எண் D1580 - சேலம்; சந்தா எண் B1630 - பள்ளபட்டி; நூர்ஜஹான் - கோயம்புத்தூர்; மதீனா பேகம் - கோயம்புத்தூர்; ரஹ்மத் நிஸா, முஹம்மது ஹாரிஸ் - கோயம்புத்தூர்; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ், சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா, அம்ரின் ஷிஃபா - மதுரை; செல்லபா, எஸ்.கோரிமா - விராதனூர்; பி.காதர் பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; முஹம்மது இப்ராஹீம், ராபியத்துல் பஸரிய்யா, ஷமீமா பேகம், ரெஜினா பேகம், அ.ஜெய்புன்னிஸா - திருச்சி; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு,

முஹம்மது தாஹா - மதுரை; ஷேக்கா ஷகிலா ரியாஸ் - திருச்சி; முகசினா பேகம் - மங்கலம்; தாஹிர் நிஸா - கூத்தாநல்லூர்; எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ, யாஸமீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நாகீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா - மதுரை; அ.பரிதா பானு - கோவை; முஹம்மது ஃபயாஜ் - திருச்சி; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் - மதுரை; முஹம்மது அஷ்ரஃப் அலீ, ஜஸீமா பானு, பாத்திமா ரஸ்வின், ஹாஜி எம்.காதர் இப்ராஹீம், மாஹிம் எஸ்.கே.ஏ.முஹம்மது இஸ்மாயீல், எம்.ஜெய்த்தூன் பீவி - திருச்சி; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் - சென்னை; ஷாக்கீர் உசேன், சபினா, அன்வா, ஸாஜியா - அபுதாபி; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுசைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பாஹானா, ஹஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் - இராமநாதபுரம்; பஜ்லுர் ரஹ்மான், முபினா, பஹிமா, ஹபிஸா, ஃபஜி - சென்னை; காஜா ஹுசைன், நஸீமா, நஸீரா, நிலோஃபர் - மதுரை; முஹம்மது ரஃபீ, ஷமீமா, அய்மன் முஹம்மது, அாஹம் முஹம்மது - சவூதி; ரோஸ் பானு, சுல்தான் அலாவுதீன் - ஒத்தக்கடை; ஷரீன் - திருநெல்வேலி; பீ.முஹம்மது யாகூப், S/o. எம்.குல் முஹம்மது - திருச்சி;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் தாமத் பரக்காத்துஹு அவர்களும், துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...

# இதயம் பேசுகிறது!

என் மகள் ஏ.ரஹ்மத்துன்னிஸா பேகம் திருமணத்திற்காக துஆ செய்ய வேண்டி துஆ மஜ்லிஸில் கேட்டிருந்தேன். வல்ல அல்லாஹ் வின் பேரருளாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தாலும் திருமணம் சிறப்பாக நடைபெற்று அவர்களுக்கு சாலிஹான ஆண் குழந்தையும் உள்ளது என்பதை, துஆ செய்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மிக்க மகிழ்ச்சி கலந்த நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். **எம்.மதீனா பேகம் – கோயம்புத்தூர்.**

எனது மகனார் கடந்த 2019ஆம் ஆண்டில் இயற்கை மருத்துவர் படிப்பை நல்ல விதமாக முடித்துவிட்டு நான்கு ஆண்டுகளாக இயற்கை மருத்துவராக (Naturopathic Doctor) பணிபுரிந்து வருகிறார். தற்போது 4 மாதங்களாக இலண்டலில் கப்பல் கம்பெனியில் மருத்துவராகப் பணிபுரிகிறார். எனது மகனாரின் இலட்சியம் நிறைவேற துஆ செய்த துஆ மஜ்லிஸ் குழுவினருக்கு எங்கள் குடும்பத்தார் சார்பாக துஆவையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். **எஸ்.அபூதாஹிர் – தாராபுரம்.**

வல்ல அல்லாஹ்வின் பேரருளால் என் மகனுக்கு ஒன்றிய அரசு காலேஜில் இடம் கிடைத்து படித்து வருகிறார். இறைவனுக்கே எல்லாப் புகழும்! துஆ செய்த அனைவருக்கும் மிக்க நன்றி! நன்றி!! **ராபியத் பஸரியா – மூணார்.**

---

## பெருமானார் (ஸல்) அவர்கள் இட்ட கட்டளைகள் ஏழு

ஹள்ரத் அபூதர் (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள் :

“எனது நேசர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏழு காரியங்களைச் செய்ய எனக்கு கட்டளையிட்டார்கள்.

1. நான் ஏழைகளை நேசிக்க வேண்டும். அவர்களுடன் நெருக்கமாக இருக்க வேண்டும்.
2. வசதி வாய்ப்பில் என்னை விடத் தாழ்ந்தவர்களை கவனிக்க வேண்டும். என்னை விட உயர்ந்தவர்களை கவனிக்க வேண்டாம்.
3. என்னுடைய உறவினர்கள் என்னைப் புறக்கணித்தாலும் அவர்களோடு உறவு முறையைப் பாதுகாக்க வேண்டும்.
4. நான் யாரிடமும் எதையும் கேட்கக் கூடாது.
5. மக்களுக்கு கசப்பாக இருந்தாலும் உண்மையைப் பேச வேண்டும்.
6. அல்லாஹுதஆலாவின் மார்க்கம் மற்றும் அவன் கட்டளைகளைப் பரப்புவதில் எவரது பழிப்பையும் கண்டு பயப்படக்கூடாது.
7. “லாஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹி” என்ற கலிமாவை அதிகமாக ஓதி வருமாறும் எனக்கு கட்டளையிட்டார்கள்.

நூல் : மளாஹிர்ஹக், முன்தகப் அஹாதீஸ் பக்கம் 554

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

திண்டுக்கல் மாவட்டம் வேல்வார்கோட்டை மர்ஹூம் முஹம்மது ஹனீபா (ரஹ்) அவர்களின் அன்பு மகனார் மவ்லானா எம்.ஷேக் முஹம்மது யூசுபி ஹள்ரத் அவர்கள் 30.09.23 அன்றும்,

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் கோட்டை பள்ளிவாசலின் மேனாள் செயலாளர் மர்ஹூம் கே.காஜா மைதீன் (ரஹ்) அவர்களின் அன்பு மகனார் ஜனாப் கே.கே.ரபீக் ராஜா அவர்கள் 05.10.23 அன்றும்,

மதுரை (கயத்தாறு) அல்ஹாஜ் மர்ஹூம் ச.கா.அமீர் பாட்சா (ரஹ்) அவர்களின் அன்பு மகளார் அல்ஹாஜ்ஜா பஸரியா காசிம் அவர்கள் 08.10.23 அன்றும்,

இந்திய தேசிய லீக்கின் திருப்பூர் வடக்கு மாவட்ட செயலாளர் மர்ஹூம் அ.அக்பர் அலீ (ரஹ்) அவர்களின் அருமைத் துணைவியார் ஜனாபா சுபைதா அவர்கள் 22.10.23 அன்றும்,

கரூர் மாவட்டம் பள்ளபட்டி சேகாண்டி மர்ஹூம் ஷேக் அப்துல் காதர் (ரஹ்) அவர்களின் அன்பு மகனார் சேகாண்டி அல்ஹாஜ் சித்தீக் அலீ அவர்கள் 28.10.23 அன்றும்,

மதுரை வக்ஃபு வாரியக் கல்லூரியின் மேனாள் முதல்வரும், மதுரை மாவட்ட ஐக்கிய ஜமாஅத்தின் மேனாள் தலைவருமான முனைவர் ஏ.பஷீர் அஹ்மது அவர்கள் 05.11.23 அன்றும்,

மதுரை அண்ணாநகர் ஹஸனாதுல் ஜாரியாத் மஸ்ஜிதில் நீண்ட காலம் இமாமாகப் பணியாற்றிய மவ்லானா மர்ஹூம் ஷேக் அப்துல் காதிர் மஹ்ஸனி ஹள்ரத் (ரஹ்) அவர்களின் அன்பு மகனாரும், வேலூர் அல்பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் அரபு கல்லூரியின் பேராசிரியர் மவ்லானா மவ்லவீ இஹ்ஸானுல்லாஹ் காஷிஃபி ஹள்ரத் அவர்களின் அன்புத் தம்பியும், மதுரை பொதும்பு ஜும்ஆ பள்ளிவாசலின் இமாமுமான சக்கிமங்கலம் மவ்லவீ அமீனுல்லாஹ் தாவூதி ஹள்ரத் அவர்கள் 14.11.23 அன்றும்,

கரூர் மாவட்டம் பள்ளபட்டி மர்ஹூம் ஆட்டுக்கால் முஹம்மது யூசுஃப் (ரஹ்) அவர்களின் அன்பு மகனாரும்,

"A.C.M. செப்பல்ஸ்" உரிமையாளருமான ஜனாப் A.C.M.ஷேக் முஹம்மது அவர்கள் 19.11.23 அன்றும்,

மதுரை கீழச்சந்தைப்பேட்டை பழைய தொழுகைப் பள்ளிவாசலில் நீண்ட நெடிய காலம் இமாமாகப் பணியாற்றிய துலுக்கப்பட்டி மவ்லானா மவ்லவீ ஜலாலுத்தீன் தாவூதி ஹள்ரத் அவர்கள் 20.11.23 அன்றும்,

## வல்ல ரஹ்மானே ! உன்னளவில் சேர்ந்துவிட்டனர்

உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து, அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!

## விதியைப் பொருந்திக் கொள்ள வேண்டும்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"பலமான இறைநம்பிக்கையாளர், பலவீனமான இறை நம்பிக்கையாளரைவிடச் சிறந்தவரும், அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானவரும் ஆவார். ஆயினும், அனைவரிடமும் நன்மை உள்ளது.

உனக்குப் பயனளிப்பதையே நீ ஆசைப்படு. இறைவனிடம் உதவி தேடு. நீ தளர்ந்து விடாதே. உனக்கு ஏதேனும் துன்பம் ஏற்படும்போது, "நான் (இப்படிச்) செய்திருந்தால் அப்படி அப்படி ஆகியிருக்குமே!" என்று (அங்கலாய்த்துக்) கூறாதே.


மாறாக, "அல்லாஹ்வின் விதிப்படி நடந்துவிட்டது. அவன் நாடியதைச் செய்துவிட்டான்" என்று சொல். ஏனெனில், ("இப்படிச் செய்திருந்தால் நன்றாகயிருந்திருக்குமே" என்பதைச் சுட்டும்) "லவ்" எனும் (வியங்கோள் இடைச்) சொல்லானது ஷைத்தானின் செயலுக்கே வழி வகுக்கும்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்

(நூல் : முஸ்லிம் – 5178, 2664)

# வாசகர் வட்டம்

இனி நம்முடைய முதல் துஆவே பலஸ்தீன மக்களுக்காக இருக்கட்டும். பெருமைக் குரிய பலஸ்தீனர்களை யாரும் சிறுமைப்படுத்த முடியாது. சுய மரியாதைப் போராட்டம் அவர்களுடையது.



தங்களது குர்ஆனின் குரல், சமுதாயத்தில் மார்க்க விழிப்புணர்வை மேலும் வளர்க்க துஆ செய்கிறோம்.

**பஷீர் அஹமது,**
மாட்டுத்தாவணி
பள்ளிவாசல் செயலாளர்,
**மதுரை.**

குர்ஆனின் குரல் கொக்கரக்கோ எனக் கூவும் சேவல்! அதைப் படிக்க மனதில் ஆவல்!

"தத்துவக்கவிஞர்" **இ.பதுருத்தீன்,**
**சென்னை – 81.**

இனிய இந்தோனேசியாவின் மேடான் பள்ளிவாசல் அட்டைப்படம் அழகோ அழகு! எந்தப் புத்தகத்திலும் காண முடியா காட்சியாகும்! தமிழ் முஸ்லிம்கள் கொடுத்து வைத்தவர்கள்.




மவ்லவீ ஹாஃபிழ் பி.இஸட். பரக்கத் அலீ பாகவி எழுதிய "பழிக்குப் பழியிலே மக்களுக்கு நிம்மதி!" என்ற கட்டுரையைக் கண்டேன். பழிக்குப் பழியை எவ்வாறு அணுக வேண்டும் என்பதை அழகாக இஸ்லாம் போதிக்கிறது என்பதை தெரிந்து கொள்ள உதவியது.

ஆயுள் சிறைவாசிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற தலையங்கம் அரசாளுபவர்களுக்கு நெத்தியடியாய் இருந்தது.

ஜம்பை ஜப்பார் ஹள்ரத்தின் "நம் சந்ததிகளின் எதிர்காலம்" என்ற கருத்தில் உண்மையான ஒற்றுமையை எடுத்துக் காட்டிய விதம் அருமை!

தென்காசி மஸ்ஊது எழுதிய நவீன முல்லா நல்லவிதமான நகைச்சுவையை வழங்கியது.

"தத்துவக்கவிஞர்" இ.பதுருத்தீனின் கவிதை கற்கண்டாய் இனித்தது.

"சுவனம் அடையுங்கள்" என்று அல்ஹாஜ் மீசல் பி.எம்.அபூபக்கரின் கவிதை முத்தாய், மணியாய் பிரகாசித்தது.

புதுமடம் ஹலீம் எழுதிய "ஒன்றிய அரசின் அச்சம்"

இராணி வேலுநாச்சியார், ஹைதர் அலீ, திப்புசுல்தான் பெருமைகளை ஒருபடி உயர்த்திக் காட்டியது அருமை!

எம்.ஜே.அன்வரி "என் நெஞ்சைத் தொட்டவை" என்ற கட்டுரையில் சிறுபெண்ணால் சிறப்படைந்த விதம் இனிமையாக இருந்தது.

கொடிக்குக் காயோ, மரத்துக்குப் பழமோ பாரமாகத் தெரியாது!

குர்ஆனின் குரலைப் படிப்பவர்களுக்கு துன்பங்கள் நெருங்காது என்பது உண்மை!

அ. செய்யது முஹம்மது,
வேடசந்தூர்.

மவ்லானா ஜம்பை ஜப்பார் ஹள்ரத் "நம் சந்ததிகளின் எதிர் காலம்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில், குர்ஆன் ஆயத்தை குறிப்பிட்டு எழுதியிருந்தவை அனைத்தும் அருமை! சிந்திக்கத் தக்கவை. 73 கூட்டங்கள் என்ற விபரம் உண்மை. இப்பொழுதே 10 குடும்பங்கள் கொண்ட மஹல்லாவில் 13 - 14 ஆலோசனைகள். பொதுக் காரியங்கள் ஒத்துப் போக இயலாத சூழ்நிலை. மீலாது விழா ஆரம்பித்து பள்ளியில் தொப்பி அணிவது பற்றி அனைத்திலும் வேற்றுமை கருத்து. அதனால் பிரிவு. இதனால் "ஒன்றுபட்ட மக்களுக்கே என் உதவி கிடைக்கும்" என்ற இறை வசனத்திற்கு பாத்தியப் படாதவர்களாக ஆகின்ற நிலை. இந்நிலை மாற அல்லாஹ் போதுமானவன்.

"நபி (ஸல்) அவர்கள் தடுத்தவைகள்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில், 25 பாயிண்ட்களும் என்றென்றும் நினைவில் கொள்ளத்தக்கவை. குறிப்பாக வெள்ளிக்கிழமை இமாம் குத்பா ஓதும்போது பேசாமல் இருப்பதும் ஓர் இபாதத்து. ஆனால் இது பெரும்பாலும் கடைபிடிக்கப்படுவதில்லை.

கவிஞர் பதுருத்தீன் அவர்களின் "தொழுவோம் நிலையாய்" என்ற கவிதை நல்ல கருத்தாழமிக்கதாக உள்ளது. ஈமான் கொண்டவர்களின் குறைவான அமல் இன்று தொழுகையாகவே உள்ளது. அதுவும் வருடாந்திர - வாராந்திர தொழுகையாளிகள் ஏராளம். நிலைமை சீர் பெற வேண்டும்.

பா. ஹாஜி முஹம்மது.
சேந்தமங்கலம்.

**குர்ஆனின் குரலின் விற்பனை முகவராக உங்களையும் ஈடுபடுத்தி முழு உம்மத்தும் ஹிதாயத் பெற வழி செய்யுங்களேன்.**

# "பாரதீய ஜனதா தோற்க வேண்டும்" என்ற சிந்தனை ஏன்?

மவ்லானா அல்ஹாஜ் அஷ்ஷைக்
**முஹம்மது முஹ்யித்தீன்** மதனீ

காந்தியவாதிகள், பாரதீய ஜனதா தோற்க வேண்டும் என விரும்புகின்றனர். அம்பேத்கரியவாதிகள், பாரதீய ஜனதா தோற்க வேண்டும் என விரும்புகின்றனர். அரசியல் சட்டத்தை மதிப்ப வர்கள், பாரதீய ஜனதா தோற்க வேண்டும் என விரும்புகின்ற னர். தலித்துகள், பாரதீய ஜனதா தோற்க வேண்டும் என விரும்புகின் றனர். இதர பிற்படுத்தப்பட்ட மக்கள், பாரதீய ஜனதா தோற்க வேண்டும் என விரும்புகின்றனர். சீக்கியர்கள், பாரதீய ஜனதா தோற்க வேண்டும் என விரும்புகின்றனர். முஸ்லிம்கள், பாரதீய ஜனதா தோற்க வேண்டும் என விரும்புகின்றனர். கிறிஸ்தவர்கள், பாரதீய ஜனதா தோற்க வேண்டும் என விரும்புகின்றனர்.

இந்துக்கள் (பயங்கரவாத ஆர்.எஸ்.எஸ்., பாரதீய ஜனதா ஆதரவு சிறுகும்பல் தவிர்த்த) மற்றும் நடுநிலை நல்லறிவு மிக்க மக்களும், பாரதீய ஜனதா வீழ்த்தப்பட வேண்டும். நாடு நலம் பெற நல்லாட்சி மலர "இந்தியா" கூட்டணி வெற்றிபெற வேண்டும் என விரும்புகின்றனர்.

ஏனெனில் பாரதீய ஜனதா எல்லாத் துறைகளிலும் தோல்வி அடைந்துள்ளது. தாம் வாக்குறுதி அளித்தபடி

* ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்புகள்.
* பெட்ரோல் ஒரு லிட்டர் 35 ரூபாய்.
* கருப்புப் பணத்தை மீட்டெடுத்தல் வெளிநாடுகளில் இருந்து திரும்பக் கொண்டு வருதல். இதில் எதையுமே நிறைவேற்றவில்லை.

பாரதீய ஜனதா, பண இலாபத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட சுரண்டிக் கொழுக்கும் பண முதலைகளான அம்பானி, அதானி போன்ற குஜராத்'தீய' பெரு முதலாளிகளை மட்டுமே வளர்த்தெடுத்துள்ளது.

பாரதீய ஜனதா ----

* நீதிமன்ற அமைப்பைச் சிதைத்துள்ளது.
* ஊடகங்களை, பத்திரிகைகளை அடிமையாக்கியுள்ளது.
* உலக பசி, பட்டினிக் குறியீட்டில் ஏழைநாடுகளைவிட மோசமான நிலையில் இந்தியாவை வைத்துள்ளது.
* உலக வறுமைக் குறியீட்டில் மோசமான நிலையில் இந்தியாவை வைத்துள்ளது.
* உலக அமைதிக் குறியீட்டில் மோசமான நிலையில் இந்தியாவை வைத்துள்ளது.
* ஜனநாயகத்தைச் சிதைத்து எதேச்சதிகார மன்னராட்சி அல்லது அதிபர் ஆட்சி முறையைப் போன்று இந்தியக் குடியரசை மாற்றியுள்ளது.
* பாரதீய ஜனதா தனக்குள் கிரிமினல்கள், பெண்களைப் பாலியல் வன்புணர்வு செய்யும் காமவெறியர்கள் மற்றும் ஊழல்வாதிகளால் நிரப்பி, அரசியல் அறநெறிகளைச் சிதைத்துள்ளது.
* கேள்வி கேட்கும் உரிமையுள்ள ஊடகங்களிடம் சந்திப்போ, பேட்டிகளோ நடத்தாமல், ஜனநாயகத்தில் ஊடகம் மற்றும் பத்திரிகைகளுக்கான இடத்தை வெற்றிடமாக ஆக்கியுள்ளது.
* நாட்டின் வளத்தை ஒரு சில பணக்காரப் பெருமுதலாளிகள் வசம் வாரிக் கொடுத்துள்ளது.

மற்றவர்களைப் பார்த்து வாரிசு அரசியல் என்று குற்றஞ்சாட்டிக் கொண்டே தங்கள் கட்சியின் தலைவர்களின் மகன்களை, மகள்களை அரசியலிலும், அரசுப் பதவிகளிலும், கிரிக்கெட் வாரியம் போன்ற பதவிகளிலும் வளர்த்து விடுகிறது.

* வரலாற்றைக் காவிமயமாக்கியுள்ளது. கல்வியைக் காவி மயமாக்கியுள்ளது.
* கிரிக்கெட் நடைபெறும் மைதானங்களில் ஜெய் ஸ்ரீராம் எனக் கூச்சலெழுப்பச் செய்து, அதைக் காவிமயமாக்கியுள்ளது.
* திட்டமிடாமல் திடீரென ஓர் இரவில் பண மதிப்பிழப்பு நடவடிக்கையை அறிவித்து, அதன் மூலம் பல குழப்பங் களை, பல உயிரிழப்புகளை, பல வலிகளை, பல வேதனை களை ஏற்படுத்தியது. (அதைப் பின்னால் நியாயப்படுத்த முயற்சித்து தோல்வியும் கண்டது).

கொரோனா காலத்தில் அதுபற்றி முன்கூட்டி ராகுல்காந்தி போன்றோர் பலமுறை எச்சரித்தும், அப்போது அமெரிக்க

ஜனாதிபதி டிரம்புக்கு குஜராத்தை சுற்றிக் காண்பிப்பதிலேயே பிரதமர் மோடி கால விரையம் செய்தபின், திட்டமிடாமல் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து பல தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள், உணவுப் பொருள் உற்பத்திக் கூடங்கள் மூடப்பட்டு, அதன் மூலம் பயங்கரக் குழப்பங்களை ஏற்படுத்தியதுடன், ஏழைப் புலம் பெயர் தொழிலாளர்கள் பசி பட்டினியுடன் குடும்பம் குடும்பமாக ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்கள் நடந்தே சென்ற அவலத்தை இந்நாடு கண்டது.

அதே தொழிலாளர்களில் பாதி பேர் தம் ஊருக்குத் திரும்பச் செல்ல முயன்றபோது, இருமடங்கு கட்டணத்துடன் "ஷிரம் எக்ஸ்பிரஸ்" என்று இரயிலுக்குப் பெயரிட்டு, அதே நேரத்தில் அவர்களுடைய பணத்தைக் கொள்ளையடித்தது.

கொரோனா காலம் முடிந்தவுடன், அந்தத் தொழிலாளர்கள் தாம் பணிபுரிந்த மாநிலங்களுக்குத் திரும்ப முயன்றபோது, அக் கட்டணத்தை ஒன்றிய அரசே ஏற்கும் என முதலில் அறிவித்து விட்டு, பிறகு எந்த மாநிலத்திற்கு வேலைக்குச் செல்கிறார் களோ அந்த மாநிலமே ஏற்க வேண்டும் என பல்டியடித்தது.

* அதிகரிக்கும் வன்முறையை, பதற்றத்தைத் தூண்டும் வெறுப்பு அரசியலின் கொடிய பேச்சுகள்.
* வன்முறைக் கொலைகள், கும்பல் கொலைகள்.
* பயங்கரக் கலவரங்கள்.
* சிறுபான்மை மக்கள் தாக்கப்படுதல்.
* தீவிரவாதி நாது ராம் கோட்சேயை வெளிப்படையாக நாட்டுப் பற்றாளர் - தேசபக்தர் எனச் சொல்லி புகழ்வது, ஆராதிப்பது.
* நாட்டுக்குத் தடுப்பூசி தேவையாக இருந்த சமயத்தில், அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த கொடுமை.
* ஓடும் இரயிலில் முஸ்லிம்களைத் தேடித் தேடி துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு, இறந்த முஸ்லிம் ஒருவரின் சடலத்தின் மீது கால் வைத்துக் கொண்டு, "இங்கு மோடிக்கும், யோகிக்கும் மட்டும்தான் எல்லோரும் வாக்களிக்க வேண்டும்" என 'வீர' (?) வசனம் பேசுவது.

புல்டோசரை வைத்து பேரணிகள் நடத்தியது மட்டுமின்றி, தேர்தல் நேரத்திலும் புல்டோசருடன் பேரணிகள் செல்வது!

பன்னாட்டு அரங்குகளில் இந்தியாவுக்குப் பெருமை தேடித்தந்த மல்யுத்த வீராங்கனைகள், ஒரு பாரதீய ஜனதா எம்.பி.

தங்கள் மீது நடத்திய பாலியல் அத்துமீறல்களுக்காகத் தெருக்களில் இறங்கிப் போராட வேண்டிய துரதிர்ஷ்ட நிலை ஏற்பட்டது. அந்தப் போராட்டத்தின்போதும் பாரதீய ஜனதா கட்சியினர் டில்லி காவல்துறை, சங்கி மீடியா ஊடகங்கள் என அனைத்தும் அவர்களைக் கொச்சைப்படுத்தின.

மூன்று கருப்புச் சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் போராடியபோது, அவர்களை நாட்டுக்கு எதிரானவர்கள், தேச துரோகிகள் என்றெல்லாம் அடையாளப்படுத்தியது. ஓர் ஒன்றிய அமைச்சர் போராடும் விவசாயிகளைக் குறித்து கேவலமாகப் பேசியதால் அவருக்கு எதிராக அமைதியாக கோஷமிடச் சென்ற விவசாயிகள் மீது அந்த ஒன்றிய அமைச்சரின் மகன் காரை ஏற்றிக் கொன்றது.

மணிப்பூரில் இரு பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்துச் சென்றது மற்றும் அங்கு நடந்த பயங்கர வன்முறைக் கலவரங்கள்.

மேலும்...

நாம் நமக்காகவும், நம் நாட்டின் நலனுக்காகவும் நம் நாட்டின் அரசியல் சட்டத்தை வெறுப்பவர்கள் தோற்கடிக்கப்பட வேண்டுமென்பதை உறுதி செய்ய வேண்டும்.

2024இல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் வெல்ல வேண்டும்.

2029இல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் மட்டுமே வெல்ல வேண்டும்.

2034இல் மீண்டும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் மட்டுமே வெல்ல வேண்டும்.

உங்களைச் சுற்றியுள்ள பல நண்பர்களிடம் இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை நாட்டுப்பற்று மிக்க வாக்காளர்களாக உருவாக்கினால் மதச்சார்பற்ற ஜனநாயக இந்தியா உருவாகும்.

நமது குழந்தைகள் மற்றும் எதிர்கால சந்ததியினர் எல்லோரையும் அரவணைத்து ஒற்றுமையுடன் செயல்படும் இந்தியாவைக் காண வேண்டும்.


நாம், நம் கடமையைச் செய்ய வேண்டும்.

நாம், நம் குழந்தைகளுக்கு எதிர்கால சந்ததியினருக்கு, பாதுகாப்பான சமூகத்தை, பாதுகாப்பான வாழ்வை, பாதுகாப்பான எதிர்காலத்தை வழங்க வேண்டும்.

# தாஜ் டிரேடர்ஸ்

**சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்**


எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் விடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்








No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001


Touches Your Heart®
Remains Forever ...
PMP TEX INDIA
ESTD 1968
Ulama®
LUNGIES * VESTS * BRIEFS
OUR PRODUCTS
Follow us on
ULAMA FASHION
Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, : 81220 14050 : 78450 64050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made In India